ஜூன் 2023

படை 01 அணி 01

காலாண்டு இதழ்

# சீர்மை

மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு



ஜூன் 2023

# சீமை

மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு

SEEMAI - සීමෙ

படை 01 அணி 01


தொடர்புகளுக்கு

076 6626754 /077 2532296
077 2822449 / 077 1193900

மின்னஞ்சல்

seemaimagazine@gmail.com



ஆசிரியர்

சதீஸ் செல்வராஜ்

ஆலோசகர் குழு

கனேஷன் திலீப்குமார்
கிட்ணன் செல்வராஜ்
ரிச்சர்ட் ரொஹான்


மலையகத்தின் சிந்தனை ரீதியான புத்தெழுச்சிக்கு வலுசேர்க்கும் முயற்சியில் இணைவோம். நமது சிந்தனைகளும் உலகை வளப்படுத்தட்டும். மக்கள் படைப்பாளர்களே இந்தக் களம் உங்களுடையது.



# சீமையின் முதல் பெரட்டு

**அனைவருக்கும் சீமையின் அன்பான வணக்கம்!**

முதல் நாள் உடல் தேய உழைத்து அலுப்பில் சாய்ந்த உழைக்கும் பட்டாளம் தம் விழிகளில் உறக்கம் ஒட்டிக்கொண்டிருக்கும் போதே விடிந்தும் விடியாததுமாய், அன்றைய நாளும் உழைப்பதற்கு தொழிற்சாலை சங்கு சத்தத்தினைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்து தயாராகி, வெள்ளைதுரைமாரும் கங்காணிமாரும் இடும் கட்டளைக்காய்க் காத்திருக்கும் பெரட்டுக்களத்திலும் சீமையின் இந்தப் பெரட்டுக்களம் முற்றிலும் வேறுபட்டது.

காலங்காலமாய் வஞ்சிக்கப்படும், ஓரங்கட்டப்படும், ஒட்டச் சுரண்டப்படும் சாதாரண மலையக சமூகத்தின் பாடுகளை உரக்க உரைப்பதற்கும், சிந்தனை ரீதியான புத்தெழுச்சியை காண்பதற்கும், அதனூடு மலையக சமூகத்தின் உண்மையான விடுதலையையும் வெற்றியையும் பெற்றுக் கொள்வதை சாத்தியப்படுத்துவதற்குமே இந்தச் சீமையின் பெரட்டுக்களம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்பார்ப்பு சீமை இதழ் முழுவதும் விரியும்.

17, 18 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவை காவு வாங்கிக் கொண்டிருந்த கொடும் பஞ்சத்தில் இருந்து உயிர் பிழைக்க பாவப்பட்ட சனம் உலகின் புதுப்புச் சீமைகளை நோக்கி கூலி கொத்தடிமைகளாகப் புறப்பட்டனர். அயல்நாடுகளை தமிழ்ச் சனம் “சீமை” என்றே சொல்லி வைத்தது. தாம் செல்லப்போகும் சீமையில் செல்வ செழிப்புமிக்க பகுதிகளில் குடியேறி உழைத்து உழைப்பால் உயரப் போகிறோம் என்றே அந்த மக்கட் கூட்டம் எண்ணிக்கொண்டிருந்தது. இவ்வாறு கற்பனை செய்வதற்கும், கனவு காண்பதற்கும் ஏற்றவாறான பொய்ப் பிரச்சாரங்களையே கங்காணிகள் பரப்பினர். இவற்றை நம்பி அதுவரை தாம் கண்டிறாத சீமைகளை நோக்கியெல்லாம் கப்பல்களில் ஏறி மக்கள் கூலிக் கொத்தடிமைகளாகப் புறப்பட்டுச் சென்றனர். அவ்வாறுதான் மலையக சமூகத்தின் மூத்தக்குடிகள் பஞ்சம் பிழைப்பதற்கு “சிலோன்” என்ற சீமைக்கும் வந்து சேர்ந்தனர். அயல்நாடுகளை மட்டுமல்லாது, வளம் மிக்க பிரதேசங்களையும் அந்த மூத்தக்குடிகள் சீமையென்றே சொல்லி வைத்தனர். கங்காணிகளின் பிரச்சாரமும் கண்டிச் சீமையைப் பற்றியதாய் இருந்தது. இது ஒட்டுமொத்த மலையகத்தின் குறியீடாகவிருந்தது. தமது எதிர்காலத்தை தேடி கண்டிச் சீமைக்குப் புறப்பட்டு வந்த சனம் இது சீமையல்ல! சிறைச்சாலை என்பதை வெகு விரைவிலேயே அறிந்துகொண்டது. வெள்ளையனின் காலனித்துவச் சிறையில் அடைப்பட்டு உழைத்து சமாதியும் ஆகியது. வெள்ளையனுக்கு உழைத்துக் கொட்டுவதற்காகவே தாம் பிறந்ததுபோன்ற பிரம்மையில் அந்தச் சனம் வாழ்ந்துகொண்டிருந்தது. தினமும் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்தது.

“பாதையிலே வீடிருக்க

பழனிசம்பா சோறிருக்க

எரும தயிரிருக்க

ஏன்டி வந்த கண்டிச்சீமை” என்று பாடியும் புலம்பியது.

இந்தக் கூலி உழைப்பாளர்களின் பெறுமதி மிக்க உழைப்புச் சக்தியை உறுஞ்சி வெள்ளையர் தேசம் செழிப்புற்றது போலவே இலங்கையும் செழிப்புற்றது. ஆனால், இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தக் கையோடு அதிகாரத்தில் இருந்த அரசியல் தலைவர்கள் மலையக சமூகத்தை நட்டாற்றில் விட்டனர். உரிமைகளை மறுத்தனர். உடைமைகளைப் பறித்தனர். அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்டனர். “அந்நியர்” என்று முத்திரையைக் குத்தி இலங்கையில் இருந்து அந்த இலட்சக்கணக்கான மக்களை விரட்டியடிப்பதற்கே கங்கணங்கட்டிக் கொண்டு செயற்பட்டனர். அதன்பின் மிச்சப்பட்டவர்கள் மலையக பிராந்திய அரசியல் மற்றும் தொழிற்சங்கம் என்ற அடிப்படையில் முடக்கப்பட்டனர். சிந்தனை ரீதியாக முடமாக்கப்பட்டனர். காட்டிக்கொடுக்கப்படுகின்றனர். இவ்வாறான வரலாற்றை கடந்தே 200 ஆவது ஆண்டை நாம் தொட்டிருக்கிறோம். எமது மூத்தக் குடிகள் இலங்கை வரும்போது எதிர்காலம் பற்றி எவ்வாறான கனவுகளை கண்டனரோ அவை இன்றுவரையும் கனவுகளாகவே இருக்கின்றன. காணி நிலமற்ற, ஒழுங்கான வீடமைப்புத் திட்டமற்ற, போதிய ஊதியமற்ற, அடிப்படை வசதிகள் அற்ற வாழ்க்கையையே பெரும்பாலான மலைய மக்கள் வாழ்கின்ற அவலம் இன்னும் தொடர்கிறது. காலாவதியாகிக் கொண்டிருக்கும் தோட்டப் புறங்களும் கூட இந்த மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இம்மக்களை மலைகளில் இருந்து விரட்டியடிக்கவும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. ஆக, அநீதிக்கு எதிரான, உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் இன்னமும் மலையகத்தில் முற்றுப்பெற்றுவிடவில்லை. மலையகச் சீமையின் போராட்டங்களை வெற்றிக்கொள்வதற்காக “சீமை” இதழ் முன்னணி வகிக்கும். மக்களுக்கான சீமையினை நிர்மாணிக்க போராடும்.

# இம்மாத சீமையில்


03 சீமையின் முதல் பெரட்டு
ஆசிரியர்

05 இனக்கலவரங்களுக்குப் பதில் சகோதரத்துவம்
ருத்ரரூபன்

09 மலையகம் 200
கிட்ணன் செல்வராஜ்

12 யார் இந்த மலையகத் தமிழர்கள்?
கண்ணன் மதுஷா

15 காலம் பிந்தியே நகர்கிறது !
கல்கியூர் நிரோஷன்

17 படிக்கத் தெரிந்த ஒரு தொழிலாளியின் கேள்விகள் - பெர்டோல்ட் பிரெக்ட்
தமிழில் : ச.சுப்பாராவ்

18 வெள்ளத்தில் திண்டாடும் மூன்றுகோறளை
ஸெ.தர்ஷன் ஸ்ரீநாத்

20 அவள்
கிருபானி நிரோஷா

21 பிஜித் தீவின் கரும்புத் தோட்டத்து கிர்மிட்டியர்கள்!
சதீஸ் செல்வராஜ்

27 தோழர் மல்லிகை சி.குமார்
மா. ஜீவன்

30 நேற்று ஹிசாலினி இன்று ராஜகுமாரி நாளை?
A.R.றொஹான்

34 கனவுகள் சிதைக்கப்பட்ட புலம்பெயர் பணிப்பெண்கள்
மஹேஸ்வரி விஜயனந்தன்

39 முத்துமணியை கண்ணீர்த் துளியாக்கிய அரசியல் - பிரியதர்ஷன தயாரத்ன
தமிழில் : மகேந்திரன் கிறிஸ்டோபர்

43 சோவியத் புரட்சி மலையக இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம்
சதீஸ் செல்வராஜ்

50 மலையக மக்களும் அவர்தம் அரசியலும்
எம். ராமதாஸ்

56 உன்னால் முடியும்
கிட்ணன் செல்வராஜ்

# இனக்கலவரங்களுக்குப் பதில் சகோதரத்துவம்




**ருத்ரரூபன்**

இலங்கையின் அரசியற் களமும் மக்களும் தற்போது மிக அமைதியாக இருப்பதுபோல தோன்றினாலும் அது நிஜம் கிடையாது. பெரும் புயலுக்கு முன் பேரமைதி நிலவுவது போன்ற சூழ்நிலையே தற்போது இலங்கையை மூடியிருக்கிறது. கோட்டாபய ராஜபக்ஸ அதிகாரத்திற்கு வந்தபின்பு தேர்தலுக்கு முன்பு தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததைக் கண்டு மக்கள் அதிருப்தியுற்றிருந்தனர். குறிப்பாக, ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட சூத்திரதாரிகள் அடையாளங் காணப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று மக்கள் எதிர்பார்த்தனர். நாட்டின் தேசிய பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் என்று எண்ணினர். ஊழல், மோசடிகள் இத்தோடு ஒழிந்துபோகும், இனி இராணுவத்துள் இருக்கும் கட்டுப்பாடுகளைப் போலவே நாடு சீர்ப்படுத்தப்படும் என்று நம்பினர். ஆனால், 69 இலட்ச வாக்குகளுக்கு முரணான அரசியற் பயணத்தையே கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. அதன்போது மக்களும் கோட்டாபய எனும் நாமத்துக்கு அச்சப்பட்டு அமைதியாகவே இருந்தனர். ஆனால், அது புயலுக்கு முந்திய பேரமைதியாகவிருந்தது. பின்னர் சகல பக்கத்திலும் பல நெருக்கடிகள் மக்களை இறுக்க ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அவர்களை விரட்டியடித்தனர். ஆனாலும், ராஜபக்ஷக்கள் ஓடிச்சென்று ரணில் விக்ரமசிங்கவின் பின்னால் ஒளிந்துகொண்டனர். அதுப்போல, ராஜபக்ஷக்களுடன் உறவு கொண்டாடிய பலரும் ரணிலை நாடினர். பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டிருந்த அவர்கள் ரணிலை ஜனாதிபதியாக்கினர். ரணில் விக்ரமசிங்க ராஜபக்ஷ உள்ளிட்ட மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கும்பலின் ரட்சகனாக மாறிப்போனார். அவர் ஜனாதிபதியாகிய பின்னர் இப்போதும் அமைதி நிலவுவது போன்ற ஒரு மாயை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதுவும் தற்காலிகமானதே.

அரசியல் மாற்றம் ஒன்று தேவையென்று இலங்கை மக்களில் பலர் முடிவு செய்துவிட்டபோதிலும் அதற்கான அவகாசத்தை வழங்காது ரணில் விக்ரமசிங்க தற்போது செயற்பட்டு வருகிறார். தேர்தல்களை பிற்போடுவதும் இதனால் ஆகும். ஏனெனில், மக்களுடைய ஆணை தமக்கு எதிராக அமைந்துவிட்டால் தாம் அரசியல் அஸ்தமனத்தை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று அச்சப்பட்டுள்ளனர். ஆனாலும், ஒரு தரப்பினர் ரணில் விக்ரமசிங்கவினால் இந்த வருட இறுதிக்குள் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்று எண்ணுகின்றனர்.

**69 இலட்ச வாக்குகளுக்கு முரணான அரசியற் பயணத்தையே கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. அதன்போது மக்களும் கோட்டாபய எனும் நாமத்துக்கு அச்சப்பட்டு அமைதியாகவே இருந்தனர். ஆனால், அது புயலுக்கு முந்திய பேரமைதியாகவிருந்தது. பின்னர் சகல பக்கத்திலும் பல நெருக்கடிகள் மக்களை இறுக்க ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அவர்களை விரட்டியடித்தனர். ஆனாலும், ராஜபக்ஸக்கள் ஓடிச்சென்று ரணில் விக்ரமசிங்கவின் பின்னால் ஒளிந்துகொண்டனர். அதுப்போல, ராஜபக்ஷக்களுடன் உறவு கொண்டாடிய பலரும் ரணிலை நாடினர். பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்டிருந்த அவர்கள் ரணிலை ஜனாதிபதியாக்கினர். ரணில் விக்ரமசிங்க ராஜபக்ஷ உள்ளிட்ட மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கும்பலின் ரட்சகனாக மாறிப்போனார்.**

அதிலொரு பிரிவினருக்கு ரணில் அதிகாரத்திற்கு வந்தபோதிருந்த நம்பிக்கை தற்போது இல்லாமல் போயுள்ளது அல்லது குறைவடைந்துள்ளது. இருந்தாலும், அரசாங்கத்தை சார்ந்து இயங்கும் ஊடகங்கள் உண்மை நிலவரங்களை வெளிக்காட்டாது அரசாங்கத்தினை புகழ்ந்து பாடிக்கொண்டிருக்கிறது.

தற்போதும் கூட இலங்கை எனும் வண்டி கடனாலும் மிகை வரியாலும் ஓடிக்கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சிக் கண்டுள்ளது. உற்பத்தி தொழிற்துறைகள் பல மூடப்பட்டுள்ளன. தவிர, கார்மண்ட் உட்பட பல வேலைத்தளங்களில் வேலை நேரம் குறைக்கப்பட்டுள்ளது. பணியாளர்களின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரமும் சந்தையும் சுருக்கப்பட்டுள்ளதனால் கொடுக்கல் வாங்கல்கள் குறைவடைந்துள்ளன. இலங்கையின் சந்தைமீது நம்பிக்கை வைக்கமுடியாத சூழல் வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைப்படி, மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த பல சலுகைகள் துண்டிக்கப்பட்டு வருவதாலும் மீளவும் வரியை அதிகரிக்க முற்படுவதாலும் மக்கள் மத்தியிலும் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது. பெற்றுக்கொள்ளும் வருமானத்தில் வாழ்க்கையை சமாளிக்க முடியாத நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மின்கட்டணம், தண்ணீர்க் கட்டண அதிகரிப்பு மற்றும் உணவுப் பொருட்கள், ஔடதங்கள், கற்றல் உபகரணங்களின் விலையேற்றம் காரணமாக சாதாரண வருமானம் பெறும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையில் மலையக மக்களின் நிலைமை குறிப்பாக தோட்டப்புற மக்களின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது. இருந்தாலும், இந்நிலைமைகளை சமாளித்து வாழ்க்கையை கொண்டுநடத்த முனைகின்றவர்களாக தோட்டப்புற மக்கள் இருக்கின்றனரே தவிர, இந்நிலைமையை மாற்றியமைக்க எந்தளவிற்கு சிந்திக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகவிருக்கிறது. எவ்வாறாயினும், முழு இலங்கை நிலவரத்தை நோக்குகையில் நிலவும் அமைதி தற்காலிகமானவொன்று என்பது உறுதியானது.

அதனால்த்தான், பொருளாதாரப் பிரச்சினை மக்களின் பிரதான பிரச்சினையாக இருக்கும் வரையில் அது தமது இருப்புக்கு ஆபத்து என்பதை அறிந்துள்ள ஆட்சியாளர்கள் மக்களை குழப்பிவிடுவதற்கு பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். அதன்படி, அவர்கள் பிரதானமாக தம் கைகளுக்கு எடுத்திருக்கும் ஆயுதம்தான் இனவாதமும் மதவாதமும் ஆகும்.

1977 இல் ஜே.ஆர். ஜயவர்தன பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்தப் பின்பு அந்த வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றவில்லை. அதனால், மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. அதனைக் கட்டுப்படுத்த 77 இனக்கலவரம் தோற்றுவிக்கப்பட்டது. இதன்போது, தமிழர்களின் சொத்துக்குள் கொள்ளையடிக்கப்பட்டன. கொள்ளையடித்தலே அந்தக் கலவரத்தின் பிரதான குறிக்கோளாகவிருந்தது. அதுப்போலவே, 1981 இல் யாழ் நூலகத்தை எரித்து, அதனூடாக காடையர்களை ஏவி யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் கள்ள வாக்குகளை போட்டும் அத்தேர்தலில் ஜே.ஆரினால் ஜெயிக்க முடியாது போக அவர் தமிழ் மக்களுக்கு எதிரான போக்கினை கடைப்பிடித்தார். ஏனென்றால், அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அதிகார போதையில் சுற்றிக்கொண்டிருந்தார். ஜூலைக் கலவரம் தோற்றுவிக்கப்படுவதற்கு முன்பு பேராதனை

பல்கலைக்கழகத்தில் ஒரு கலகத்தை உருவாக்க அத்திவாரம் போடப்பட்டுள்ளது. அதனூடாக, கண்டி நகரத்தில் தமிழர்களுக்கு எதிரான கலவரத்தை உருவாக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதாவது, பல்கலைக்கழகத்தில் இருந்த பெயர்ப் பலகைகளில் இருந்த சிங்கள எழுத்துக்கள் மீது ஒரு கும்பல் தாரினை பூசியுள்ளது. அந்நேரம் அங்கு வந்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் மீது அந்தப் பலியைப் போட்டு கண்டி நகரத்தில் கலவரத்தை ஏற்படுத்தவே அந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்த சதி முறியடிக்கப்பட்டது. இருப்பினும், இரண்டு வாரங்களின் பின்னர் ஜூலைக் கலவரம் பற்றவைக்கப்பட்டது. இந்தப் போர்வையில் ஜே.ஆரின் ஆட்சிக்கு சவாலாகவிருந்த ஜே.வி.பி., கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜ கட்சி ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகள் தடைசெய்யப்பட்டன.

மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு ரணில் – மைத்திரி ஆட்சியமைத்த பின்னரும் நாட்டில் பல கலவரங்கள் உருவாக்கப்பட்டன. குறிப்பாக முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாவனெல்லையில் புத்தர் சிலை உடைப்பு, மருத்துவர் சாபியின் விவகாரம், மலட்டு கொத்து, திகன கலவரம் என்று இந்த விடயம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு



அது ஈஸ்டர் தாக்குதலில் முடிவடைந்தது. இதன் பின்னணியில் ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். தற்போதும் நாட்டில் அவ்வாறான நிலைமையே ஏற்பட்டிருக்கிறது. ஆங்காங்கே மதவாதத்தையும் இனவாதத்தையும் உசிப்பிவிடும் போக்கை அரசாங்கத் தரப்பு முன்னெடுத்து வருகிறது. மாமன் ஜே.ஆரின் வழியையே மருமகன் ரணில் விக்ரமசிங்க பின்பற்றுவது தெளிவாகியிருக்கிறது. இந்த விடயம் குறித்து மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

**நாட்டில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் உருவாக்கப்பட்ட போதிலெல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மலையக மக்கள். உடைமைகளையும் உயிர்களையும் இழந்தனர் பெரும்பான்மை சிங்கள மக்களை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வன்னிப் பிரதேசத்தை நோக்கியும் தென்னிந்தியாவை நோக்கியும் இடம்பெயர்ந்தனர். ஆக, நாட்டில் தோன்றுகின்ற பிரிவினைவாத சதிகளை முறியடிப்பதற்கு வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வருகின்ற சமூகமாகிய மலையக மக்கள் முன்னணியில் இருக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் இறங்க வேண்டும்.**

நாட்டில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் உருவாக்கப்பட்ட போதிலெல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மலையக மக்கள். உடைமைகளையும் உயிர்களையும் இழந்தனர். பெரும்பான்மை சிங்கள மக்களை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வன்னிப் பிரதேசத்தை நோக்கியும் தென்னிந்தியாவை நோக்கியும் இடம்பெயர்ந்தனர். ஆக, நாட்டில் தோன்றுகின்ற பிரிவினைவாத சதிகளை முறியடிப்பதற்கு வன்முறைகளால் பாதிக்கப்பட்டு வருகின்ற சமூகமாகிய மலையக மக்கள் முன்னணியில் இருக்க வேண்டும். ஆளும் வர்க்கத்தின் பிரிவினைவாத திட்டத்தை நிர்மூலமாக்கி தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் இறங்க வேண்டும். இலங்கையில் உருவாக்கப்படுகின்ற இனக்கலவரங்களில் சிறுபான்மை மக்களே கடுமையான பாதிப்புகளை சந்திக்கின்றனர். இதனால் கிடைக்கும் இலாபத்தால் ஆட்சியாளர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க முயற்சிக்கின்றனர். இந்நிலைமைகளுக்கு முடிவுகட்ட வேண்டும். சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்கான பாதையினை சமைக்க வேண்டும்.



பகைமையால் வளங்குன்றச் செய்வித்த மண்ணில்...

மனித மனங்களை அரணாக அமைத்து

மனித மனங்களால் விதானம் கட்டி

ஆயிரக்கணக்கான பிரார்த்தனைகளுக்கு மத்தியில்

சமத்துவம் நிறைந்த நிலத்தை அமைத்திட....

நேற்று, இன்றுபோல் நாளையும் தோள்கொடுக்கும்

அன்பான சகபாடிகளே,

நீர்தான் எமது

சதாகால வழிபாட்டிடம்...

ஒரே சூரியனின் கீழ்

ஒரே சந்திரனின் கீழ்

ஒரே பெருநிலத்தில்...

விஷ்மி, சரோஜா

றெஹான், பாத்திமா

வாருங்கள் - மலர்ந்திடுவோம்

நாங்கள் ஒரே பூக்கொத்தில்...

- வெண்புறா

# மலையகம் 200



கிட்ணன் செல்வராஜ்

**2023 ஆம் ஆண்டை இந்திய வம்சவளி மக்கள் மலையகம் 200 என முத்திரை குத்தி மிகவும் கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றார்கள். இலங்கையில் வாழுகின்ற பேருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வியலை பார்க்கின்ற போது கோலாகலமாகக் கொண்டாடவேண்டிய ஒன்றல்ல. ஆனால், மலையக மக்களை பலியாடுகளாகப் பயன்படுத்தி சில அரசசார்பற்ற அமைப்புகளும், ஆளும் வர்க்கமும் திரிபுபடுத்தி மலையகம் 200 என மகுடம் சூட்டி வயிறு பிழைப்பது கவலைக்குரியது. மலையக வரலாறு என்பது இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட வேண்டிய ஒன்று. ஒரு 100 வருடம் இருண்ட யுகம். அந்த 100 வருட வரலாற்றை எழுதி குறிப்பாக வைத்தவர்கள் வெள்ளைக்கார துரைமார்கள். அந்தக் குறிப்புகள்தான் பிற்காலத்தில் வரலாறாக எழுதப்பட்டுள்ளது. அந்தக் குறிப்புகள் இரத்தக் கண்ணீர் கலந்த கதையாகும். அவ்வாறான வரலாற்றை கோலாகலமாகக் கொண்டாடுவது என்பது வேதைனைக்குரிய விடயமாகும். அந்தவகையில் மலையக மக்களின் வாழ்வியலை திரிபுபடுத்தி கூறுவதென்பது கவலைப்பட வேண்டியதொன்றாகும். கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.**

## 200??!!

1823 ஆம் ஆண்டு தென்னிந்திய மக்கள் ஏமாற்றப்பட்டு கொண்டுவரப்பட்டு பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்கு திணிக்கப்பட்ட காலத்தை வரையறுத்துக் காட்டுவதாகும். அதை அப்படியே பார்ப்போமேயானால் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஒன்று கோப்பி யுகம் மற்றது தேயிலை யுகம்.



கோப்பி 1823 ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்திலுள்ள சிங்கப்பிட்டி என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1867 ஆம் ஆண்டு கோப்பி ஒருவித மஞ்சள் நோய் ஏற்பட்டு அழிந்துபோக 1867 ஆம் ஆண்டு தேயிலை பயிர்ச் செய்கைக்கான பிள்ளையார் சுழி போடப்பட்டு இன்றுவரையும் தேயிலை யுகம் காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

## கண்காட்சி கூடமாக மலையகம்

இந்தக் காட்சிப்படுத்தலைத்தான் ஆளும் வர்க்கம் விற்றுப்பிழைக்கிறது. தேயிலை யுகம் 156 வருடங்களை அண்மிக்கும் போது அது காலவாதியாகிக் கொண்டிருக்கிறது. அதேப்போல் மலையக மக்களின் வாழ்வும் படிப்படியாக காலாவதியாகிக்கொண்டிருக்கிறது. தேயிலை தொழில்துறையோடு மலையகமுகம், மலையக மக்களும் காலாவதியாகும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

## நாட்கூலி

1867 லூல்கந்துரா தோட்டத்தில், ஜெம்ஸ் டெய்லர் என்ற வெள்ளைத் துரையால் தேயிலைக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டு 156 வருடங்கள் கடந்துவிட்டபோதும், 1948 வரை நாட்டையும் தேயிலை தோட்டங்களையும் ஆண்டவர்கள் வெள்ளையர்கள். 1948 வரையும் 81 வருடங்களாக தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகள். 1948 போலி சுதந்திரத்தின் பின் 1972 பெருந்தோட்டங்கள் அரசுடமை ஆக்கும் வரை நாட்டை ஆண்டவர்கள் நம்மவர்கள். தோட்டங்களை ஆண்டவர்கள் வெள்ளையர்கள். 1948 முதல் 1972 வரை அதாவது 24 வருடங்களாகவும் நாட்கூலிகள். 1972 முதல் 1992 வரை தோட்டங்கள் அரச நிறுவனம். தொழிலாளர்கள் 31 வருடங்களாக நாட்கூலிகள். வெள்ளையர்கள் ஆண்டபோதும், அரை சுதந்திரதின் போதும், தோட்டங்கள் அரசநிறுவனமாக இருந்தபோதும், தனியார் நிறுவனமாக இருக்கிறபோதும் தோட்டத் தொழிலாளர்கள் நாட்கூலிகள். ஒரு உழைக்கும் பட்டாளம் 156 வருடங்களாக நாட்கூலிகளாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களாவர். அவ்வாறு எமது சமூகம் இருக்கும்போது மலையகம் 200 களியாட்டம் என்பது கேலிக்கூத்தாகும். நாட்கூலி என்பதில் இருந்து மாத சம்பள முறைக்கான போராட்டதை ஆரம்பிக்க வேண்டும். அங்குதான் மலையகம் 200 தன்னை தலை நிமிர்த்திக்கொள்ளும்.

## காணியும் வீடும்?

இங்கு கொண்டுவரப்பட்ட நாம் குதிரை லாயங்களிலேயே தங்க வைக்கப்பட்டோம். பின்னர் நிரந்தர குடியிருப்பாக அது மாற்றப்பட்டு இன்றுவரையும் வதிவிடமாக ஒப்படைக்கப்பட்டுள்ளன. உலக ஐ.நா. சபை தொடர் குடியிருப்பு வாழ்விடத்தை அதாவது லயத்து முறைமை வீட்டு திட்டத்தை 1952 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரவேண்டும் என்றது. அதன் எதிரொலியாக இலங்கையிலும் பல வீட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் மலையகம் இன்னும் நீட்டி நிமிர்ந்த ஒட்டை லயத்துக்கு முத்தமிட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இன்று பொருத்தமான குடியிருப்பு அவசியத்தை வலியுறுத்தி மலையகம் போராட்டதை ஆரம்பிக்க வேண்டும். அதனோடு 200 வருடங்களாக காணி உரிமை இல்லை. அத்தோடு 1946 ஆம் ஆண்டு வெள்ளையர்களின் ஆட்சியின் போது அன்று காணி அமைச்சராக இருந்த D.S. சேனநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட காணி சீர்திருத்தச் சட்டமுலம் தோட்ட தொழிலாளர்களுக்கான காணி உரிமையை இல்லாமலாக்கியுள்ளது. அந்த சட்டமூலம் இன்னும் உயிரோடு இருப்பதால் மலையக மக்களுக்கு காணி உரிமை முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. மலையகம் 200 காணி உரிமையை வலியுறுத்தி போராட்டதை ஆரம்பிக்க வேண்டும். எனவே, மலையகம் 200 என்பது ஏஸி அறைகளில் காண்பிக்கப்படும் கேலிச்சித்திர

**இலங்கையில் பல வீட்டுத் திட்டங்கள் மேற்கொண்டபோதும் மலையகம் இன்னும் நீட்டி நிமிர்ந்த ஒட்டை லயத்துக்கே முத்தமிட்டுக்கொண்டிருக்கிறது. இன்று பொருத்தமான குடியிருப்பு அவசியத்தை வலியுறுத்தி மலையகம் போராட்டதை ஆரம்பிக்க வேண்டும். அதனோடு 200 வருடங்களாக காணி உரிமையும் இல்லை. மலையகம் 200 என்பது ஏஸி அறைகளில் காண்பிக்கப்படும் கேலிச்சித்திர கண்காட்சியல்ல. மலையகம் 200 என்பதும் 2023 என்பதும் மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பிரவேசமாகும்.**

கண்காட்சியல்ல. மலையகம் 200 என்பதும் 2023 என்பதும் மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான பிரவேசமாகும். அதற்கு அரசியல் ரீதியான அணுகுமுறை அவசியம். தலைமைத்துவம் அவசியம். பாரம்பரிய அரசியலும், தலைமைகளும் 75 வருடங்களாக எம்மை கைவிட்டுள்ளன. எனவே தேசிய அரசியல் நீரோட்டத்துடன் இணைந்து புதிய போராட்ட அரசியலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கான தருணம் தற்போது இலங்கை அரசியலில் தோற்றம் பெற்றுள்ளது. அதுவே மலையகம் 200 ஐ பூஜிக்கும், போசிக்கும்.







**“உன் வாழ்வில் வெறுமை உண்டாக்கியதோ, வறுமை பசி உன்னிடம் சொன்னதோ பணம் தான் பஞ்சத்திற்கு காரணம் என்று, பசிக்காக பணம் பறிக்க எண்ணி விழுந்தாயோடா பாதாளத்தில்”**

“மலையகத் தமிழர்கள்! மலையகத் தமிழர்கள்!!” என்று பல நூற்றாண்டு காலங்களுக்கு முன்பிருந்தே முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், இவர்கள் சரித்திரம் படைத்தவர்களா? சாதனை புரிந்தவர்களா? வீரத் தமிழர்களா? இல்லை பிறரால் வஞ்சிக்கப்படும் தமிழர்களா என்ற விடை தெரியா கேள்விகளுடன் ஒரு தேடல் பயணம்.



கண்ணன் மதுஷா

# யார் இந்த மலையகத் தமிழர்கள்?

1820 ஆம் ஆண்டு தொடக்கம் 1840 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இந்தியாவில் தென்மாநிலத்தில் சாதிக் கொடுமையும், பஞ்சமும் தலைவிரித்து ஆடியது.

**“பாவமடா பஞ்சத்திற்கு தெரியுமோ சாதி இன மத வேறுபாடு தான்”** பலரும் பட்டினியால் செத்து மடிந்தார்கள். “காற்றுள்ள போதே தூற்றிக்கொள்” இப்பழமொழி ஆங்கிலேயருக்கு நன்றாக பொருந்தக்கூடுமொ என்னவோ பசியும் பட்டினியும் தலைவிரித்தாடிய இந்த அரியதொரு சூழ்நிலையை பயன்படுத்திக் கொண்டார்கள் எம் ஆங்கிலேய சமூகத்தினர். கூலித் தொழிலாளிகளாக தென்னிந்தியாவில் வாழ்ந்த பலரை பல ஆசை வார்த்தைகளைக் கூறி மனம் மயங்க வைத்து இலங்கைக்கு அழைத்து வந்தார்கள் வெள்ளையர்கள்.

**“உன்னில் குற்றமில்லை குவியும் இடத்தில்
கோடிகள் குறைவில்லாமல் குவிய
நலிய மக்களை நாறாய்க் கிழித்து
ஓரம் கட்டித்தான் வைத்தார்கள்”**

வரும் வழியும் வந்து குடியேறிய பின்னரும் அவர்கள் எண்ணிலடங்காத இன்னல்களைச் சந்தித்தவர்கள். இவர்கள் கடல் வழியாக வரும்போது “ஆதிலெட்சுமி” என்ற கப்பல் கடலில் மூழ்கியதால் 120 பேர் செத்து மடிந்தார்கள் என்று பல வரலாறுகள் கூறுகின்றன.

**“வலி சுமந்த வாழ்க்கை தான் எமக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கையோ என்னவோ”** இவ்வாறு வலிசுமந்த

பயணம் மேற்கொண்டு உயிர் பிழைத்தவர்கள் மலைப்பாங்கான பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டதால் மலையகத் தமிழர் என்றும் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டதால் இந்திய வம்சாவளித் தமிழர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டு இலட்சினை குத்தப்பட்டார்கள்.

உலக வரைப்படத்திலேயே ஒரு சிறிய புள்ளியால் அடையாளப்படுத்தப்படும் எம் ஈழத்தமிழ் நாட்டை இன்றைய 22 ஆம் நூற்றாண்டிலும் சிறப்பிக்கிறார்கள் என்றால் அதன் பெருமை பெருமிதம் கொண்ட மலையக மக்களையே சாரும். தேயிலை என்ற ஒரு சொல்லின் காரணமாகவே ஆசியாவிலேயே ஒரு சிறிய புள்ளியால் அடையாளப் படுத்தப்படும் இலங்கையும் பேசப்படுகிறது. தேயிலையின் பெருமையையும் சிறப்பையும் சுட்டிக்காட்டும் எம்மில் பலர் தேயிலையே சிறப்பு படுத்திய எம் மலையக தமிழர்களை மறந்துதான் செல்கின்றார்கள்.



1820 ஆம் ஆண்டளவில் இலங்கையில் கோப்பிப் பயிர்ச்செய்கையே அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும் 1867 ஆம் ஆண்டளவில் ஒரு வகையான நோய் காரணமாக கோப்பிப் பயிர்ச்செய்கை பெரும் பாதிப்புக்குள்ளானது. அதன் பின் ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் லூல் கந்துர எனும் இடத்தில்தான் தேயிலை பயிர்ச்செய்கை முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான மனிதவளம் போதியளவில் இலங்கையில் காணப்படவில்லை. இதனால்தான் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் பொருட்களை இறக்குமதி செய்வதைப் போல் இறக்குமதி செய்யப்பட்டார்கள்.

## நாடற்றவர்கள் என்ற பார்வையில் எம் மலையக தமிழர்கள்

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் விரும்பியோ விரும்பாமலோ ஏதோ ஒரு அரசுக்கு சொந்தமாகின்றனர். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்திலேயே வந்தேறு குடிகள் அனைவரும் இந்தியாவிற்குச் சொந்தமானவர்கள். ஆனால், இறுதியில் எவரும் எம்மை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கவில்லை. இதன் விளைவாக எமக்கு கிடைத்த பட்டம் **“நாடற்றவர்கள்”** என்பது தான்.

1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் வாக்குரிமை அந்தஸ்து கிடைக்கப்பெற்ற போதும் 1947 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் கொண்டுவரப்பட்ட இந்திய பாகிஸ்தானிய ஒப்பந்தம், சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம், பிரஜாவுரிமை சட்டம் போன்ற செயற்பாடுகளின் மூலம் வழங்கப்பட்ட வாக்குரிமை பறிக்கப்பட்டது. இதன் பின் வந்த 3 தசாப்த காலமாக நாடற்றவர்களாக வாழ்ந்த சமூகம் எம் சமூகம் எனும் போது கண்களின் ஓரம் ஈரம் சுரக்கின்றது.

தேவைக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு தேவை முடிந்த பின் தூக்கி வீசப்படுபவர்கள் நாங்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒரு விடயம். அதுப்போலத் தான் வெள்ளையர்களால் அழைத்து வரப்பட்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிவிட்டு வெளியேறிய பின்னரும் சிங்கள தேசியவாதிகள் மலையகத் தமிழர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். சிங்கள தேசியவாதிகளின் நெருக்குதலின் காரணமாக 1948 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 15 ஆம் திகதி இலங்கை குடியுரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டது.

**“இரு கைகள் சேர்ந்து எழுப்பும் ஓசையை விட பல கைகள் சேர்ந்து எழுப்பும் ஓசைக்கு தான் வலிமை அதிகம்”**

ஆனாலும் என்னவோ இலங்கை குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இச்சட்டத்தை ஏற்றுக்கொண்டனர். ஆனாலும் அக்காலக்கட்டத்தில் இருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை எதிர்த்தார்கள். எனவே, பல கைகளின் ஓசையும் பலமிழந்து சென்றது.

இலங்கை குடியரசு சட்டத்தின்படி 1948.11.15 ஆம் திகதிக்கு முன் இலங்கையில் பிறந்திருப்பதுடன் அவர்களின் 2 தலைமுறையினர் இலங்கையில் பிறந்திருந்தால் மட்டுமே இலங்கை குடியுரிமைக்கு உரிமையுடையவர்கள் என்பது வரையறுக்கப்பட்டிருந்தது. மலையகத் தமிழர்களில் பலர் தமக்கு முன் இரண்டு தலைமுறையினர் இலங்கையில் வாழ்ந்திருந்தாலும்

அக்காலச் சூழலில் அதனை நிரூபிப்பதற்கு போதுமான ஆவணங்கள் எதுவும் அற்ற நிலையில் நிர்கதியாகத்தான் நின்றார்கள். இந்த நிலையின் காரணமாக ஏழு இலட்சம் வரையான மலையகத் தமிழர்கள் நாடற்றவர்கள் என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். வாக்குரிமை பெற்றவர்களைத் தவிர ஏனையோர் நாடற்றவர் என்ற பட்டம் பெற்றனர்.

**ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வாக்குரிமை வழங்கப்பட்டு மீண்டும் மீண்டும் பறிக்கப்பட்டது. இவ்வாறு எல்லா வகையிலும் எம் மலையகத் தமிழ் சமூகத்திற்கு நடந்தது கவலைக்கிடமான அநியாயங்கள் என்று தான் கூற வேண்டும். 1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமைக்கு உதவும் அடுத்த படிநிலையில் அதுவரை காலமும் நடைமுறையில் இருந்த கிராமசபை முறைமையை பிரதேச சபையாக மாற்றியமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டே பிரதேச சபைகள் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன்போது மாற்றமுறும் கிராம சபை முறையில் ஏற்கெனவே உள்வாங்கப்பட்டிருக்காத மலையகத் தமிழ்ச் சமூகம் பிரதேச சபை சட்டத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்டனர். அப்போது அமைச்சுப் பதவிகளில் தன்னை அலங்கரித்து கொண்டிருந்த மலையகத் தலைமைகளும் இது குறித்து அக்கறை அற்று இருந்துள்ளனர் என்பது மலையக மக்களின் சாபக்கேடு.**

இதனை அடுத்து 1949 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தில் குடியுரிமை இல்லாதவர்கள் வாக்குரிமையை இழப்பார்கள் என்று சரத்து சேர்க்கப்பட்டதால் இதன் விளைவாக அதற்கு முந்தைய 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்களித்து 7 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் தமது வாக்குரிமையை இழந்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வாக்குரிமை வழங்கப்பட்டு மீண்டும் மீண்டும் பறிக்கப்பட்டது.

இவ்வாறு எல்லா வகையிலும் எம் மலையகத் தமிழ் சமூகத்திற்கு நடந்தது கவலைக்கிடமான அநியாயங்கள் என்று தான் கூற வேண்டும். 1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமைக்கு உதவும் அடுத்த படிநிலையில் அதுவரை காலமும் நடைமுறையில் இருந்த கிராமசபை முறைமையை பிரதேச சபையாக மாற்றியமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டே பிரதேச சபைகள் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன்போது மாற்றமுறும் கிராம சபை முறையில் ஏற்கெனவே உள்வாங்கப்பட்டிருக்காத மலையகத் தமிழ்ச் சமூகம் பிரதேச சபை சட்டத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்டனர். அப்போது அமைச்சுப் பதவிகளில் தன்னை அலங்கரித்து கொண்டிருந்த மலையக தலைமைகளும் இது குறித்து அக்கறை அற்று இருந்துள்ளனர் என்பது மலையக மக்களின் சாபக்கேடு.

அதன் பின் 30 வருடங்கள் கழிந்தே 2018 ஆம் ஆண்டு பிரதேச சபைகள் சட்டம் திருத்தப்பட்டு மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் சேவை செய்யலாம் என்ற நிலைமை கொண்டுவரப்பட்டது. சுருக்கமாக கூறின் மலையகப் பெருந்தோட்டச் சமூகம் இலங்கையில் உள்நாட்டு நிர்வாகத்தில் அதிகாரம் பெற்ற ஆண்டே 2018 தான்.

இவ்வாறான பின்னணிகளே மலையக மக்கள் இன்னும் முழு உரிமை இன்றி ஓரங்கட்டப்பட்டவர்களாக வாழ்வதற்கான பிரதான காரணமாகும். நாற்பது வருடங்களாக நாடற்றவர்களாக வாழவைத்து நாட்டின் ஏனைய சமூகங்கள் அனுபவிக்கும் தேசிய நிர்வாகப் பொறிமுறைக்குள் இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் முழுமையாக உள்வாங்கப்படாமை கவலைக்கிடமான விடயம்தான்.

**“கல்வாத்து வெட்டுவது போல் இலங்கையின் வரலாற்றில் இருந்து வெட்டப்பட்டு வஞ்சிக்கப்பட்ட சமூகம் தான் எம் மலையக சமூகம்.”**

“மலையகத் தமிழர்கள்! மலையகத் தமிழர்கள்!! மலையகத் தமிழர்கள்!!!” என்று மூலைக்கு மூலை, முடுக்குக்கு முடுக்கு பேசுகின்றார்களே! எல்லோரும் பிறப்பது சம்பவமாகத்தான் இருக்கும். ஆனால் நாம் பிறந்ததே ஒரு சரித்திரமாகத் தான் இருக்கும் என்ற பெருமை மிக்கவர்கள் தான் எம் மலையகத் தமிழர்கள் என்று மார்தட்டுகிறேன்.





# காலம் பிந்தியே நகர்கிறது

மலையகம் 200

**கல்கியூர் நிரோஷன்**

மலைநாட்டின் வரலாற்று பாதை துயர் மற்றும் ஏமாற்றம் என பல எதிர்மறையான யதார்த்த உணர்வுகள் நிறைந்து வழிய சுமந்தபடி 200 இல் தடம் பதித்து தீர்க்கப்படா சிக்கல்களோடும் எண்ணற்ற ஏக்க கனவுகளோடும் தனது பயணத்தை தொடர எத்தனிக்கின்றது. அப்படிப்பட்ட எண்ணற்ற சிக்கல்களில் மலையகம் 200 இல் உழைக்கும் பெண்கள் பற்றிய சிறு ஆய்வே இத்தொகுப்பாகும்.

இலாப வெறியை அடிப்படையாகக் கொண்ட இச்சமூக அமைப்பு முறையில் மானுட உழைப்பை எல்லையின்றி சுரண்டுவதோடு யதார்த்த மானுட வாழ்வியலையும் இந்த இலாபவெறிக்காக சிதைத்தும் வருகிறது. இது உலகெங்கிலும் பூதாகரமானதாக நடந்தேறி வருகிறது. இவ்வேட்டையில் மலைநாடு இலாவகமான களமாகிப்போனது. அது இம்மண்ணின் உழைப்பையும் வளங்களையும் கரும்புச்சக்கையைப் போல் பிழிகிறது. மேலும் உழைக்கும் மக்களின் அரசியலையும் தன் எண்ணம் போல் திருப்பி பேயாட்டம் போடுகிறது. அப்பேயாட்டத்தில் மனிதிகளின் வாழ்வு காரிருள் சூழ்ந்ததுதான்.

காலை ஏழு முப்பதுக்கு வீட்டை விட்டு தேயிலை மலை நோக்கி செல்லும் பெண் மாலை வீடு வந்து சேருகிறாள் எனில் அது மற்ற தொழில்களைப் போன்று யதார்த்தமானதல்ல. தினந்தோறும் வாழ்க்கைக்கான போராட்டமே அது. காரணம் தோட்ட கம்பெனிகளில் மனிதத் தன்மையற்ற சட்டசவகுழிகளில் தினம் தினம் புதைக்கப்படுகின்றாள்.

அது ஒரு கர்ப்பிணித்தாயின் கர்ப்ப காலத்தில் 8 மாதம் வரை கட்டாயம் வேலை செய்ய நிர்பந்திப்பதோடு இல்லாவிடில் நிரந்தர பணி நீக்கம் என்ற சில தோட்ட கம்பெனிகளின் மிருகத்தனமான சட்டங்களைவேறு என்ன என்று சொல்வது!

கர்ப்ப காலத்தில் தேயிலை காடு கடும் வெயில், கடும் மழை, குளிர், சிறுத்தை, விஷப்பாம்பு, குளவி என அச்சுறுத்தல்கள் நிறைந்த சூழலில் அவளது உடல் மற்றும் உளரீதியான பிரச்சனைகள் எல்லாம் அத்தனை முக்கியத்துவம் அற்றதாக சமூகம் சுழல பரிணமித்து விட்டது. தொழில் பாதுகாப்பு எனும் வார்த்தை எல்லாம் இங்கு வேற்றுக்கிரக வார்த்தைகளே. குளவி கொட்டு, சிறுத்தை, பாம்புக் கடி என அதிகம் பாதிக்கப்படுவதும் பெண் தொழிலாளர்களே. நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமான முரண்பாடுகள் எல்லாம் தீர்வை அடையாது சமரசங்களுக்குள் தொலைந்து விடுகின்றன. அப்பிரச்சனைகள் எல்லாம் சொல்லி மாளாத எண்ணற்றவை. கைக்குழந்தையுடைய தொழிலாளியின் ஒவ்வொரு நாளும் கடுகதி ரயில் போல் இளைப்பாறுதல் இன்றைய சுழற்சிதான். இவையெல்லாம் தொழிற்சங்கவாதிகள் என்னும் பெயரில் முதலாளித்துவத்தை நக்கிப் பிழைக்கும் அந்த மக்கள் விரோதிகள் உணர்வதே இல்லை.

தோட்டங்களைத் தாண்டி மலைநாட்டு நகர்புறங்களில் தொழில் புரியும் யுவதிகளின் வாழ்வுநிலை அதிலும் பரிதாபமானது. இவைகள் ஒருபோதும் ஆய்வுக்குட்படுவதே இல்லை. மலையக பெருநகரங்களில் கடைத் தொகுதிகள் தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் யுவதிகளை சற்று கேட்டுப்பாருங்கள். பெரும்பாலான இடங்களில் பத்தாயிரம் முதல் 15 ஆயிரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட ஊதியம் வேறெந்த மேலதிக கொடுப்பனவுகளும் இல்லை. ETF, EPF இல்லை. வேலைக்கான எந்த வரையறைகளும் இல்லை. இந்த சொற்ப ஊதியத்துக்காக அவர்கள் தினம்தோறும் பிழிந்தெடுக்கப்படுகின்றனர். இவற்றில் சில இடங்களில் எவ்விதமான தொழில் பாதுகாப்புமற்ற அபாயகரமான வேலைகள் இவற்றோடு பாலியல் தொல்லைகள் வேறு. இதையும் தாண்டி நாட்டின் பெரும் நகரங்களில் வீட்டுப் பணிப்பெண்களாக பணிபுரியும் மலையகப் பெண்களின் நிலை எப்பொழுதுமே கேள்விக்குறியானதுதான். சராசரியாக பதியப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வருடத்தில் மூன்று பணிப்பெண்களையாவது பெருநகரங்கள் பலியெடுத்து விடுகின்றன. அவர்களின் உயிருக்கு எவ்வித உத்திரவாதமும் இல்லா நிலை சட்டங்களும் நீதியும் எளியவனை ஏறிமிதிக்கத்தான் செய்கிறது. அது வலியவனுக்கு நாணல் போல் வளைந்து கொடுக்கின்றது. பொலீஸ் விசாரணை என்ற பெயரில் அவர்கள் அடித்துக் கொல்லப்படலாம். அவை சட்டபூர்வமானதாக ஆக்கப்படலாம். அதற்கு நீதியாக அடித்துக்கொண்டு பொலீசாருக்கு உயர்ந்தபட்ச தண்டனையாக இடம் மாற்றம் வழங்கப்படலாம். இவைதான் முதலாளித்துவ அமைப்பு முறையில் நீதி சாசனம். கோடிக்கணக்கில் கொள்ளையிட்ட திலினி பிரியமாலிகளுக்கு கொடுக்கப்படும் குறைந்தபட்ச மரியாதை கூட எளிய உழைக்கும் மக்களுக்கு தரப்படுவதே இல்லை. இது இஷாலினி, ராஜ்குமாரி எனத் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

இவையெல்லாம் தாண்டி மத்திய கிழக்கு, ஆசிய நாடுகளுக்கு மலையகம் மற்றும் இலங்கைத் தீவில் இருந்து வீட்டுப் பணிப்பெண்களாக செல்வோரின் வாழ்க்கை நரகமயமானது. தான் எவ்விதமான பாதுகாப்பு உத்தரவாதங்களும் அற்று சில மக்கள் துரோகிகளின் தரகுலாபத்திற்காக தங்கள் வாழ்வையே பணயம் வைக்கும் கொத்தடிமை முறைதான் அது. குடும்பத்தின் பிரிவு மற்றும் தொழில் ரீதியான அழுத்தங்கள் எல்லாம் உளரீதியாக உழைக்கும் பெண்களை பலவீனப்படுத்தி தற்கொலை போன்ற எதிர்மறை விளைவுகளுக்கு இட்டுச் செல்கின்றது. அது இந்த முதலாளித்துவ அரச இயந்திரம் அரசியல் நாடகங்கள் தவிர்த்து உண்மையாக உழைக்கும் மக்கள் நலனில் அக்கறை கொள்ளப்போவதுமில்லை. மாறாக உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இன்று உலகளாவிய ரீதியில் முதலாளித்துவத்தின் விளைவுகளாக பட்டினி சாவு, திருட்டு, கொள்ளைகள், போர், திட்டமிட்ட கொள்ளை நோய்கள், பாலியல் தொழில் என பல எதிர்மறையான சமூக விளைவுகளை ஏற்படுத்தி யதார்த்த மனிதத்தை சிதைத்து வருகிறது.

எப்படி இந்த முதலாளித்துவ அமைப்பு முறை உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவதை தலையாய கடமையாகக் கொண்டுள்ளதோ அதுப்போல் இந்த அமைப்பு முறையை கருவறுத்து உழைக்கும் மக்களுக்கான சிறந்த சமூக அமைப்பை படைப்பது உழைக்கும் மக்களின் தலையாயக் கடமையாகும். ஆகவே, மலையக உழைக்கும் மக்கள் தமக்காக ஒன்றிணைந்து போராடாதவரை மலையகம் முன்னூறிலும் இதே நிலைதான் மாற்றங்கள் இன்றி தொடரும்.









தேப்ஸின் ஏழு வாயில்களைக் கட்டியது யார்?

புத்தகங்கள் பல மன்னர்களின் பெயர்களைச் சொல்லும்.

அந்த ராஜாக்கள்தான் பெரும் பாறைகளை இழுத்து வந்தார்களா?

அப்புறம் அந்த பாபிலோன், பலமுறை அழிக்கப்பட்டது.

பலமுறையும் அதைத் திரும்பக் கட்டியது யார்?

எந்த தங்க மாளிகையில் அந்தக் கொத்தனார்கள் வசித்தார்கள்?

சீனப் பெருஞ்சுவரைக் கட்டிவிட்டு மாலைகளில்

கொத்தனார்கள் எங்கு போய் வசித்தார்கள்?

மாபெரும் ரோமாபுரி முழுக்க வெற்றி வளைவுகள்.

அவற்றைக் கட்டியது யார்? சீஸர்கள் யாரை வெற்றி கொண்டார்கள்?

பாடல் பெற்ற பைசாண்டியத்தில் மக்கள் மாளிகைகளில்தான் வசித்தார்களா?

அட்லாண்டிஸை கடல் கொண்ட இரவில் எழுந்த கூச்சல் அடிமைகளது அன்றோ?

இளம் அலெக்சாண்டர் இந்தியாவை வென்றானாம். அவன் தனியாகவா வந்தான்?

சீஸர் காலியர்களை வென்றான். அவனோடு ஒரு சமையல்காரன் கூடவா இல்லை?

தன் கப்பற்படை அழிந்தபோது ஸ்பெயினின் பிலிப் அழுதானாம்.

அவன் மட்டும்தான் அழுதானா?

ஏழாண்டுப் போரில் இரண்டாம் பிரடெரிக் ஜெயித்தானாம். வேறு யார் ஜெயித்தது?

ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு வெற்றி

வெற்றியாளர்களுக்கு சமைத்துப் போட்டது யார்?

ஒவ்வொரு புத்தாண்டுக்கும் ஒரு மகத்தான மனிதன்.

அவனுக்கு செலவழித்தது யார்?

எத்தனையோ அறிக்கைகள்...

எத்தனையோ கேள்விகள்...

**படிக்கத் தெரிந்த ஒரு தொழிலாளியின் கேள்விகள் – பெர்டோல்ட் பிரெக்ட்**

Questions From a Worker Who Reads – Bertolt Brecht (1935)



# வெள்ளத்தில் திண்டாடும் மூன்றுகோறளை

**எஸ்.தர்ஷன் ஸ்ரீநாத்**
**அவிசாவளை**

மூன்றுகோறளை என அறியப்படுவது பண்டைய சீதாவக்கை (தற்போதைய அவிசாவளை) இராச்சியத்திற்குறிய பிரதேசமாகும். அட்டுலுகம கோறளை, தெஹிகம்பல கோறளை, பனாவளை கோறளை ஆகிய மூன்று கோறளைகளின் கூட்டே மூன்றுகோறளையாகும். சிங்களத்தில் 'துங்கோறளே' என்று அழைக்கப்படும் இப்பிரதேசம் கேகாலை மாவட்டத்தின் தெரணியகலை, ருவான்வலை, எட்டியாந்தோட்டை ஆகிய தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

அழகிற்கும் வளங்களுக்ககும் குறைவில்லாத இப்பகுதியில் மூவின மக்களும் செறிந்து வாழ்கின்றனர். களனி வடிநிலம் நான்கு திசைகளிலும் பாய்ந்து வளம் செய்யும் இங்கு தேயிலை, இறப்பர், தென்னை, கருவா, கராம்பு கோப்பி, மிளகு, ஏலம் என பொருளாதார வளம்மிக்க பலவகை பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக றம்புட்டான், துரியான், மங்குஸ்தான், ஆனைவாழை ஆகிய பழவகைகளும் இங்கு தாராளமாய் விளையும். நிலப்பயன்பாட்டுக்கு ஏற்றவாறான தனித்துவமான பண்பாடு இப்பிரதேசத்தை மேலும் அழகு செய்கின்றது.





ஆனாலும் களனி நதியின் நீரேந்துப் பிரதேசங்களுக்குக் கிடைக்கும் அதிக மழைவீழ்ச்சி வருடந்தோறும் மூன்றுகோரளையை வெள்ளம் ஆட்டிப்படைத்துவிடுகிறது. இலங்கை வரலாற்றில் அதிக உயிர்ச் சேதத்தை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்கும் இப்பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது. காற்றுப்பக்கத்தில் அமைந்திருப்பதனால் தென்மேல் மொன்சூன் காலப்பகுதியில் தெரணியகலை காலநிலை மத்திய நிலைய 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மழைவீழ்ச்சியாக 4922 மில்லிமீற்றர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மாளிபொடயில் 5281 மில்லிமீற்றர்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதைய தரவுகளின்படி மாளிபொட பிரதேசமே இலங்கையின் அதிக மழைவீழ்ச்சியைப் பெறும் இடமாகவும் விளங்குகின்றது. இம்மழை நீருடன் நுவரெலியா மாவட்டத்தின் மேற்குச்சரிவில் பொழியும் மழைநீரும் சேர்ந்து மூன்றுகோரளை பிரதேசத்தை சில மணித்தியாலயங்களிலேயே நீரில் மூழ்கடித்துவிடுகிறது. களனிப் பள்ளத்தாக்கில் அமைந்திருக்கும் காசல்ரீ, மவுசாக்கலை, லக்சபான ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்படும் பட்சத்தில் இவ்வெள்ளம் மேலும் வீரியம் பெறுகின்றது.

மே தொடக்கம் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் வருடந்தோறும் ஒருமுறையாவது கொட்டியாகும்புர, கன்னாந்தோட்டை, அங்குருவெல்ல, ருவான்வெல்ல, கரவனெல்ல, தெஹியோவிற்ற, தல்துவ ஆகிய நகரங்களையும் அவிசாவளை தொடக்கம் கொட்டியாகும்புர வரையிலான தாழ்நிலங்களையும் வெள்ளநீர் மூழ்கடித்துவிடுகின்றது. இதனால் ஏற்படும் பொருட்சேதங்கள் வரையறுக்க முடியாதன. இந்நிலைமை இப்பிரதேசத்தின் சனப்பரம்பலிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அண்மைக்காலமாக மூன்றுகோரளையில் இருந்தான இடப்பெயர்வு நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்றமை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். எனவே இவ்வெள்ளப் பெருக்கின் தாக்கத்தினை இழிவளவாக்குவது காலத்தின் தேவையாகவுள்ளது.

களனிப்பள்ளத்தாக்கில் மேலும் சில நீர்த்தேக்கங்களை அமைப்பதே இதற்கு சிறந்த தீர்வாக அமைய முடியும். ஏனெனில் ஏனைய மாற்று நடவடிக்கைகள் உயிர்சேதத்தினைக் குறைப்பதற்கு மட்டுமே தீர்வாக அமையுமேயொழிய பெரும் பிரச்சினையான பொருட்சேதங்களுக்குத் ஒருபோதும் தீர்வாக அமையாதன. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது நன்னீர் மீன்பிடி, நீர்மின் உற்பத்தி, சுற்றுலாத்துறை என பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாக அமையவும் இடமுண்டு. களனி நதியின் பிரதான ஆற்றோட்டத்தில் லக்சபான நீர்த்தேக்கத்திற்கு அடுத்ததாக கினிகத்தேனை மற்றும் எட்டியாந்தோட்டை நகர்களுக்கு இடையிலும், பிரதான கிளை நதியான சீதா கங்கையில் தெரணியலை பிரதேசத்திலும் நீர்த்தேக்கங்களை அமைப்பதன் மூலம் திடீர் வெள்ளப்பெருக்கினைத் தவிர்க்க முடியும். இப்போது தென்மேல் பருவமழை ஆரம்பமாகியிருக்கிறது. மூன்றுகோரளை மக்களும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு அல்லற்படத் தொடங்கியிருக்கின்றனர். இம்மக்களின் மனவெள்ளம் மிகவிரையில் வடிந்தோடட்டும்.



# அவள்

வேதனை நிறைந்த கையெழுத்து
மனம் தெகிட்டாத கதை இது!

மேடு பள்ளம் நிறைந்த ஊரு
சந்தியெல்லாம் சின்ன சின்ன கோவில்
தேயிலையால் தேகம் நிறைந்த கூட்டம்
தேடிப் போனாலும் கிடைக்காது அந்த சுகம்.

தேதி வச்சு சம்பளம் வாங்கி
அதுல பாதிய சேத்து வச்சு
வாழ்க்க வாழும் அழகான யுகம்.

வயசுக்கு வந்து நாளாச்சு
வரமுறையும் செஞ்சாச்சு
வருமானம் குறைய
வயிற்றுப் பசி தொடர
வச்ச நகையெல்லாம் மொழுகிப்போக
அம்மா விடும் கண்ணீரு – அந்தப் பெண்
வீட்டை விட்டுப் புறப்பட காரணம்!

பனிய லயத்து அக்காக்கிட்ட
வேல ஒன்னு பார்க்கச் சொல்ல – சித்திரைக்கு
வந்த அக்கா சிரிச்சிக்கிட்டே சொன்னாங்க
சித்திரை முடிஞ்சு போவோனு – அத
அவ(ள்) அம்மாகிட்ட சொல்ல
அம்மா அப்பாக்கிட்ட சொல்ல
சாவு வீடு போல மாறிப்போச்சு அந்த வீடு

சித்திரையும் முடிஞ்சிருச்சு துணிமணியும்
சுத்தியாச்சு கொஞ்சம் கூட மனசே இல்ல
ஊரவிட்டு கொழும்பு போக
இதுதான் விதினு வீதில வந்து பஸ் ஏறிட்டா(ள்).
சீட்ட பிடிச்சு பஸ்ஸில உட்கார்ந்தா(ள்)
கண்ணீர் வடித்த அப்பா ஞாபகம்
கதவோரம் நின்ற தங்கச்சி ஞாபகம்
ஐயோ! அவளுக்கும் மட்டும் இத்தனை
கொடுமையா?
கடவுளே! கதிகலங்கி ஜன்னலோரம்
கதறினா(ள்).

கொழும்புக்கு வந்திட்டா(ள்) வியர்வை வடிய
தாங்காத சூடு உடம்பெல்லாம் கொப்புளம்
தெரியாத ஊரு புரியாத மொழி
நக்கல் நையாண்டியோடு பசங்களின்
தொல்லை
நாளா பக்கமும் அவமானம் – பட்ட வேதனை
வேறு யாரறிவார் இங்கு?
மனசுல பெரும் போராட்டம்
விதிய நினைச்சுக்கிட்டே வேலைக்கும்
கிளம்பிட்டா(ள்).

அத்தனையும் கடந்து வந்து
கால் பதித்தா(ள்) உலகத்துல – வேலையும்
செஞ்சி
வெகுமானமும் வாங்கிட்டா(ள்)
வீட்டுக்கும் அனுப்பிட்டா(ள்) – வீட்டுக் கஷ்டம்
ஞாபகம் வர சிரிச்சிக்கிட்டே அழப் பழகிட்டா(ள்)
கல்யாண வயசு வந்துருச்சு – நினைப்பெல்லாம்
வீட்ட பத்தி – இரவெல்லாம் அழுவா(ள்)
சத்தம் மட்டும் கேட்காது – அவ(ள்)
கண்ணீர் மட்டும் கதை சொல்லும்.
பொழுதும் விடிஞ்சிருச்சு
புறப்பட்டுட்டா(ள்) வேலைக்கு.

**கிருபானி நிரோஷா**



# பிஜித் தீவின் கரும்புத் தோட்டத்து கிர்மிட்டியர்கள்!

சதீஸ் செல்வராஜ்

**“அந்தப் பெண் பயந்து திரும்பி நின்று, தன் கைகளை உயர்த்திக் கெஞ்சுகிறாள். அவளது அரை நிர்வாண முதுகின் மீதும் கால்களின் மீதும் சாட்டை இறங்குகிறது.அவளது குழந்தையும் தாக்கப்பட்டிருக்கிறது. இருவரும் கதறி அழுகிறார்கள். வெள்ளையன் தன் குதிரையின் கால்குளம்புகளையும் அவள் மீது ஏற்றுகிறான்.”** பிஜித் தீவின் வெள்ளையனின் கரும்புத் தோட்டத்தில் இந்திய வம்சாவளி மக்கள் அனுபவித்த கொடுமைகளை தனது ‘டியர்ஸ் இன் பெரடைஸ்’ (Tears In Paradise: Suffering And Struggles Of Indians In Fiji, 1879-2004) என்ற புத்தகத்தில் இவ்வாறு பதிகிறார் எழுத்தாளர் ராஜேந்திர பிரசாத்.

ஐரோப்பிய மன்னர்களும் நிலச்சுவாந்தர்களும் உலக நாடுகளுக்கு சொந்தம் கொண்டாட தொடங்கியவேளை “காலனித்துவம்” என்ற புது அடிமையுகம் தோற்றம் பெற்றது. இந்தக் காலனித்துவக் கலாசாரத்தில் தரையோடு நையக்கப்பட்ட சாதாரண மக்கள் கொத்தடிமைகளாகவும் ஒப்பந்தக் கூலிகளாகவும் உருமாற்றப்பட்டு வெள்ளையனின் காலனித்துவ நாடுகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். வெள்ளையனின் உள்நாட்டு விசுவாசிகள்கூட்டம் முகவர்களாக மாறினர். குறைந்தபட்ச மனிதாபிமானமும் அந்தக் காலனித்துவ யுகத்தில் கருவறுக்கப்பட்டிருந்தது. அதில் இந்தியத் தேசமும் சீரழிந்தது.



பிரித்தானியரின் கேடுகெட்ட சுரண்டல் ஆட்சியில் எவ்வாறு தென்நாடு அழிந்து நாசமாகியதோ, அதைவிட படுமோசமாக

வட இந்தியா அழிந்துபோனது. ஐரோப்பா முதலாளித்துவத்தை நோக்கி அடியெடுத்து வைக்க, இந்தியத் தேசமோ காலனித்துவத்தில் சிக்குண்டது. அந்த சமயத்தில் பஞ்சமும் தலைவிரித்து ஆடியது. மக்கள் ஈக்களைப் போல செத்து மடிந்தனர். கிராமங்களில் பிணவாடை வீசியது. அந்தப் பஞ்ச நிலைமை மக்களை பித்துப்பிடிக்கச் செய்தது. அதனால், உயிர்ப்பிழைக்க மக்கள் கடல்தாண்ட ஒப்புதல் அளித்தனர். அந்தவரிசையில் வெள்ளையனின் பிஜித் தீவின் கரும்புத் தோட்டத்துக்கும் மக்கள் புறப்பட ஆயத்தமாகினர்.

## வெள்ளையனின் பிஜித் தீவு

1874 இல் பிஜித் தீவு பிரிட்டிஷ் அரசால் கையகப்படுத்தப்பட்டது. பிஜியும் ஏனைய காலனித்துவ நாடுகளைப் போல பொருளாதார வளர்ச்சியைக் காண்பிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கான மூலதனமோ உழைப்போ அங்கு எளிதில் கிடைக்கவில்லை. அந்தத் தீவின் முதலாவது கவர்னர் சர் ஆர்தர் கார்டன், ஆஸ்திரேலியாவின் காலனித்துவ சர்க்கரை சுத்திகரிப்பு நிறுவனத்தை பிஜி வரை விரிவுபடுத்தும் யோசனையை முன்வைத்தான்.

இக்காலப்பகுதியில் கரீபியன் தீவுகளின் தோட்டங்களிலும் தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டதுடன், அப்பகுதியில் சர்க்கரைக்கான தேவையும் நீடித்தது. இந்நிலைமை பிரிட்டிஷ் கிரீடத்திற்கும் அவர்களின் காலனித்துவ சர்க்கரை

**பல போராட்டங்களுக்குப் பிறகு 1833 இல் பிரித்தானியாவில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரால் ஒப்பந்தக் கூலிகள் முறை கொண்டுவரப்பட்டது. அதன்படி, ஏற்கெனவே இந்தியாவில் இருந்து பல பிரித்தானிய காலனிகளுக்கு ஒப்பந்தக் கூலிகளாக மக்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தனர். அதாவது, அடிமைத்தனத்தின் சக்கர வண்டிக்கு ஒப்பந்தம் என்று மறுபெயரிடப்பட்டிருந்தது.**

நிறுவனத்திற்கும் சிக்கலை ஏற்படுத்தியது. இந்நிலைமை பிஜித் தீவில் கரும்புத் தோட்டங்கள் உருவாக காரணமாயின. அங்கு உழைப்பதற்கு பிரித்தானிய அரசாங்கத்திற்கு அடிமைகள் தேவைப்பட்டனர். அவர்களது பார்வை இந்தியா மீது விழுந்தது. மொரீசியஸில் கவர்னராக பணியாற்றிவந்த சர். ஆதர் கோர்டன், பிஜியின் முதல் கவர்னராக பொறுப்பேற்ற பின்பு அவன் செய்த முதல் பணி இந்தியாவிலிருந்து தோட்ட வேலைகளுக்கு ஆட்களை கொண்டுவந்து பிஜியில் இறக்கியதுதான். ஆனால், அம்மக்களை கொத்தடிமைகளாக இழுத்துவர அன்றிருந்த சட்டம் தடுத்தது.

ஆம்! பல போராட்டங்களுக்குப் பிறகு 1833 இல் பிரித்தானியாவில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரால் ஒப்பந்தக் கூலிகள் முறை கொண்டுவரப்பட்டது. அதன்படி, ஏற்கெனவே இந்தியாவில் இருந்து பல பிரித்தானிய காலனிகளுக்கு ஒப்பந்தக் கூலிகளாக மக்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தனர். அதாவது, அடிமைத்தனத்தின் சக்கர வண்டிக்கு ஒப்பந்தம் என்று மறுபெயரிடப்பட்டிருந்தது.

## பஞ்சம் பறித்த உயிர்கள்

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் வங்காளம் ஆகிய மாநிலங்களில் தொடர் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால், அதற்கு முன்பே 1770 இல் பீகார், வடக்கு மற்றும் மத்திய வங்காளத்தில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தில் ஏறக்குறைய 10 மில்லியன் மக்கள் இறந்துள்ளனர். அன்றைய சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் மாண்டனர். அதனையடுத்து வட இந்தியாவை பல பஞ்சங்கள் தாக்கியழித்தன. 1866 இல் ஒரிசா மற்றும் பீகார் பிராந்தியத்தில் ஏற்பட்ட பஞ்சத்தில் ஏறக்குறைய 1 மில்லியன் (ஒரிசாவில் 814,469, பீகாரில் 135,676) மக்கள் இறந்தனர். அதன்போது பீகார் ஜோன் லோரன்ஸ் பிரபுவின் கீழ் இருந்தது. அதனைத் தொடர்ந்து 1873 – 74 முதலாவது லிட்டன் பிரபுவின் ஆட்சிக் காலத்திலும் பீகாரை பெரும் பஞ்சம் தாக்கியது. மக்கள் வீதிகளில் கொத்துக் கொத்தாக செத்து மடிந்தனர்.

விவசாயத்தை கருத்திற் கொள்ளாது பிரித்தானியரின் ஆட்சி பாரிய அளவில் பருத்தி சாகுபடி மேற்கொண்டதன் காரணத்தால், வளமான ஆற்றங்கரைகளில் பெரும்பாலானவை சாகுபடிக்கு



தகுதியற்றதாக மாறின. விவசாயம் பொய்த்துப்போனது. விவசாயிகளிடம் இருந்து நிலம் பறிக்கப்பட்டதனாலும் மிகை வரிச்சுரண்டலினாலும் விவசாயம் சுருண்டது. அதனால், உயிர்விட்டுக் கொண்டிருந்த மக்கள் ஒப்பந்தக் கூலிகளாக மாற முன்வந்தனர்.

## ஆர்கட்டிகளின் ஆசை வார்த்தையில் சிக்குண்ட ஒப்பந்தக் கூலிகள்

தொடக்கத்தில் பீகார் மாகாணத்தின் கோண்டா, பஸ்தி, பைசாபாத், சுல்தான்பூர், அசம்கர், கோராப்பூர், அலகாபாத், ஜான்பூர், ஷஹாபாத், ரேரேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே பெருமளவில் அணிவகுத்தனர். மேலும் உத்தரபிரதேஷ், நேபாளத்தின் எல்லை பிரதேசங்கள் உள்ளிட்ட ஐக்கிய மாகாணத்தின் பாவப்பட்ட ஜென்மங்களும் இந்த வரிசையில் வந்து சேர்ந்தனர். பின்னர் தென்நாட்டின் தமிழர், தெலுங்கர், மலையாளிகளும் பிஜித் தீவிற்கு கொண்டு செல்லப்பட்டனர். மொத்த இந்தியர்களில் இவர்கள் 15 சதவீதமாகவிருந்தனர். 1903 ஆண்டில் தான் பீஜித் தீவிக்கான ஆட்சேர்ப்பு தென்னிந்தியாவிற்கு நீட்டிக்கப்பட்டது. தென்னிந்தியர்கள் மலேசியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு அதிகம் கொண்டு செல்லப்பட்டதால், பிஜிக்கு வந்தவர்களின் எண்ணிக்கை குறைவு என்று சொல்லப்படுகிறது. இவர்கள் பெரும்பாலும் விசாகப்பட்டினம், ஆற்காடு, சித்தூர், திருச்சினாப்போலி, சிங்கில்பட், கிருஷ்ணா பகுதிகளிலிருந்து வந்தவர்கள் என்று ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

“பீஜியில் வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம், நிலங்களை நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.” என்று ஆர்க்கட்டி (கங்காணி) எனப்படுவர்களால் ஆசை வார்த்தைகள் அள்ளி வீசப்பட்டன.

தமக்கான சிறந்த வாய்ப்புகளைத் தேடிக்கொள்ளவும், தங்கள் பயிர்களை அழித்த வறட்சியிலிருந்து தப்பிப்பதற்கும், வெள்ளையர்கள் தம் நிலங்கைளை பறித்துக்கொண்டதையடுத்து ஏற்பட்ட வேலையின்மையிலிருந்து விடுபடுவதற்கும் எதிர்பார்த்திருந்த மக்கள் ஆர்க்கத்திக்களின் வார்த்தைகளால் ஈர்க்கப்பட்டனர். பிஜித் தீவு இந்தியாவுக்கு மிக அருகில் இருப்பதாகவும் ஆர்க்கட்டிகள் கூறினர். அதனால், அதுவரை தாம் அறிந்திறாத, கேள்விபட்டிறாத “பிஜி” என்ற புது தேசத்தை நோக்கிப் புறப்பட தயாராகினார்கள். அவர்களை பிஜிக்கு கொண்டு செல்வதற்கான ஒப்பந்தம் தயாராகியது.

## கிர்மிட்டியர்கள் எனப்படும் ஒப்பந்தக் கூலிகள்

ஒப்பந்தக் கூலிகளாக திரண்ட மக்கள் பொதுவாக கல்வியறிவற்ற பாமரர்களாக இருந்ததால், ‘Agreement’ (ஒப்பந்தம்) என்ற ஆங்கிலச் சொல்லை “கிர்மிட்டா” என்றே உச்சரித்தனர். அதனால், ஒப்பந்தக் கூலிகளை வெள்ளையர்கள் ஏளனமாக Girmitiyas (கிர்மிட்டியர்கள்) என்றே அழைத்தனர்.

வெள்ளையர்கள் சொன்ன ஒப்பந்தத்தில், ஐந்து ஆண்டுகளில் வேலை செய்துவிட்டு அதிர்ஷ்டத்துடன் இந்தியாவிற்கு திரும்பி வரலாம் என்று இருந்தது, அதுவும் சொந்தச் செலவில். ஆனால், அந்தப் பயணச் செலவு ஐந்து வருடங்கள் உழைத்ததற்கு சமம் என்று அவர்கள் ஆரம்பத்தில் அறிந்திருக்கவில்லை. மேலும், ஐந்து வருடங்கள் தோட்டங்களில் உழைத்தால் இலவசமாக இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதாக வெள்ளையர்கள் கூறிவிட்டனர்.

ஆரம்பத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள் உள்ளூர் மாமலேதார் (நீதிபதிகள்) முன்

**ஒப்பந்தக் கூலிகளாக திரண்ட மக்கள் பொதுவாக கல்வியறிவற்ற பாமரர்களாக இருந்ததால், ‘Agreement’ (ஒப்பந்தம்) என்ற ஆங்கிலச் சொல்லை “கிர்மிட்டா” என்றே உச்சரித்தனர். அதனால், ஒப்பந்தக் கூலிகளை வெள்ளையர்கள் ஏளனமாக Girmitiyas (கிர்மிட்டியர்கள்) என்றே அழைத்தனர்.**

ஆஜர்படுத்தப்பட்டனர். ஆனால், அந்த மக்களால் அவர்கள் பணியமர்த்தப்படும் விதிமுறைகளை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆர்க்கட்டிகள் மூலம் துறைமுகங்களுக்குக் கிர்மிட்டியர்கள் கொண்டு வரப்பட்டு, 'உடல் நோயோ மன நோயோ இல்லை' என்று சான்றிதழ் பெற்று ஒப்பந்தத்தில் கைநாட்டு வாங்கப்பட்டு, கழுத்தில் எண் எழுதிய வட்டத் தகரம் கட்டப்பட்டு, கப்பலில் ஏற்றிவிடப்பட்டனர்.

ஆனால், ஒப்பந்தக் கூலிகளில் பலர் தங்களின் சுதந்திரம் பறிபோனதை விரைவில் உணர்ந்தனர். அங்கிருந்து யாராலும் தப்பிக்க முடியவில்லை. எதிர்த்தவர்கள் உணவு இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டனர், அடிபணியுமாறு மிரட்டப்பட்டனர்.

அதன்படி, முதன் முதலில் 1879 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி லியோனிடாஸ் (பிஜிக்கு கொத்தடிமைகளாக இருந்த இந்திய ஒப்பந்தக் கூலிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்) கொல்கத்தா துறைமுகத்திலிருந்து பிஜியின் லெவுகா நகருக்குப் புறப்பட்டது.

கப்பலில் இருந்த ஆண்களும் பெண்களும் இதுதான் தமது தாய்நாட்டை இறுதியாக பார்க்கப் போகின்ற தருணம் என்று அப்போது அறிந்திருக்கவில்லை. பெரும்பான்மையான ஏழை இந்தியர்கள் தங்கள் நாட்டுடனான உறவை என்றென்றும் துண்டித்த நாளாக அந்நாள் வரலாற்றில் மாறியது. 11,000 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து 40 நாட்களின் பின்னர் லியோனிடாஸ் கப்பல் கரையை தொட்டது. 1879 - 1916 வரையிலான 37 ஆண்டுகளில் 60,965 ஒப்பந்தக் கூலிகள் பிஜிக்கு கொண்டு செல்லப்பட்டனர். 42 கப்பல்களில் பிஜித் தீவுக்கு 87 பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏறக்குறைய 45,000 பேர் வட இந்தியத் துறைமுகங்களிலிருந்தும், 15,000 பேர் தென்னிந்தியாவிலிருந்தும் கரும்புத் தோட்ட வேலைகளுக்காக சென்றிருக்கிறார்கள்.

முதலாவதாக புறப்பட்டுச் சென்ற லியோனிடாஸ் கப்பல் 1879 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி பிஜியை சென்றடைந்தது. தாம் பிஜிக்கு வந்த அந்த நாளை 'கிர்மிட் டே' என்று பிஜி இந்திய சமூகம் நினைவுகூர்கிறது. இரண்டாவது கப்பலான பெரார் மற்றும் மூன்றாவது கப்பலான பூனா, 1882 இல் பிஜி நோக்கிச் சென்றது. பிஜிக்கு போக்குவரத்துக்காக பதிவு செய்யப்பட்ட 60,965 பேரில் நூற்றுக்கணக்கானோர் கொலோரா, வாந்திபேதி போன்ற நோய்களால் கடற் பயணத்திலேயே இறந்தனர். இறந்தவர்களின் உடல்கள் கடலில் வீசியெறியப்பட்டன. பாய்மரக் கப்பலில் மூன்று மாதங்களும், நீராவிக் கப்பலில் ஒரு மாதமும் பிஜியை அடைய எடுத்தது. இந்த காலகட்டத்தில் கஷ்டங்கள் இருந்தபோதிலும், ஜஹாஜிபாய் (கப்பல் தோழர்கள்) என்று தங்களிடையே அழைத்தவர்களிடையே ஒரு வகையான பிணைப்பு ஏற்பட்டது.

பிஜியை அடைந்ததும், ஒப்பந்தக் கூலிகள் தோட்டங்களுக்கு ஒதுக்கப்படுவதற்கு முன்பு, ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் நுகுலாவ் தீவில் தனிமைப்படுத்தப்பட்டனர். ஒதுக்கப்பட்ட நாளில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் தோட்ட



**11,000 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து 40 நாட்களின் பின்னர் லியோனிடாஸ் கப்பல் கரையை தொட்டது. 1879 - 1916 வரையிலான 37 ஆண்டுகளில் 60,965 ஒப்பந்தக் கூலிகள் பிஜிக்கு கொண்டு செல்லப்பட்டனர். 42 கப்பல்களில் பிஜித் தீவுக்கு 87 பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏறக்குறைய 45,000 பேர் வட இந்தியத் துறைமுகங்களிலிருந்தும், 15,000 பேர் தென்னிந்தியாவிலிருந்தும் கரும்புத் தோட்ட வேலைகளுக்காக சென்றிருக்கிறார்கள்.**

உரிமையாளர்களுக்கு படகு மூலம் அவர்களது இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக குழுக்களாக பிரிக்கப்பட்டனர். பின்னர் கரும்புத் தோட்டங்களுக்கு கிர்மிட்டியர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

## கரும்புத் தோட்டங்களில் அடிமை வாழ்வு

இடம்பெயர்க்கப்பட்டவர்களின் வாழ்க்கை இறுதியில் செழிப்புற்ற அடிமைத்தனத்தின் மனிதாபிமானமற்ற நடைமுறையில் வெளிப்பட்டது. கிர்மிட்டியர்கள் அதிகாலை 3 மணிக்கு பானிவல்லா (தண்ணீர் வாலி) மற்றும் வெற்றுத் தட்டுக்களின் உரத்த சத்தத்தால் எழுப்பப்பட்டனர். மகாத்மா காந்தியின் தூதரான ரெவரெண்ட் ஜான் ஆண்ட்ரூஸ் தயாரித்த பிஜி பற்றிய அறிக்கையின்படி, அதிகாலை 3 மணி முதல் 4 மணி வரையான காலப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான கிர்மிட்டியர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அளவுக்கு மீறிய துன்பத்திற்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகியிருந்தமையே தற்கொலைக்கான காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண்களின் பற்றாக்குறையும் கரும்புத் தோட்டங்களில் கடுமையான சமூக நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. கிர்மிட்டிய பெண்கள் அனுபவித்த கொடுமைகளை பலகணவர் மணம் வழக்குகளில் (Cases of polyandry) அறியக்கூடியதாக இருக்கிறது. அதன்படி, ஒப்பந்தக் கூலிகள் சென்ற நாடுகளில் அதிக சிசுக்கொலை விகிதத்தை பிஜி பதிவு செய்துள்ளது. கர்ப்பம் தரித்தல் வேலைக்கு இடையூறு என்று அகற்றப்பட்டுள்ளது. 1910 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22 ஆம் திகதி, குழந்தைப் பெற்று ஆறு நாட்கள் கடந்த நரைனி என்ற கிர்மிட்டியப் பெண்ணுக்கு, சிகடோகா டிராம்லைனில் சுத்தியலால் கற்களை உடைக்கும் வேலை கொடுக்கப்பட்டது. அவளால் அந்த வேலையைச் சமாளிக்க முடியவில்லை. அதனைப் பார்த்த மேற்பார்வையாளனாக இருந்த ஹரோல்ட் ப்லோம்ஃபீல்ட் என்ற வெள்ளையன் அப்பெண்ணின் தலைமுடியைப் பிடித்து இழுத்து, அவளின் முகத்தை கற்களில் மோதினான். பலத்த காயம் அடைந்த அப்பெண்ணுக்கு இறுதியில் பைத்தியம் பிடித்துப்போனது. அவள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டாள். ப்ளூம்ஃபீல்ட் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் அவன் தண்டனையிலிருந்து தப்பினான்.

பசுபிக் பெருங்கடலின் மத்தியில் சிறு புள்ளியாகக் கண்ணில்படும் பிஜித் தீவில் தம் மக்கள் இவ்வாறான கொடுமைகள் அனுபவிப்பதைப் பார்த்து "தெற்கு மாகடலுக்கு நடுவினிலே அங்கோர் கண்ணற்ற தீவினிலே" என்று மகாகவி பாரதி பாடிப் புலம்பினார்.

1912 நவம்பர் 4 இல், நௌசோரியில் கிர்மிட்டிய பெண்களுடன் பணிபுரிந்த மெத்தடிஸ்ட் மிஷனரியைச் சேர்ந்த ஹன்னா டட்லி என்பவர் "கரும்புத் தோட்டங்களில் வேலைகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் கிர்மிட்டிய பெண்களின் முகங்களில் நிலைத்திருக்கும் பயமும் விரக்தியும் என்னை வேட்டையாடுகிறது. எங்களது தோழர்களை கிரிமிட்டியா என்ற அவப்பெயரில் இருந்தும், ஒப்பந்த முறையில் இருந்தும் மீட்டெடுங்கள்" என்று இந்தியத் தலைவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதுகிறார். 1919 ஆம் ஆண்டில் இந்தியாவில் பொதுமக்களின் அழுத்தம் காரணமாக, ஒப்பந்தத் கூலி முறை முடிவுக்கு வந்தது.

ஒப்பந்தக்காலம் முடிவடைந்து மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பியவர்களில் பலரை அவர்களது குடும்பத்தவர்கள் நிராகரித்துள்ளது. காலாபானியைக்



கடந்த பின்னர் ஒப்பந்தக் கூலிகளாக சென்றவர்கள் தங்களது சாதிகளை இழந்துவிட்டதாக குற்றம் சாட்டி ஒதுக்கப்பட்டனர். கல்கத்தாவின் மெடியாப்ரூஸில் உள்ள டிப்போக்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் சிக்கித் தவித்து, ஆதரவற்ற நிலையில் இருந்தனர். அதனால், அவர்களில் பலர் மீண்டும் பிஜிக்குத் திரும்பி வந்து தங்களது அவல நிலையைத் கூறினர். அதனால், பிஜியிலேயே தங்குவதற்கான முடிவுடன் திரும்பிச் சென்றவர்களால் பழைய கலாச்சாரம் மெல்ல சிதைவடைந்து தனித்துவமான புதிய வடிவங்களை கலாச்சாரம் பெற்றது. பிஜி சென்றவர்களில் ஏறக்குறைய 30,000 பேரே இந்தியாவிற்குத் திரும்பினர்.

## பிஜியில் வேர்கொண்ட கிர்மிட்டியர்களின் கலாச்சாரம்

1879 – 1919 இற்கு இந்தியத் தன்மையின் ஒரு புதிய புலம்பெயர் துணைக் கலாச்சாரம் பிஜியில் வேரூன்றியது. கிர்மிட்டியர்கள் பெரும்பாலும் ஐக்கிய மாகாணங்களில் இருந்து வந்தவர்கள், இருப்பினும் ஏறக்குறைய 15 சதவீதம் பேர் தெற்கிலிருந்து வந்தவர்கள். இந்திய துணைக்கண்டத்தின் அவதி மற்றும் போஜ்புரி ஆகிய பேச்சு வழக்குகள் மற்ற மொழிகளை விட மேலோங்கி, ஒரு தனித்துவமான மொழியாக்கத்தை உருவாக்கியது. இது பிஜி ஹிந்தி என்று அழைக்கப்பட்டது. இது ஹிந்தியின் திரிபு என்றாலும், 1950களில் வெளியான பாலிவுட் படங்களிலிருந்து வலிமையையும் செல்வாக்கையும் பெற்றது. பிஜி இந்தி உருதுவின் சாற்றையும் கொண்டிருக்கிறது. அது அம்மொழிக்கு தனித்துவமான தரத்தை சேர்க்கிறது. இன்று தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்களின் சந்ததியினர் பிஜி ஹிந்தி, தமிழ் மொழிகளை பேசுகின்றனர், அதே நேரத்தில் தெலுங்கு மற்றும் மலையாள மொழிகள் இளைய தலைமுறையினரிடையே பேசப்படுவதில்லை.

இந்தோ-பிஜிய கலாச்சாரத்தின் மீது உடனடி தாக்கங்கள் (தாய்நாட்டில் இருந்து தோன்றியவை தவிர) மேற்கத்திய கலாச்சாரத்தில் இருந்து வந்தன. ஏனெனில் பிஜித் தீவில் ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையே தினசரி உறவுகளில் அதிக தொடர்பு இருந்தது. பழங்குடி மக்கள் பெரும்பாலும் தனித்து வசித்ததால், ஐரோப்பிய காலனித்துவ மூலோபாயத்தின்படி, இந்தோ-பிஜியர்களுடன் தொடர்புகொள்வதில் இருந்து கட்டுப்படுத்தப்பட்டதால், பூர்வீக பிஜிய கலாச்சாரத்தின் வெளிப்பாடு



மட்டுப்படுத்தப்பட்டது. இருப்பினும், 1970களில் பிஜியின் சுதந்திரத்தைத் தொடர்ந்து, இந்தோ-பிஜிய கலாச்சாரம் நாட்டிற்குள் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டது. ஐரோப்பியர்கள் வெளியேறியதாலும், பூர்வீக தன்னலக்குழு முறையான அதிகாரத்தைப் பெற்றதாலும், பூர்வீக கலாச்சாரத்துடன் அதிக தொடர்பு இருந்தபோதிலும், மேற்கத்திய கலாச்சாரத்தின் தாக்கம் வலுவாக இருந்தது. இந்தோ-பிஜிய கலாச்சாரம் ஒப்பீட்டளவில் தெளிவற்ற நிலையில் உருவானது, இருப்பினும் மேற்கத்திய கலாச்சாரத்துடனான அதன் தொடர்பு மூலம் சுத்திகரிக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்போது பிஜிக்கு வெளியேயும் அதன் தனித்துவமான தன்மையை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இன்று முற்றிலுமாக பிஜி இந்தியர்கள் தமது இந்திய உறவுகளுடனான உறவை துண்டித்துக்கொண்டுள்ளனர். தமது தாய்நாடான பிஜியில் நிலைகொண்டுவிட்டனர்.



# தோழர் மல்லிகை சி.குமார்

**மா.ஜீவன்**

ஈழத்தில் மலையக சிறுகதைத்தளத்திலும் மலையக கவிதை தளத்திலும் மிகச்சிறந்த படைப்பாளிகளின் வரிசையில் முக்கிய இடத்தினைப் பெறக்கூடிய படைப்பாளிகளில் மல்லிகை சி.குமார் அவர்களுக்கும் பாரிய ஈடுபாடும், இடமும் உண்டு என்பது நாமறிந்த உண்மையே. அந்த வகையில் மலையகத்தில் தனக்கென ஒரு தனி முத்திரை பதித்து வாழ்நாள் முழுவதும் மலையக மக்களுக்காக எழுத்தின் ஊடாக குரல் கொடுத்து வந்த மல்லிகை சி.குமார் என்னும் மக்கள் கவிஞர் இன்று நம்மோடு இல்லை என்பது நமக்கு பெரும் இழப்பே. மலையக மண்வாசனை சொட்ட சொட்ட எம்மக்களின் வாழ்வியலை தன் படைப்பிலக்கியத்தின் ஊடாக பறைசாற்றி நின்ற கவிஞர், சிறுகதையாசிரியர், ஓவியர் என பன்முக பரிமாணம் கொண்ட மூத்த இலக்கியவாதி கவிஞர் மல்லிகை சி.குமார் என்றால் அது மிகையாகாது.

இறுதிவரை மக்கள் விடுதலையின்பால் தீரமுடன் செயற்பட்டும் எழுதியும் வந்த படைப்பிலக்கியவாதியை இழந்து நிற்கிறது மலையகம். பேருக்கும் புகழுக்கும், பகட்டுக்கும் (ஆடம்பரம், தற்பெருமை) பின்னால் பலர் ஓடுகையில் தனது கடின உழைப்பை மாத்திரமே வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டு தன் பேனா முனையில் மலையக மக்களின் வாழ்வியலையும், எம்மவர்களின் விடுதலையும் நெஞ்சுரத்துடன் எங்கும் பேசியவர். நேரடி அரசியல் அமைப்புக்களில் செயற்பாட்டாளராக இல்லாத போதும் தன் படைப்பிலக்கியத்தின் ஊடாக சோர்ந்து போகாது அரசியல் அறப்போர் புரிந்தவர்.

மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்க செயற்பாடுகளின் போது களத்தில் அவர் எழுதி வாசித்த கவிதைகள் மலையகம் மண் மீதும் மக்கள் மீதும் அவர் கொண்டிருந்த அபரிவிதமான பற்றுக்கு இன்னுமோர் சான்றாகும். தனது கவிதைகள், சிறுகதைகளின் மூலம் மலையக மக்களின் வாழ்க்கையை எந்தவித கற்பனையும் ஒப்பனையுமிற்றி உள்ளதை உள்ளவாறே பதிவு செய்தது மட்டுமின்றி முதலாளித்துவ மற்றும் தொழிற்சங்க அரசியலை எள்ளி நகையாடி பல எதிரிகளையும் துரோகிகளையும் சம்பாரித்து இறுதிவரை சமூக விடுதலையை தனது எழுத்துக்களால் வழியுறுத்தி வந்துள்ளார் என்றே கூறவேண்டும்.

எழில்கொஞ்சும் மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்திலே தலவாக்கலை பெரிய மல்லிகை பூ தோட்டத்தில் சின்னையா கதிராய் தம்பதியருக்கு மூன்றாவது பிள்ளையாக 1944.01.04 இல் பிறந்த சிவகுமார் தனது ஆரம்ப கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் தலவாக்கலை சுமண மகா வித்தியாலயத்தில் கற்றார். ஆரம்பத்தில் ஒரு தோட்ட தொழிலாளியாக இருந்த அவர் அக்காலகட்டத்திலேயே அடக்கு முறைகளுக்கு எதிராக பல போராட்ட கவிதைகளை எழுதி புரட்சியை ஏற்படுத்தியவர்.

**"சீதை மட்டுமா**
**இங்கு**
**கொண்டு வரப்பட்டார்**
**நாங்களும் தான்**

**சீதையை மீட்க**
**ராமன் வந்தான்**
**எங்களை மீட்க**

ராமானுஜம் வந்தான்
எங்களின் பாதியை மீட்ட
ராமானுஜத்தால் ஏன் மீதியை மீட்க முடியவில்லை

கடவுச்சீட்டின்
கடைசித் தேதிப்படி
நாங்கள் என்றோ
காலாவதியான ஜென்மங்கள்

கப்பலே ஓடாதபோது
கடலைத் தாண்டவில்லை
என்ற குத்தலுக்கு ஆளான
குற்றவாளிகள்

தண்டனையால் எங்களுள்
பலருக்கு வேலை
நிறுத்தப்பட்டு பட்டினியே
விநியோகிக்கப்படுகிறது.....

என தொடரும் கவிதைகள் இவற்றுக்கு எடுத்துக்காட்டுக்களே....!



அக்காலப்பகுதியில் தமிழகத்தில் வெளிவந்த ஆனந்த விகடன் வார இதழினூடாக தமிழ் நாட்டில் "வர்ண சித்திரக்கல்லூரியில்" தபால் மூலம் சித்திரக்கலையைக் கற்றார். இவர் வரைந்த சித்திரமொன்று சர்வதேச ரீதியில் விருது பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இந்த ஓவியம் இன்று லண்டனின் உள்ளதாக அவரின் மகள் சுகுணா தெரிவித்தார்)

தனது சகோதரரான ராசு வழிநடத்தில் பயணம் செய்த இவர் முருகன் சிவலிங்கத்தின் நாடக பட்டறைக்குள் வலம் பெற்று தன்னை வளர்த்துக்கொண்டு வளர்ச்சியடைந்தார். பிற்காலத்தில் எழுத்து துறையில் கால் பதித்தபோது தமது சொந்த பிறப்பிடமான 'மல்லிகையை' அடைமொழியாக வைத்து மல்லிகை சி.குமார் என்று எழுத தொடங்கினார். பிறந்த மண்ணோடும் பிறந்த தோட்டத்தையும் தமது பெயரோடு சேர்த்து வாழ்ந்து வந்தார். தலவாக்கலை சுமண மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான சி.குமார் காலப்போக்கில் தோட்டத்தொழிலை தூக்கியெறிந்து விட்டு தலவாக்கலை நகரிலுள்ள கால்நடை வைத்தியசாலையில் கடமையாற்றிய அட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவத்தின் ஸ்தாபகர் ஜெப்ரி அபேசகர ஊடாக வெளி உலகத்திற்கு அறிமுகமானார். மலையக மக்களின் விடுதலை வேட்கையை எடுத்துக் காட்டும் வகையில் அவர் தீட்டியிருந்த ஓவியங்கள் இன்றும் உயிரோட்டத்துடன் வாழ்கின்றது எனலாம்.



முதன் முதலில் வீரகேசரி பத்திரிகையில் 'பூரணி' என்ற சிறுகதையோடு ஆரம்பமான இவரது பயணம் பிற்பட்ட காலங்களில் தினகரன், வீரகேசரி மற்றும் வானவில் சஞ்சிகைகளில் மலையகம் சார் கதைகளையும் கவிதைகளையும் எழுதி வந்ததோடு இவரது படைப்புகளுக்கு வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பும் கிடைத்தது.

மலையக எழுத்தாளர்களாக காணப்பட்ட குறிஞ்சி நாடன், குறிஞ்சி தென்னவன், மூக்கன், எஸ்.சிவஞானம் ஆகியோரின் கவிதைகளோடு சி.குமார் எழுதிய சிறுகதை மற்றும் நேசமணி எழுதிய கட்டுரை ஆகியவற்றை சேர்த்து 'அழிப்பு' என்ற பெயரில் ஜெப்ரி அபேசகர மற்றும் அவரது மனைவி அன்னத்தாய் அபேசேகர இணைந்து புத்தகமாக வெளியிட்டனர்.

இவரது முதற்படைப்பான 'மாடும் வீடும்' கவிதைத் தொகுதி 1995 ஆம் ஆண்டு மறைந்த மிகப்பெரிய எழுத்தாளுமையான டொமினிக் ஜீவா அவர்களினால் தொகுக்கப்பட்டு, கவிப்பேரரசு வைரமுத்துவின் அணிந்துரையோடும் 1000 பிரதிநிதிகள் அச்சிடப்பட்டு 1995 ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்டது. தொடர்ந்து இவரது இரண்டாவது படைப்பு 2001 ஆம் ஆண்டு சாரல் பதிப்பகத்தால் அச்சிடப்பட்டு 'மனுஷியம்' எனும் தலைப்புடன் சிறுகதைத் தொகுதியாக வெளியிடப்பட்டது. நீண்டதொரு இடைவெளிக்குப் பிறகு 2020 ஆம் ஆண்டு 'வேடத்தனம்' சிறுகதை தொகுதி வெளியிடப்பட்டது.

தனது படைப்புகளுக்காகவும் இலக்கிய ஆளுமைகளுக்காவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் இவருக்கு தமிழ்மணி விருது வழங்கி கௌரவித்தார். மேலும் 2017 ஆம் ஆண்டு கலைமாமணி விருதும், கலாபூஷணம் விருதும் இவரது படைப்புகளிக்கு கிடைத்த பெரும் கௌரவிப்புகளாக கொள்ளலாம்.

இவ்வாறு படைப்புலகில் தனக்கென ஓர் இடம் பதித்து வாழ்ந்து வந்த தோழர் சி.குமார் அவர்கள் தனது இறுதிக்காலத்திலே சுகவீனமுற்றிருந்த நிலையில் தனது 76 ஆவது அகவையில் 2020 ஜனவரி 26 ஆம் திகதி காலமானார்.

"மனித சிந்தனையை தளையிட்டுக் கட்டிய விலங்குகளையெல்லாம் தறித்தெறிய வேண்டும், என்ற காரணத்துக்காக எவனொருவன் தன் வாழ்நாளையே அர்ப்பணித்து வாழ்கிறானானோ, அவனே மனித ஜாதியில் உயர்ந்தவன்." என்ற தாய் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளுக்கேற்பவும், தேயிலைச் செடியின் வேர்களுக்குள் உரமாகிப்போன நமக்கான வஞ்சிக்கப்பட்ட வரலாறுகள் தொடரும் வரை தோழர் இன்று நம்முடன் இல்லையென்றாலும் அவரது பெயரும் அத்தோட்டமும் அவரது படைப்புகளும் மறுக்கப்படவோ மறைக்கப்படவோ இயலாத ஒன்றே●





# நேற்று ஹிசாலினி இன்று ராஜகுமாரி நாளை?

**A.R.ரொஹான்**
**லிந்துலை**

மலையக மக்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து இருநூறு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டதாக சிலர் மார்தட்டிக் கொண்டிருக்கிற காலத்தில் மலையக மக்களின் வாழ்நிலை எவ்வாறு மாற்றமடைந்துள்ளது; அவர்களின் வாழ்க்கைத்தரமானது எவ்வாறு அதிகரித்துக் காணப்படுகின்றது; அவர்களுக்கான சமூக அங்கீகாரம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை நாம் சிந்திக்க வேண்டியது சாலப்பொருத்தமானதாக அமையும். அதிலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த பெண்களின் நிலை எவ்வாறானதாக அமைந்துள்ளது என்பதை ஆராய்வதே எமது நோக்கமாகும். எனவே மலையகத்தைச் சேர்ந்த பெண்களின் உரிமைகள் இன்று எவ்வாறு காணப்படுகின்றது; நடைமுறையில் அவர்களுக்குரிய உரிமைகளை அவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றதா? என்பதோடு அவர்களின் உரிமைகள் எந்த அளவுக்கு மீறப்படாமலிருக்கின்றது என்பது தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

**இன்று செல்வந்தர்களின் வீட்டிலுள்ள செல்லப்பிராணிகளுக்கு காணப்படுகின்ற சலுகைகளும் உரிமைகளும் கூட வீட்டு பணிப்பெண்களாக பணி புரிகின்ற மலையக பெண்களுக்கு கிடையாதா?**

மிக அண்மையில் அதாவது கடந்த மே மாதம் 11 ஆம் திகதி தெமோதரை பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 42 வயதான R.ராஜகுமாரி என்பவர் தனது குடும்ப வறுமை காரணமாக கொழும்பிலுள்ள நடிகையும் தொழிலதிபருமான சுதர்மா நெத்திகுமாரவின் வீட்டில் பணிபுரியும் காலப்பகுதியில் தங்க நகையை திருடியதாகக் கூறி மேற்கொண்ட முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பொலீசாரினால் கைது செய்யப்பட்டு மறுநாள் அதாவது, மே 12 அன்று பரிதாபகரமாக மரணம் அடைந்த செய்தி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதோடு, மனச்சாட்சியுள்ள மனிதர்களின் மனதை உலுக்கும் சம்பவமாக காணப்படுகின்றது. இந்த சம்பவம் தொடர்பாக தற்போது பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பொலீசார் இவரை கைது செய்த போதும் தடுத்து வைத்திருந்த போதும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் முறையாக பின்பற்றப்படவில்லை என தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதேபோல், இவர் பொலிசாரின் தடுப்பு காவலில் இருக்கின்ற போது தாக்குதலுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டாரா என்கின்ற சந்தேகம் வலுப்பெற்றுள்ளது. அத்தோடு தற்போது அவரது உடல் வீதியோரத்திலிருந்து

கைப்பற்றப்பட்டதாக கூறும் போலிசாரின் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்கள் பல்வேறு சந்தேகங்களை கிளப்பிக் கொண்டிருக்கின்றன. எதுஎவ்வாறாயினும் இவ்வாறான சம்பவங்கள் காலகாலமாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்பதுதான் உண்மை.

இந்த சம்பவம் தொடர்பாக வெலிக்கடை பொலீஸ் நிலையத்தை சேர்ந்த 4 பொலீஸ் அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. ஒரு சப் இன்ஸ்பெக்டர், இரண்டு சார்ஜன் தரத்திலான உத்தியோத்தர்கள், ஒரு கான்ஸ்டபிள் உட்பட நான்கு பேர் இடை நிறுத்தப்பட்டுள்ளதோடு இரண்டு பெண் உத்தியோகத்தர்கள் உட்பட மூவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

ராஜகுமாரியின் கணவர் இதுதொடர்பில் கருத்து தெரிவித்தபோது, போலிஸ் நிலையத்தில் கடுமையான தாக்குதலுக்கு உட்பட்டிருந்த ராஜகுமாரி தொலைபேசியில் தொடர்புகொண்டு தன்னை காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டதாக தெரிவித்தார். பொலிஸ் தரப்பிலிருந்து பத்தாயிரம் ரூபாய் உதவித்தொகை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை பல்வேறு சந்தேகங்களை கிளறியுள்ளது. இவர்களது வறுமையை பயன்படுத்தி வெறும் பத்தாயிரம் ரூபாவை கொடுத்து இவர்களை மௌனியாக்கி விடலாம் என பொலிஸ் தரப்பு எண்ணியுள்ளதா என்ற கேள்வி எழுகின்றது.

இன்று செல்வந்தர்களின் வீட்டிலுள்ள செல்லப்பிராணிகளுக்கு காணப்படுகின்ற சலுகைகளும் உரிமைகளும் கூட வீட்டு பணிப்பெண்களாக பணி புரிகின்ற மலையக பெண்களுக்கு கிடையாதா? ஒரு



**ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வாக்குரிமை வழங்கப்பட்டு மீண்டும் மீண்டும் பறிக்கப்பட்டது. இவ்வாறு எல்லா வகையிலும் எம் மலையகத் தமிழ் சமூகத்திற்கு நடந்தது கவலைக்கிடமான அநியாயங்கள் என்று தான் கூற வேண்டும். 1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமைக்கு உதவும் அடுத்த படிநிலையில் அதுவரை காலமும் நடைமுறையில் இருந்த கிராமசபை முறைமையை பிரதேச சபையாக மாற்றியமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டே பிரதேச சபைகள் சட்டம் உருவாக்கப்பட்டது. இதன்போது மாற்றமுறும் கிராம சபை முறையில் ஏற்கெனவே உள்வாங்கப்பட்டிருக்காத மலையகத் தமிழ்ச் சமூகம் பிரதேச சபை சட்டத்திலிருந்து விலக்கிவைக்கப்பட்டனர். அப்போது அமைச்சுப் பதவிகளில் தன்னை அலங்கரித்து கொண்டிருந்த மலையக தலைமைகளும் இது குறித்து அக்கறை அற்று இருந்துள்ளனர் என்பது மலையக மக்களின் சாபக்கேடு.**

மலையகத் தாயின் உயிருக்கான மதிப்பு இவ்வளவுதானா? எனும் கேள்விகள் ஒவ்வொருவர் மனதையும் துளைத்துக் கொண்டிருக்கின்றன.

மலையகப் பெண்கள் பெருமளவில் வீட்டுப் பணிப் பெண்களாக பணிபுரியும் பின்னணியை சற்று ஆராய்ந்தால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கூலி தொழிலாளர்களாக கொண்டுவரப்பட்ட மலையக சமூகத்தினரில் பெரும்பாலானோர் இன்று அவற்றிலிருந்து விடுபட்டு வெவ்வேறு தொழில்துறைகளை நோக்கி சென்றுவிட்டனர். கணிசமானோர் இன்னும் தோட்ட தொழிலாளர்களாகவே வாழ்க்கை நடத்தி வருகின்ற அதேவேளை, அவர்களில் பெரும்பாலானோர் போதிய சம்பளம் இன்மை, தோட்ட நிர்வாகத்தின் அடாவடிகள், சுரண்டல்கள், குழந்தைகளின் கல்வித்தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வருமானமின்மை போன்ற காரணிகளால் வீட்டு பணிப்பெண்களாக உள்நாட்டிலும் (பிரதானமாக கொழும்பு நகரத்தில்) அதேப்போல் வெளிநாடுகளிலும் பணிபுரிந்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் பணிப்பெண்களாக பணிபுரிந்து வருவதில் கணிசமானோர் இன்னும் மலையக பெண்களாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு தலைநகரத்தைப் பொறுத்தளவில் வீட்டு பணிப்பெண்களாக பணிபுரிந்து வருவதில் மிகப்பெரும்பான்மையானோர் இந்த மலையக பெண்களேயாவார். இது எந்தளவுக்கு என்றால் தலைநகர் கொழும்பில் மட்டுமின்றி நாடு முழுவதுமே எங்காவது ஒரு வீட்டில் ஒரு வீட்டு பணிப்பெண் தேவை என்றால் நிச்சயமாக மலையகத் தொடர்பு காணப்படுகின்ற தங்களுக்கு பரிச்சயமானவர்களைத் தொடர்புகொண்டு தமது வீட்டுக்கு குழந்தைகளை பராமரித்துக்கொள்ள, வயதான தாயை தந்தையை பராமரித்துக்கொள்ள, சமையல் செய்ய, துணி துவைக்க, வீட்டைப் பராமரிக்க மற்றும் இதர வீட்டு பணிகளை மேற்கொள்ள ஒரு மலையகப் பெண் கிடைக்க மாட்டாளா என்று கேட்குமளவிற்கு முற்று முழுதாக மலையகத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் வீட்டு பணிப்பெண்களாக அடையாளப்படுத்தப்படும் அளவிற்கு அவர்களின் பங்கு வீட்டு பணிப்பெண் துறையில் காணப்படுகின்றமை கவலைக்குரியதே.

இவ்வாறு வீட்டுப் பணிப்பெண்களாக செல்கின்ற மலையகப் பெண்களில் பெரும்பாலானோர் சந்திக்கின்ற பிரச்சனைகள் எண்ணிக்கையில் அடங்காதவை. இவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் பல்வேறு விதமானவையாக காணப்பட்ட போதிலும் பொதுவாக போதிய ஊதியம் வழங்கப்படாமை, பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகுதல் தொடங்கி பரிதாபகரமாக உயிரை இழத்தல் வரை நீண்டுக்கொண்டே செல்கின்றது. காலத்துக்குக் காலம் இவ்வாறான பிரச்சினைகள் வெளிப்படுத்தப்படுகின்ற போதிலும் அவை சில காலத்திற்கு அரசியல் தேவை கருதி களத்திற்கு கொண்டுவரப்படுவதும் பிறகு அமைதியாக அந்த விடயங்கள் மறக்கடிக்கப்படுவதும் வழமையாக தொடர்கின்றது. இந்த வரிசையில் அண்மைக் காலங்களில் ஹிஷாலினி, ரமணி, ராஜகுமாரி போன்ற பெயர்கள் உச்சரிக்கப்படுகின்றன.

இந்தப் பிரச்சினைகளுக்கான ஒரு நிரந்தர தீர்வோ அல்லது குறித்த சம்பவங்களுக்குரிய முறையான தீர்வுகளோ இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதுதான் கசப்பான உண்மை. குறிப்பிட்ட சில காலத்துக்கு அரசியல் இலாபம் கருதியோ வேறு திசைதிருப்பும் தேவைகளுக்காகவோ இவ்வாறான விடயங்கள் வெளிக்கொணரப்படுகின்ற போதிலும் இந்த சூழ்நிலைகள் மாறுகின்றபோது தங்களுடைய அரசியல் தேவைகளுக்கமைய அதாவது, இந்தப் பிரச்சினைகளளுக்கான கோஷங்களை முன்வைக்கின்ற அரசியல்வாதிகளின் தனிப்பட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றபோது இவற்றை அரசியல்வாதிகள் ஒத்தி போடுகின்றமையை அல்லது மறக்கடிக்கின்றமையை தொடர்ந்தும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. மக்கள் பிரச்சினைகளை தங்களின் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்துகின்ற அரசியல்வாதிகள் தொடர்ந்தும் இந்த மக்களின் பிரச்சினைகளையும் மக்களையும் பகடைக்காய்களாக பயன்படுத்தி வருவது வழமையாகிப் போய்விட்டது.

பொதுவாக தொழிலாளர் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல சட்ட நடைமுறைகள் காணப்படுகின்றன. சம்பள சபைகள் கட்டளை சட்டம், ஊழியர் சேமலாப நிதிச் சட்டம், ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம், மகப்பேற்று நலன்கள் சட்டம்,

**தலைநகரத்தைப் பொறுத்தளவில் வீட்டு பணிப்பெண்களாக பணிபுரிந்து வருவதில் மிகப்பெரும்பான்மையானோர் இந்த மலையக பெண்களேயாவார். இது எந்தளவுக்கு என்றால் தலைநகர் கொழும்பில் மட்டுமின்றி நாடு முழுவதுமே எங்காவது ஒரு வீட்டில் ஒரு வீட்டு பணிப்பெண் தேவை என்றால் நிச்சயமாக மலையகத் தொடர்பு காணப்படுகின்ற தங்களுக்கு பரிச்சயமானவர்களைத் தொடர்புகொண்டு தமது வீட்டுக்கு குழந்தைகளை பராமரித்துக்கொள்ள, வயதான தாயை, தந்தையை பராமரித்துக்கொள்ள, சமையல் செய்ய, துணி துவைக்க, வீட்டைப் பராமரிக்க மற்றும் இதர வீட்டு பணிகளை மேற்கொள்ள ஒரு மலையகப் பெண் கிடைக்க மாட்டாளா என்று கேட்குமளவிற்கு முற்று முழுதாக மலையகத்தைச் சேர்ந்த பெண் பிள்ளைகள் வீட்டு பணிப்பெண்களாக அடையாளப்படுத்தப்படும் அளவிற்கு அவர்களின் பங்கு வீட்டு பணிப்பெண் துறையில் காணப்படுகின்றமை கவலைக்குரியதே.**

தொழிலாளர் நட்ட ஈட்டு கட்டளை சட்டம் போன்ற பல்வேறு சட்டங்கள் முறைசார் தொழிலாளர்களுக்கு காணப்படுகின்றன. எனினும், வீட்டு பணிப்பெண்கள் தொடர்பாக குறித்த சட்டங்கள் செல்வாக்கு செலுத்துவதில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் காணப்படுகின்றன என்பதோடு முறையான சட்ட ஏற்பாடுகள் எதுவும் இவர்களுக்கு கிடையாது என்பதே இவ்வாறான பல்வேறு துஷ்பிரயோக, சுரண்டல், உயிரிழப்பு நடவடிக்கைகளுக்கான பிரதான காரணியாக விளங்குகின்றது. வளர்ச்சி அடைந்த நாடுகளை பொறுத்தளவில் இவ்வாறான சட்ட பின்னணிகள் மிகவும் இறுக்கமாக காணப்படுகின்றன. உதாரணமாக அமெரிக்காவில் சில வருடங்களுக்கு முன்னால் அமெரிக்காவுக்கான அப்போதைய இந்திய துணை தூதுவரிடம் பணிப்பெண்ணாக பணிபுரிந்ததவருக்கான சட்ட ஏற்பாடுகள் மீறப்பட்டதாக கூறி துணைத்தூதுவர் கைது செய்யப்பட்டமையை சுட்டிக்காட்ட முடியும்.

இலங்கையில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இவற்றுக்கு ஒரு முடிவே கிடையாதா? இவற்றுக்கு எவ்வாறு தீர்வு காண்பது? என ஒவ்வொருவர் மனதிலும் கேள்விகள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றன. எனவே, இவற்றுக்கான உடனடி தீர்வாக முறையான சட்ட ஏற்பாடுகள் கொண்டு வரப்படுவதோடு, அவை இறுக்கமான முறையில் பின்பற்றப்படுவதை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாக காணப்படுகின்றது. அதேப்போல், நீண்ட கால அல்லது நிரந்தர தீர்வாக மலையகத் தோட்டப்புறங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கான நிரந்தர தொழில் வாய்ப்பினை உறுதிப்படுத்துகின்ற ஒரு சமூக கட்டமைப்பை உருவாக்க வேண்டியது அவசியமாகும். அவ்வப்போதான தற்காலிக தீர்வுகளை மட்டும் நம்பியிராமல் நிரந்தர தீர்வு கொண்டுவரப்பட வேண்டுமாக இருந்தால் அதற்கான அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, சட்ட அடிப்படைகளில் மாற்றம் தேவைப்படுகின்றது. நீதி நியாயம் மிக்க ஒரு வருமான பரம்பலை ஏற்படுத்துவதன் ஊடாக, வாழ்வாதார வருமான வாய்ப்பினை அனைவரும் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துவதனூடாக மட்டுமே எதிர்காலத்தில் மலையகத்தை சேர்ந்த இளைஞர், யுவதிகள் இவ்வாறான தொழில்களை நோக்கி நகராமல் தமக்குரிய பொருளாதார தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய ஒரு சூழல் உருவாகும். எனவே, அவ்வாறான ஒரு சூழலை உருவாக்குவதில் சமூக கட்டமைப்பு மாற்றம் என்பது பிரதான பங்கு வகிக்கின்றது. வெகுசிலரே நன்மைகளை அனுபவிக்கத்தக்க ஏற்றத்தாழ்வு மிக்க சமூக அமைப்புக்குப் பதிலாக பெருமளவிலான மக்கள் நலன்களை பெற்றுக் கொள்ளக்கூடிய, சமத்துவத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய, சமூக நீதியினை பெற்றுக்கொள்ள கூடிய உண்மையான சமூக கட்டமைப்பு மாற்றம் என்பதின் அவசியம் ஆயிரம் மடங்காக அதிகரித்து காணப்படுகின்ற காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே, சமூக மாற்றத்திற்கான அறைகூவல் ஒன்றே இவை அனைத்திற்கும் நிரந்தர தீர்வாக அமைய முடியும்.



# கனவுகள் சிதைக்கப்பட்ட

# புலம்பெயர் பணிப்பெண்கள்

மஹேஸ்வரி விஜயனந்தன்

"பல கனவுகளோடு வானில் முதற்தடவையாக பறந்த என்னுடன், என்னுடைய கனவுகளும் என்னை விட உயரத்தில் பறந்து கொண்டிருந்தன.

அப்பப்பா எத்தனை கனவுகள் முதலில் சொந்தமாக வீடு கட்ட வேண்டும். எனது பிள்ளைகளுக்கு தேவையான அத்தனை வசதிகளையும் எவ்வித குறைபாடுமின்றி பூர்த்தி செய்ய வேண்டும். கணவருக்கு சொந்த வியாபாரத்தை ஆரம்பிக்க உதவி செய்ய வேண்டும். இப்படி எத்தனை கனவுகள், எத்தனை ஆசைகள் அத்தனையும் அம்மண்ணில் கால் வைத்து இரண்டொரு மாதங்களில் வெடித்துச் சிதறி, இன்று என் குடும்பத்துக்கு சுமையாய் வாழ்ந்து வருகிறேன்".

இது இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம்பெயர் பணிப்பெண்ணாகச் சென்று பல்வேறு இன்னல்களுக்கும் கொடுமைகளுக்கும் சித்திரவைதைகளுக்கும் உள்ளாகி நாடு திரும்பி, இன்றைய பொருளாதார சிக்கலில் சிக்கி சுழன்று கொண்டிருக்கும் குடும்பத் தலைவியான விக்னேஸ்வரியின் கதை.

## கை, கால்கள் உடைந்த நிலையில் ஓமானிலிருந்து நாடு திரும்பிய விக்னேஸ்வரி

3 பிள்ளைகளின் தாயான 40 வயதுடைய இவர் பதுளை கொள்ளுமண்டி தோட்டத்தைச்- (டொட்லன்ட் டிவிசன்) சேர்ந்தவர்.

இந்த வருடம் ஜனவரி மாதம் குருநாகல் பகுதியிலுள்ள முகவர் நிலையம் ஒன்றின் ஊடாக ஓமான் நாட்டுக்குச் சென்றுள்ளார்.

அந்த வீட்டில் வீட்டுவேலை உள்ளிட்ட அனைத்து வேலைகளையும் தான் ஒருவர் மாத்திரமே செய்து வந்த நிலையில், அந்த வீட்டிலுள்ள 3 சிறுவர்களையும் பராமரிக்கும் பணியும் தனக்கே வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், தான் சமையலறையில் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது, வீட்டு எஜமானியுடன் உறங்கிக் கொண்டிருந்த பிள்ளையொன்று நித்திரையில் இருந்து எழும்பி வந்து, குளியலறைக்கு அருகில் வழுக்கி விழுந்துள்ளது.

குழந்தை வழுக்கி விழுந்த மறுகணமே தன்னை இரண்டாவது மாடிக்கு வீட்டு எஜமானி அழைத்து, எதுவும் கூறாமல், கேளாமல் வீட்டின் இரண்டாவது மாடியிலிருந்து கீழே முதலாவது மாடிக்கு தள்ளி விட்டாதாகத் தெரிவித்தார்.

இதனால் தனது கையும், காலும் பலமாக அடிப்பட்டு தான் கதறியதை அடுத்து, வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் அங்கு 6 ஊசிகளை தனக்கு ஏற்றியதன் பின்னர், தன்னை ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் ஒப்படைத்ததாகவும் விக்னேஸ்வரி கண்ணீருடன் தெரிவித்தார்.

அங்கு 20 நாட்கள் தான் தங்க வைக்கப்பட்டிருந்ததாகவும் இதன்போது கடுமையான வலி தனக்கு ஏற்பட்ட போதும் ஓமான் தூதரக அதிகாரிகள் தனக்கு வலி நிவாரணி மாத்திரையைக் கூட வாங்கிக்கொடுக்க முன்வரவில்லை என்றார்.

இந்த நிலையில் மார்ச் மாதம் ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக இலங்கைக்கு வந்து சேர்ந்ததாகவும் தேகாரோக்கியத்துடன் சென்ற தான் கை, கால்கள் முடக்கப்பட்ட நிலையில் நாட்டை வந்தடைந்ததாகத் தெரிவித்தார்.

தற்போது தனது கை, கால் முறிவிற்காக ஒரு நாளைக்கு 1300 ரூபாய் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை ஆயுர்வேத மருத்துவத்துக்காக



செல்வதாகவும் ஓட்டோவில் சென்று வர ஒரு நாளைக்கு 2500 ரூபாய் செலவாவதாகவும் தெரிவித்தார்.

தன்னை கணவன் பராமரித்து கொள்வதால் அவரும் தொழில் வாய்ப்பை இழந்துவிட்டதாகவும் இதனால் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன், அன்றாட உணவுக்கே மிகவும் கஸ்டப்படுவதாகத் தெரிவித்தார்.

இவர் மட்டுமல்ல இப்படி எத்தனையோ பெண்கள் புலம்பெயர் தொழிலாளர்களாகச் சென்று தமது எதிர்காலத்தையே சூனியமாக்கிக்கொண்டு நாடு திரும்பியுள்ளனர்.

இவரைப் போன்று பணிப்பெண்களாகச் சென்று பாதிக்கப்பட்ட பெண்களின் தற்போதைய பொருளாதார நிலை என்ன? அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? அவர்களுக்கு அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் எவ்வாறான உதவிகள் கிடைக்கின்றன. என்பது தொடர்பான ஓர் ஆய்வுக்கட்டுரையாக இது அமைகின்றது.

தகவல் அறியும் சட்டமூலம் ஊடாக பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய, 2009ஆம் ஆண்டு வரை 2019ஆம் ஆண்டு வரையான பத்து வருட காலப்பகுதியில் துன்புறுத்தல்களுக்கு உள்ளானமை தொடர்பில் தமது பணியகத்துக்குக்கு மொத்தமாக 11,038 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவித்து ஆண்டுகளின் அடிப்படையில் முறைப்பாட்டாளர்களின் எண்ணிக்கையை வழங்கியிருந்ததுடன், இதில் அதிகமான முறைப்பாடுகள் பெண்களிடம் இருந்தே கிடைக்கப் பெற்றதாகவும் தெரிவித்திருந்தனர்.

அதேபோல் மத்திய கிழக்கு நாடுகளான டுபாய், குவைட், லெபனான், சவுதிஅரேபியா, ஜோர்டான், கட்டார், பஹ்ரென், ஓமான் ஆகிய நாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்றவர்களே துன்புறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அத்தகவல்களில் தெரிவித்திருந்தனர்.

குறித்த புலம்பெயர் தொழிலாளர்களுள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி உடல் அவயங்களை இழந்தவர்கள் மாத்திரமல்ல. அதிகமானவர்கள் தொழில் புரியும் போது மரணமடைந்துள்ளதாகவும் அவர்களின் எண்ணிக்கை, அவர்கள் பணிபுரிந்த நாடுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.

அதற்கமைய 2019ஆம் ஆண்டை மாத்திரம் நாம் எடுத்துக்கொண்டால் சவுதியில் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் 43 பேர் மரணித்துள்ளதுடன், குவைட்டில் 30 பேரும், கட்டாரில் 20 பேரும் டுபாயில் 11 பேரும் லெபனானில் 4 பேரும் ஜோர்டானில் 5 பேரும் ஓமானில் மூவரும் என 133 புலம்பெயர் தொழிலாளர்கள் தொழில் புரியும் சந்தர்ப்பங்களில் உயிரிழந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேபோல் 2019ஆம் ஆண்டு மாத்திரம் 103 சடலங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதில் புலம்பெயர் தொழிலாளர்களாக இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று தொழில் புரியும் பெரும்பான்மையினரான பெண்களே காணப்படுகின்றனர்.

இப்புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் உழைப்பே அன்று தொடக்கம் இன்று வரை நாட்டின் அந்நிய செலாவணிக்கு பாரிய பங்களிப்பை வழங்குகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதிலும் கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதார வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கையை மீட்கும் ஒரு தரப்பினராகவும் இப்புலம்பெயர் தொழிலாளர்கள்

காணப்படுகின்றனர்.

இதற்கமைய கடந்த சில மாதங்களாகவே இலங்கையிலிருந்து மத்திய கிழக்குக்குச் செல்லும் புலம்பெயர் தொழிலாளர்கள் குறிப்பாக பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முன்பாக காணப்படும் வரிசைகள் பறைசாற்றுகின்றன.

எனினும் இவ்வாறு இலங்கையின் பொருளாதாரத்துக்கு பங்களிப்பை வழங்கும் புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பு, அவர்களுக்கான காப்பீடுகள், நலன்புரி விடயங்கள், அவர்கள் மீதான அரசாங்கத்தின் அக்கறை என்பன மோசமான நிலையிலேயே

காணப்படுகின்றமை வேதனையளிக்கும் விடயமாகவே காணப்படுகின்றது.

## இது மற்றுமொரு பெண்ணான ஹமானியாவின் சோகக் கதை

7 பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையான ஹமானியா கொட்டகலை –கிரிஸ்லஸ்பாம் பகுதியைச் சேர்ந்தவர். 2013ஆம் தனது 40ஆவது வயதில் ஆண்டு கொழும்பு மாளிகாவத்தை பகுதியிலுள்ள முகவர் நிலையம் ஊடாக சவுதி நாட்டுக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

அவர் சவுதிக்குச் சென்று இரண்டு மாதங்களில் உயரமான ஏணியொன்றில் ஏறி துப்புரவு பணியை செய்யுமாறு வீட்டின் எஜமான் பணித்த போது, தான் ஏணியில் ஏறி துப்புரவு செய்யும் போது ஏணியிலிருந்து விழுந்து விட்டதாகவும் இதன்போது தனது முதுகுப் பகுதி எலும்பு முறிந்ததைப் போன்று தான் உணர்ந்ததுடன், கடுமையான வலியையும் எதிர்கொண்டதாகத் தெரிவித்தார்.

எனினும் தான் விழுந்ததையும் பொருட்படுத்தாத வீட்டினர் உடனடியாக தன்னை வேலை செய்யுமாறு பணித்த போது, தன்னால் வேலை செய்ய முடியவில்லை. தன்னை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு தான் மன்றாடிய போதும் தன்னை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லாமல் அறையொன்றில் பூட்டி கடுமையாக தாக்கியதாகவும் அப்பெண் தெரிவித்தார்.

அத்துடன் 3 நாட்கள் உண்ண உணவின்றி தான்



மலசலக்கூட நீரை அருந்தியதாகவும் பின்னர் அந்த நாட்டில் தன்னை பொறுப்பேற்ற முகவரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவித்தார்.

முகவரிடம் ஒப்படைக்கப்பட்ட தான் அங்கும் கடுமையான சித்திரவதைக்கு உள்ளானதாகவும் சப்பாத்து கால்கள் அந்த முகவர் தன்னை அடிவயிற்றில் தாக்கி கொடுமைப்படுத்தியதாகத் தெரிவித்தார்.

இறுதியில் கொழும்பிலுள்ள முகவருடன் தான் கதைக்க அப்பெண்ணுக்கு கதைக்கும் வாய்ப்பு ஏற்ப டுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

தன்னிடம் "தான் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறேன்" என தெரிவித்த இலங்கை முகவர், சவுதி முகவரிடம் " அவளை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்" என கூறியதாகவும் சவுதி முகவர் அந்த முகவருடன் பேசும் போது அலைபேசியை ஸ்பீக்கரில் போட்ட போது தான் கொழும்பு முகவரின் வார்த்தைகளைக் கேட்டு அதிர்ந்ததாகவும் தெரிவித்தார்.

பின்னர் அந்த முகவரிடமிருந்து தப்பிச் சென்று சவுதியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த போது சுமார் 6 மாதங்கள் தூதரகம் ஊடாக தனக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் தான் நாடு

திரும்பியதாகவும் தான் நாடு திரும்பிய பின்னர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளால் தனக்கு 12,000 ரூபாய் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் அன்று சவுதியில் தான் கொடூரமாக தாக்கப்பட்டதன் விளைவாக அண்மையில் முதுகில் சத்திரசிகிச்சை ஒன்றை செய்ய நேரிட்டுள்ளதாகவும் இதனால் தான் கடினமான வேலைகளை செய்ய முடியாமல் இருப்பதுடன் தொழில் வாய்ப்பை இழந்து பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ளதாகவும் 50 வயதான ஹமானியா தெரிவித்தார்.

## முல்லைத்தீவைச் சேர்ந்த சயந்தினி

இவ்வாறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி நாடு திரும்பியுள்ள மற்றுமொரு பெண் தான் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் பிரிவின் 50 வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் நவநீதன் சயந்தினி கூறியவை

2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் டுபாய்க்கு பணிப்பெண்ணாகச் சென்று இந்த வருடம் ஜனவரி மாதம் நாடு திரும்பியப் பெண்ணான சயந்தினியின் கணவர் மேசன் தொழில் செய்து வருகிறார்.

தனது கணவரின் உழைப்பு குடும்பத்தை கொண்டு நடத்த முடியாத இக்கட்டான நிலையில்,தான் டுபாய்க்கு பணிப்பெண்ணாகச் சென்றதாகத் தெரிவித்தார்.

எனினும் தான் சென்ற வீட்டில் தனக்கு சரியாக உணவு வழங்கவில்லை என்பதுடன், தான் அங்கு சென்று ஒரு மாதத்தில் குளிப்பதற்கு கூட அனுமதி வழங்கப்படவில்லை என்றார்.

மேலும் தனது வீட்டாருடன் தொலைபேசியில் கூட உரையாட வாய்ப்பு வழங்கப்படாத நிலையில், அதே வீட்டில் தன்னுடன் தங்கியிருந்த மேலும் இரண்டு பணிப்பெண்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளை கண்டு பயந்த தான் அங்கிருந்து தப்பியோடி, டுபாயிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்து, அவர்கள் மூலமாக நாட்டை வந்தடைந்ததாகத் தெரிவித்தார்.

நாடு திரும்பி தற்போது மிகவும் மோசமான பொருளாதார சிக்கலுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை 2022ஆம் ஆண்டு மொத்தமாக 3 இலட்சத்து 11ஆயிரத்து 56 பேர் பல்வேறு நாடுகளுக்கு தொழில்வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ள நிலையில், குவைட்டுக்கு 54,998 பெண்களும் சவுதி அரேபியாவுக்கு 26,577 பெண்களும் டுபாய்க்கு 13,105 பெண்களும் ஓமானுக்கு 7,850 பெண்களும் ஜோர்டானுக்கு ஆடைத் தொழிற்சாலைகளுக்க 3932 பெண்களும் தொழில்வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரியான சந்தருவன் தெரிவித்தார்.

அத்துடன் பஹ்ரெயின் நாட்டுக்கு 1597 பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாகவும் சென்றுள்ளதாகத் தெரிவித்த அவர், மொத்தமாக கடந்தாண்டு பல நாடுகளுக்கு 74,007 பெண்கள் பணிப்பெண்களாகச் சென்றுள்ளனர் என்றார்.

மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சவுதிக்கு 14,321 பெண்கள் தொழில்வாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளதுடன், குவைட்டுக்கு 12,510 பேரும் பஹ்ரெயினுக்கு 677 பேரும் ஜோர்டானுக்கு 1027 பெண்களும் ஓமானுக்கு 1384 பெண்களும் டுபாய்க்கு 2980 பெண்களும் தொழில்வாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளனர் என்றார்.

## பழங்குடியினப் பெண்ணான சுவர்ணா மல்காந்தி என்ன சொல்கிறார் என பார்ப்போம்

இந்த வருட ஆரம்பத்தில் இரண்டு வருட கனவுகளுடன் சவுதி மண்ணில் கால்வைத்த மஹியங்கனை- தம்பானை- குரும்கும்பர கிராமத்தைச் சேர்ந்த 24 வயதான பழங்குடியினப் பெண்ணான இவர், தான் புரிந்த வீட்டில் செய்யப்பட்ட பல்வேறு உடல், உள ரீதியான துன்புறுத்தல்கள் காரணமாக இரண்டே மாதத்தில் நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

ஒரு பிள்ளையின் தாயான இவர் கணவனால் கைவிடப்பட்ட பெண். எனவே தனது மகனுக்காகவும் பொருளாதார பிரச்சினையிலிருந்து விடிவைத் தேடி, கொழும்பிலுள்ள முகவர் ஊடாக சவுதி நாட்டுக்கு பயணமாகி, இரண்டு மாதங்களில் நாடு திரும்பியிருந்தாலும் இவரால் வெளியில் சென்று தொழில் செய்ய முடியாத அளவுக்கு இவருக்கு கிராமத்தவர்கள் விபசாரி பட்டம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து கண்ணீர் வடித்தார்.

தற்போது தனக்கு 3 மாதத்துக்கு ஒரு தடவை கிடைக்கும் 6,000 ரூபாய் சமுர்த்தி நிதி மூலமாகவே தனது குடும்பத்தைப் பராமரிப்பதாகத் தெரிவித்த இவர், தான் பணிபுரிந்த வீட்டில் தன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காரணமாக நாடு திரும்பியதும் 4 நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்தமைக்கான மருத்துவ சான்றிதழ்கள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

சமுர்த்தியைத் தவிர வேறு எந்த உதவியும் கிடைப்பதில்லை எனத் தெரிவித்த அவர், தனது கிராம உத்தியோகத்தர் ஊடாக பதுளை பிரதேச செயலகத்துக்கு காப்புறுதி தொகைக்கான ஆவணங்களை அனுப்பியுள்ளதாகவும் இதுவரை காப்புறுதி பணமும் கிடைக்கவில்லை என்றார்.

இதேவேளை தன் மீதான கிராமத்தவர்களின் பார்வை கீழ்நிலையில் இருப்பதால் தன்னை தாய் தொழிலுக்கு அனுப்புவதில்லை என்றும் தாய் வாராந்த சந்தைக்கு தொழிலுக்குச் சென்று கொண்டு வரும் சொற்ப பணத்திலேயே தனது குடும்ப தேவைகளை நிறைவேற்றுவதாகவும் தெரிவித்தார்.

## மஸ்கெலியா- குயின்ஸ்லேண்ட் தோட்டத்தைச் சேர்ந்த 50 வயதான ஜெயலட்சுமி

தான் 97ஆம் ஆண்டு 23 வயதில் ஜோர்டான் நாட்டுக்கு பணிப்பெண்ணாகச் சென்று அங்கு வீடொன்றில் உயரமான யன்னல்களை கழுவிக் கொண்டிருந்த போது தவறி விழுந்து விட்டதாகத் தெரிவித்தார். இதனால் தனது கால்கள் இரண்டும் மறுத்துப் போனதால் 11 நாட்கள் அங்குள்ள வைத்தியசாலையில் தங்க வைக்கப்பட்டு 3 மாதத்தில் இலங்கைக்கு திரும்பி அனுப்பிவிட்டதாகத் தெரிவித்தார்.

தற்போது 27 வருடங்களாக தனது கால்கள் முழுமையாக செயலிழந்து உள்ளதால் சக்கர நாட்காலியின் உதவியுடனேயே தன்னுடைய அன்றாட பணிகளை செய்து வருவதாகவும் தான் வெளிநாடு செல்லும் முன் மருத்துவ காப்பீடை பெறவில்லை என்பதால் தனது கால்களை சுகப்படுத்துவதற்கான வழி கிடைக்காமல் முழுமையாக முடங்கிப் போயுள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய பெண்களுக்கு அவர்கள் பணி செய்த வீடுகளை விட அதிக கொடுமைகளை, அந்தந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் அனுபவிப்பதாக பலர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

இதேவேளை ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக இந்த மாதம் 8ஆம் திகதி தொடக்கம் இரண்டு வாரகாலமாக 72 இலங்கைப் பணிப்பெண்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். அதாவது தாம் பணிபுரிந்த வீடுகளில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கும் இப்பெண்கள் தம்மை உடனடியாக இலங்கைக்கு அனுப்புமாறு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் அந்நாட்டு பொலிஸாரினால் அழைத்துச்செல்லப்பட்டதுடன், விசாரணைகளின் பின்னர் அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவர் என இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# முத்துமணியை கண்ணீர்த் துளியாக்கிய அரசியல்



சிறப்பான முன்மாதிரியைப் பெற்றுக்கொள்வதற்காகவே இலங்கை பற்றி உலகின் பெரும்பாலானவர்கள் கவனஞ்செலுத்தி உள்ளார்கள். அது குறுகிய காலத்தில் உலகின் படுமோசமான வங்குரோத்து நிலையை அடைந்த நாடாக மாற்றியமை பற்றிய மிகச்சிறந்த உதாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே. தற்போது நாட்டின் தலைவராக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க 2048 இல் நாட்டை மீட்டெடுப்பதற்கான இலக்கினைக் கொடுத்துள்ளார். வெறுமனே அல்ல IMF இன் நெறிப்படுத்தலின் கீழாகும். உலக வங்கியிடமிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் மேலும் கடன்பெற்று இந்த வேலையை சாதிப்பாராம் !

நாட்டில் இரண்டுகோடியே இருபது இலட்சம் மக்கள் இந்த பொய்யை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா? இன்றேல் நடந்துகொண்டிருப்பது என்ன என்பது பற்றி விழிப்புடன் விளங்கிகொண்டு இருக்கிறார்களா? எனும் விளிம்பிற்கு வந்துள்ளார்கள். மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படாத ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி என்றவகையில் பலவற்றை புரிந்துவருகிறார். அதைவிட பலவற்றை கூறிக்கொண்டும் இருக்கிறார். செய்துகொண்டிருப்பதோ நாட்டை பொருளாதாரரீதியாக முழுமையாகவே IMF இன் பிடிக்குள்

**பிரியதர்ஷன தயாரத்ன**
**தமிழில் : மகேந்திரன் கிறிஸ்டோபர்**

**"தற்போது நாட்டின் தலைவராக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க 2048 இல் நாட்டை மீட்டெடுப்பதற்கான இலக்கினைக் கொடுத்துள்ளார். வெறுமனே அல்ல IMF இன் நெறிப்படுத்தலின் கீழாகும். உலக வங்கியிடமிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் மேலும் கடன்பெற்று இந்த வேலையை சாதிப்பாராம் !**
**நாட்டில் இரண்டு கோடியே இருபது இலட்சம் மக்கள் இந்த பொய்யை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா? இன்றேல் நடந்துகொண்டிருப்பது என்ன என்பது பற்றி விழிப்புடன் விளங்கிகொண்டு இருக்கிறார்களா? எனும் விளிம்பிற்கு வந்துள்ளார்கள்.**

அகப்படுத்துவதாகும். ஜனநாயகம், மனித உரிமைகள், சுதந்திரத்தை சுருக்குவதாகும். சட்டம், அரசியலமைப்பினை பட்டப்பகலில் அப்பட்டமாக மீறுவதாகும்.

இவையனைத்தையும்விட மிகுந்த அழிவுமிக்க பலம்பொருந்திய ஒன்றில் அவர் தற்போது பிரவேசித்துள்ளார். அது வேறு ஒன்றுமல்ல பாரிய அழிவுமிக்க, இனவாத, மதவாத, தீவிரவாத போக்கினைத் தூண்டிவிடுவதாகும். சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சமவாயத்திற்கு திரிபுநிலையடைந்த பொருள்விளக்கம் கொடுத்து இனவாதத்தையும் மதவாதத்தையும் சுதந்திரமாகத் தூண்டிவிட இடமளித்துள்ளார்.இது ரணில் விக்கிரமசிங்க மிகவும் கவனமாக செயற்படுத்துவதொன்றாகும். கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட நாசகார ராஜபக்ஷ குடும்பம் மற்றும் அவர்களைச் சுற்றிக் குழுமியிருந்த இந்த நாட்டின்

**ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் மூலோபாய அணுகுமுறையானது கோட்டாபயவை முதன்மையாகக்கொண்ட ராஜபக்ஷாக்களின் அழிவுமிக்க மூலோபாயமே என்பது நன்றாகவே உறுதியாகின்றது. மஞ்சல் காவியாடை தரித்த ஒருசில ஆட்களை புதிதாக களத்தில் இறக்கியுள்ளார். அதற்கு மேலதிகமாக கோட்டாபயவின் காலத்தில் இருந்த டேன் பிரியசாத் போன்றவர்கள் களமிறங்கி தீர்வுக்கட்டமான செயற்பொறுப்பினைத் தொடங்கி உள்ளார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அரசியல் மூலோபாயம் நன்றாக உறுதியாகின்ற சிறந்த சாட்சியமொன்று இருக்கிறது. "சித்தார்த்த குமாரனை" அவமதித்தாக கூறுகின்ற குற்றச்சாட்டின்கீழ் நடாஷா எதிரிசூரிய கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால், அதைவிட பாரதூரமானவகையில் அவமதித்த திலீப் ஜயவீரவிற்கு அது சம்பந்தமாக எந்தவிதமான குற்றச்சாட்டும் ஜூன் மாதம் தொடக்கம்வரை முன்வைக்கப்படவில்லை.**

படுமோசமான பாதாள உலக தீத்தொழில் புரிபவர்கள் மிகவும் முதன்மையாக கடைப்பிடித்த நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க தற்போது முன்னெடுத்து வருகிறார். உண்மையிலேயே இனங்களுக்கிடையில் மதங்களுக்கிடையில் பதற்றநிலைமை, பிரிவினைகளை ஏற்படுத்தி வருபவர்கள் ஒருபுறம் இருக்கையில் சுதந்திரமான கருத்துக்களை அடக்கியாள்வதற்காகவே ICCPR சமவாயத்தை அமுலாக்கி வருகிறார்.

இதன் மூலமாக ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் மூலோபாய அணுகுமுறையானது கோட்டாபயவை முதன்மையாகக்கொண்ட ராஜபக்ஷாக்களின் அழிவுமிக்க மூலோபாயமே என்பது நன்றாகவே உறுதியாகின்றது. மஞ்சல் காவியாடை தரித்த ஒருசில ஆட்களை புதிதாக களத்தில் இறக்கியுள்ளார். அதற்கு மேலதிகமாக கோட்டாபயவின் காலத்தில் இருந்த டேன் பிரியசாத் போன்றவர்கள் களமிறங்கி தீர்வுக்கட்டமான செயற்பொறுப்பினைத் தொடங்கி உள்ளார்கள். ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அரசியல் மூலோபாயம் நன்றாக உறுதியாகின்ற சிறந்த சாட்சியமொன்று இருக்கிறது. "சித்தார்த்த குமாரனை" அவமதித்தாக கூறுகின்ற குற்றச்சாட்டின்கீழ் நடாஷா எதிரிசூரிய கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். ஆனால், அதைவிட பாரதூரமானவகையில் அவமதித்த திலீப் ஜயவீரவிற்கு அது சம்பந்தமாக எந்தவிதமான குற்றச்சாட்டும் ஜூன் மாதம் தொடக்கம்வரை முன்வைக்கப்படவில்லை.

இலங்கை மக்களின் ஒற்றுமை, நல்லிணக்கம் சம்பந்தமாக இவ்வாறான அரசியல் மூலோபாய செயற்பாங்கிற்கு ஏற்கெனவே உயிர்கொடுத்துள்ள ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் சம்பந்தமான இலக்கினை 2048 இற்கே கொடுத்துள்ளார். 25 வருடங்கள் முன்நோக்கியதாகும். இலங்கை ஆங்கிலேய பேரரசுவாதிகளிடமிருந்து 100 வருடங்கள் பூர்த்தியடைகின்ற 2048 அளவில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதாகவே கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே இனவாத, மதவாத செயற்பாட்டாளர்கள் சிலருக்கு இடமளித்துள்ளதோடு மக்களை மட்டற்றவகையில் பிழிந்தெடுத்து வதைத்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப 2048 வரை கால அவகாசம் கொடுத்துள்ளார். அது வரை மக்கள் எவ்வாறு வாழவேண்டும்? கடுமையாக பொருளாதார அழுத்தம் காரணமாக வெளிநாட்டுத் தொழில்தேடிச் செல்கின்ற



பெண்களை ஓமானில் விபச்சாரிகளாக ஏலவிற்பனை செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் நாட்டுக்குள்ளே தீத்தொழில் புரிகின்ற பொருளாதார பலவான்களின் வீடுகளில் பணிப்பெண்களாக வாழ்க்கையை முடிச்சுப்போட்டுக்கொள்ள முயற்சிசெய்கின்ற ராஜ்குமாரி போன்றவர்கள் பொலீஸ் நிலையத்திற்குள்ளே கொலைசெய்யப்படுகிறார்கள். ஏழ்மை காரணமாக 20 தேங்காய்களைத் திருடியவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி மாபெரும் கொள்ளையைப் புரிந்த அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூரில் சுகமாக வாழ்கிறார். இந்நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லீம் பேதமின்றி அன்றைய பொழுதைக் கழிக்க முடியாமல் மக்கள் 2048 வரை இன்னல்களை அனுபவித்துக்கொள்ள வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க கூறிவருகிறார்.

ஆனால் நாங்கள் மிகவும் தெளிவாக விளங்கிகொள்வேண்டிய விடயமொன்று இருக்கின்றது. இந்த நாட்டை உலகின் வங்குரோத்து நிலையுற்ற நாடாக அழிவுப் பாதையில் இட்டுச்சென்றவர்கள் இந்நாட்டு மக்களல்ல என்பதாகும். 1948 இல் ஆங்கில பேரரசுவாதிகளிடமிருந்து இந்நாட்டு சிங்கள பிரபுக்களின் கைகளுக்கு ஆட்சியதிகாரம் கைமாறியவேளையில் ஆசியாவின் இரண்டாவது பலம்பொருந்திய பொருளாதாரமாக கட்டியெழுப்பப்பட்டிருந்தது. முதலாவது இடம் ஜப்பான். ஜப்பானின் தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் 90 டொலர்களாக அமைகையில் இலங்கையில் அது 89 டொலர்களாக விளங்கியது. தற்போது டொலர் ஒதுக்கத்தை பூச்சியநிலைக்கு இழுத்துபோட்டுள்ளநிலையில் இன்று 1948 இல் இந்நாட்டின் டொலர் ஒதுக்கம் 17 மாதங்கள் இறக்குமதிகளை மேற்கொள்ள போதுமான அளவில் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. வெளிநாடுகளுக்கு இலங்கை கடன்பட்டிருக்கவில்லை.

இந்த அளவுக்கு பொருளாதாரமொன்று ஆங்கிலேயர்களின் கீழ் எவ்வாறு கட்டியெழுப்பப் பட்டிருந்தது என்பதை இதன்போது விளங்கிக் கொள்ளவேண்டியது முக்கியமானதாகும். சிங்கள மக்கள் அன்று மட்டுப்படுத்தப்பட்ட விவசாயப் பொருளாதாரத்திலேயே இருந்தார்கள். சேனையும் வயலுமாகும். அதற்கு மேலதிகமாக தேயிலை, இரப்பர், தெங்கு மட்டுப்படுத்தப்பட்ட சிங்களவர் மத்தியில் மாத்திரம் நிலவியது. அவர்கள் சிங்கள பிரபுக்கள் வர்க்கத்தின் ஆங்கிலேயர்களின் அன்பை வென்றெடுத்த மட்டுப்படுத்தப்பட்ட குழுவினராவர். முஸ்லீம் மக்களில் பெரும்பாலானவர்கள் வழமைபோல் வியாபாரத்தை முதன்மையாகக் கொண்டிருந்தார்கள். எனினும் நாட்டுக்கு டொலர்களை அல்லது தங்கப் பவுணை ஈட்டித்தந்த ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பினை நல்கியவர்கள் தமிழ் மக்களாவர். இவர்கள் பெருந்தோட்டச் செய்கைக்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தமிழ் மக்களாவர். குறிப்பாக தேயிலை மற்றும் இறப்பர் செய்கைகளின் அடியில் இருப்பது இந்த மக்களின் இரத்தமும் வாழ்க்கையுமாகும். அவர்கள் இந்த நாட்டுக்கு

கூலியடிமைகளாக கொண்டுவரப்பட்டு 200 வருடங்களாகின்றன. இன்றும் அவர்களின் அடிமைநிலையில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. அவர்களின் மட்டத்திற்கு நாட்டின் பெரும்பான்மை வறிய சிங்கள மற்றும் முஸ்லீம் மக்களும் இழுத்துப்போடப்பட்டு விட்டார்கள்.

நிலவுகையில் 2022 ஆம் ஆண்டில் அது 63.1% ஆகும். அன்று கடன் வட்டி வீதம் 12% ஆக அமைகையில் 2022 இல் கிரடிட் கார்ட்களுக்காக 36% ஆகவும் ஏனைய கடன்களுக்காக 28% ஆகவும் நிலவியது. இந்த வட்டிவீதம் தனியார் துறையின் அடகுக் கடன்களை கருத்திற்கொள்ளவில்லை. அன்று தனியாள்

**கடுமையாக பொருளாதார அழுத்தம் காரணமாக வெளிநாட்டுத் தொழில்தேடிச் செல்கின்ற பெண்களை ஓமானில் விபச்சாரிகளாக ஏலவிற்பனை செய்ய இடமளிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் நாட்டுக்குள்ளே தீத்தொழில் புரிகின்ற பொருளாதார பலவான்களின் வீடுகளில் பணிப்பெண்களாக வாழ்க்கையை முடிச்சுப்போட்டுக்கொள்ள முயற்சிசெய்கின்ற ராஜ்குமாரி போன்றவர்கள் பொலீஸ் நிலையத்திற்குள்ளே கொலைசெய்யப்படுகிறார்கள். ஏழ்மை காரணமாக 20 தேங்காய்களைத் திருடியவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி மாபெரும் கொள்ளையைப் புரிந்த அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூரில் சுகமாக வாழ்கிறார்.**

எம்மில் பெரும்பாலானவர்கள் எவ்விதத்திலும் எதிர்பாராத மாடிவீடுகள் இருக்கின்ற, மோட்டார் கார் இருக்கின்ற குழுவினரும் இந்த மக்களுடன் இணையான மட்டத்திற்கு இழுத்துப்போடப்பட்டுள்ளார்கள். அவர்கள் மாதத்திற்கு ஒரு இலட்சத்தைவிட அதிகமான சம்பளம் பெறுகின்றவர்களாவர். பொதுவில் மக்கள் மீது பொருளாதாரம் மட்டற்ற அழுத்தத்தை ஏற்படுத்தியிருப்பதன் மிகப்பெரிய தாக்கம் இவர்களுக்கே ஏற்பட்டுள்ளது. அவர்களின் வாழ்க்கைமீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமை 36% என்ற அளவுக்கு மிகப்பெரியதாகும். முதலாளித்துவ பொருளாதாரத்திற்கான ஒரு பொருளாதார அளவுகோலாக அமைவது தலைக்குரிய மொத்த தேசிய வருமானமாகும். ஒரு வருடத்திற்குள் ஒரு நாடு என்றவகையில் உற்பத்திசெய்கின்ற தேசிய வருமானத்தின் நிதிசார் மதிப்பீட்டுப் பெறுமதியை நாட்டின் சனத்தொகையால் வகுப்பதன் மூலமாக இந்த அளவுகோல் பெறப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் தலைக்குரிய மொத்த தேசிய வருமானம் 3474 டொலர்களாகும். இந்த எண்ணிக்கை 2012/ 2013 காலத்திற்கே இணையானது. அதாவது பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைமையாகும். 2012 இல் தலைக்குரிய தேசிய வருமானம் 3351 டொலர்களாகும். 2013 இல் அது 3609 டொலர்களாகும். அதாவது இலங்கையின் மக்கள் 2022 வருடத்தின் இறுதியளவில் உண்மையாகவே பொருளாதாரரீதியாக 2012/ 2013 காலத்திலேயே இருந்திருக்கிறார்கள்.

ஆனால் அன்று இருந்த இலங்கையர்மீது இந்தளவுக்கு கடுமையான பொருளாதார அழுத்தம் நிலவவில்லை. அன்று பணவீக்கம் 3.5% ஆக

மீது ஒரு வருடத்திற்குள் சுமத்தப்பட்டிருந்த வரிச்சுமை ரூபா 44,510/- ஆகும். 2022 இல் அது ரூபா 78,950/- ஆகும். அன்று அரசாங்க கடன்களில் தனியாள்மீது சுமத்தப்பட்டிருந்த கடன் சுமை ரூபா 297,892/- ஆக விளங்கியது. 2022 இறுதியளவில் அது ரூபா 1,2939,496/- ஆகும்.

மேலே முன்வைக்கப்பட்டுள்ள புள்ளிவிபரத் தரவுகளுக்கிடையில் அரசாங்கத்தின் கடன் இந்நாட்டின் குடிமக்கள்மீது சுமத்தப்பட்டுள்ள அளவுகள் மீது விசேட கவனஞ் செலுத்துக. 2022 இல் இந்நாட்டு மக்களின் பொருளாதாரம் 2012 இற்கு இணையான கிட்டிய பெறுமானமாக நிலவுவதோடு அன்று தலைக்குரிய கடன் பங்கு ரூபா 297,892/- ஆக இருந்து 2022 இறுதியளவில் அது ரூபா 1,2939,496/- வரை பாரிய கடன்மேடாக மாற்றப்பட்டுள்ளது. தலைக்குரிய வரிச்சுமை ரூபா 44,510/- இல் இருந்து 2022 இல் ரூபா 78,950/- வரை அதிகரித்துள்ளது. தற்போது ரணில் விக்கிரமசிங்க IMF பணிப்புரையின்பேரில் வரிச்சுமையை ஏற்றிக்கொண்டு, கடன்சுமையை எற்றிக்கொண்டு செல்கின்ற இந்த பயணம் 2048 அளவில் எந்த இடத்தில் நிற்கும்? ரணில் விக்கிரமசிங்காக்கள் இப்போது கோட்டாபயவின் பாதையில் பயணித்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவிடுவது மக்கள் இவ்வாறான உண்மையான பிரச்சினைகள் பற்றிக் கவனஞ்செலுத்துவதை தடுப்பதற்காகவே என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது. கீழைத் தேசத்தின் முத்துமணியை கண்ணீர்த்துளியாக மாற்றியது இந்த தெருச்சுற்றி அரசியலே என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும்.

# சோவியத் புரட்சி மலையக இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம்

சதீஸ் செல்வராஜ்

**(19.05.2023 கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "மலையகம் 200" நிகழ்ச்சியில் ஆற்றிய உரை)**



இந்த நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்குகின்ற சாகித்தியரத்னா தி. ஞானசேகரம் அவர்களுக்கு வணக்கம். அதேப்போல், அவையில் கூடியிருக்கின்ற பெருந்தகைகளே! இலக்கிய ஆளுமைகளே! சமூக செயற்பாட்டாளர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

இலங்கையில் மட்டுமல்ல! நம் நாட்டைக் கடந்து பிற நாடுகளிலும், குறிப்பாக மலையக மக்கள் வாழக்கூடிய நிலப்பரப்பில் தற்போது "மலையகம் 200" நிகழ்வுகள் பிரமாண்டமாகவோ அல்லது சிறிய அளவிலோ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவை பலவிதமான எதிர்பார்ப்புகளையும் உள்நோக்கங்களையும் கொண்டமைந்துள்ளன. அதாவது, அரசியல் இலாபத்திற்காக, நிதி வரவிற்காக, பெயருக்கும் புகழுக்கும், ஒரு கடமைக்காக மற்றும் மலையக மக்களினுடைய இருநூற்றாண்டு வாழ்வை மீளாய்வு செய்வதனூடு முன்னகர்தல் போன்ற வெவ்வேறு இலக்குகளைக் கொண்டுள்ளன. ஆனால், நான் இறுதியாக சொன்ன விடயத்தை கருத்திற் கொண்டு மிக சொற்ப அளவிலேயே நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருக்கின்றன. இன்று என்னுடைய உரையையும் இந்த சொற்பமான எண்ணிக்கையோடு இணைக்கிறேன்.

இற்றைக்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிர்பாரா நேரத்தில் ஓர் அழைப்பு வந்தது. அழைத்திருந்தவர் எனது ஆசிரியர் திரு.மதுசூதனன். "தாம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே தொடர்ந்து நடாத்தி வரும் "இலக்கியக் களம்" என்ற உரையாடற் களத்திலே இந்நாட்களில் மலையக மக்கள் பற்றிய விடயம் குறித்து கவனம் செலுத்தி வருகிறோம். அந்த வரிசையில்

உங்களது உரையும் இடம்பெற வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்" என்றார். நான் எதுவும் யோசிக்காது அவருக்கு ஒப்புதல் அளித்துவிட்டு, "மலையக இலக்கியம் குறித்து உரையாற்றினாலும் வர்க்க அரசியல் இல்லாமல் கதைக்க மாட்டேன்." என்று கறாராக சொல்லிவிட்டேன். "உங்களுக்கு எந்தத் தடையும் இல்லை." என்று சொல்லிவிட்டார். அந்தச் சந்தர்ப்பத்திலேயே "சோவியத் புரட்சி மலையக இலக்கியத்தில் ஏற்படுத்திய தாக்கம்" பற்றி உரையாற்றுகிறேன் என்றேன். அந்தத் தலைப்பினூடே மலையக சமூகம் அடுத்தக்கட்டமாக எவ்வாறான உறுதிமிக்க அடியை எடுத்து வைக்க வேண்டும் எனும் பார்வையில் இந்த உரையை இப்போது நகர்த்துகிறேன்.

இந்தியாவின் தென்நாட்டில் இருந்து கொத்தடிமைகளாகவும், ஒப்பந்தக் கூலிகளாகவும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு, இன்று இருநூறு வருட வரலாற்றைக் கொண்டுள்ள இலங்கை மலையக மக்களுடைய வாழ்வை, அவ்வாழ்வோடு ஒன்றரக் கலந்துள்ள பண்பாட்டை, அரசியலை, பொருளாதாரத்தை, போராட்டங்களை, அவர்கள் கண்ட ஏமாற்றங்களை ஆழமாக, நியாயமாக மீளாய்வு செய்து வெளிப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. இது எம்மெல்லோருக்குமான பொறுப்பாகவிருக்கிறது. நான் எடுத்துக் கொண்ட தலைப்பின் வழியே மலையக மக்களை சார்ந்து நிற்கிறேன்.

ரஷ்ய புரட்சி என்பது முதலாளித்துவ வர்க்கத்திடம் இருந்து உழைக்கும் வர்க்கம் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிக் கொண்ட மகத்தான போராட்டத்தைக் குறிக்கும். ஜார் மன்னனின் நிலபிரப்புத்துவ ஆட்சிக்கு முடிவுக்கட்டி, பின் முதலாளித்துவத்தின் தலையில் இருந்த மகுடத்தை ரஷ்ய மக்களின் செம்படை 1917 ஒக்டோபரில் கைப்பற்றி ஆளும் அதிகாரத்தை தம் கையில் தக்கவைத்துக் கொண்டது. இது கோடைகாலத்தில் தவித்த மக்களைத் தேடிவந்த வசந்தகாலமாய் அமைந்தது.

ஆனால், இந்தப் புரட்சிக்கான வித்து புரட்சிக்கு முன்பு அதாவது, சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பே விதைக்கப்பட்டு உயிர்கொடுக்கப்பட்டு வந்தது. ஆம்! ரஷ்ய புரட்சிக்கு வித்திட்ட ரஷ்ய இலக்கியத்தைப் பற்றித்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன். அந்தக் காலக்கட்டத்தில் ரஷ்ய நாட்டிலே கல்வி கற்காதவரின் எண்ணிக்கை 90 விழுக்காடுகளை விடவும் அதிகம். கல்விக் கற்றவர்கள் மிகச் சிலரே இருந்தனர். அதுமட்டுமல்ல! ரஷ்ய இலக்கியமும் கூட 19 ஆம் நூற்றாண்டில்தான் வளர்ச்சி காணவே ஆரம்பித்தது. இது பிரெஞ்சு இலக்கியத்தின் தாக்கத்தால் வளர்ந்தது. ஆசியாவுடனும் சேராமல், ஐரோப்பியருக்கும் கதவை சாத்திவிட்டு தனித்து, அறியாமையில் ஆழ்ந்திருந்த ரஷ்யாவுக்கு இலக்கியத்தில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவர்கள் மகாமன்னன் பீட்டரும் இராணி கத்தரைனும் ஆவர். ஆனால், 1787 இல் பிரான்ஸ் புரட்சி நடைபெற்றபோது, பிரான்ஸில் அரச பரம்பரை வேரறுக்கப்பட்டது. இதனால், அச்சமுற்ற இராணி கத்தரைன் மறுமலர்ச்சி இயக்கங்கள் அத்தனையும் ரஷ்யாவில் சட்டவிரோதமாக்கினாள். எதை எழுதினாலும் அரசாங்க தணிக்கை கடுமையாக பிரயோகிக்கப்பட்டது. அடக்குமுறை தாண்டவமாடியது. ஆளும் வர்க்கம் ஒருபோதும் ஆட்சியதிகாரத்தை சாதாரண மக்களின் கைகளில் ஒப்படைக்க தயாரில்லை என்பதை இந்நிகழ்வு மேலும் ஊர்ஜிதப்படுத்தியது. ஆக, அதிகார வர்க்கத்துடன் மோதாமல் தீர்வு இல்லை என்பதே இறுதியாகியது. இந்தப் போராட்டம் இலக்கியத்தில் வெடித்தது.

**தற்போது "மலையகம் 200" நிகழ்வுகள் பிரமாண்டமாகவோ அல்லது சிறிய அளவிலோ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவை பலவிதமான எதிர்பார்ப்புகளையும் உள்நோக்கங்களையும் கொண்டமைந்துள்ளன. அதாவது, அரசியல் இலாபத்திற்காக, நிதி வரவிற்காக, பெயருக்கும் புகழுக்கும், ஒரு கடமைக்காக மற்றும் மலையக மக்களினுடைய இருநூற்றாண்டு வாழ்வை மீளாய்வு செய்வதனூடு முன்னகர்தல் போன்ற வெவ்வேறு இலக்குகளைக் கொண்டுள்ளன.**

19 ஆம் நூற்றாண்டாகும் போது ரஷ்ய மக்களின் யதார்த்தமான வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்ட இலக்கியங்கள் புரட்சிக்கான வித்தினை விதைத்தது. ஆனால், இது எதிர்காலத்தில் பெரும் போராட்டமாய் வெடிக்கும் என்று அன்று சாதாரண மக்கள் எண்ணியிருக்க வாய்ப்பில்லை. ரஷ்ய மக்களின் அடிமைத்தனப் போக்கு, மக்களின் வாழ்வாதாரத்தின் மீதுள்ள கஷ்டங்கள், தினம் தினம் அவர்கள் படும் வேதனைகள் இவை இலக்கியத்தில் வந்தன. தவிர, அந்த இலக்கியங்கள் இவற்றில் இருந்து விடுபடுவதற்கான

**“நாங்கள் விடுதலைக்காக ஏங்கித் திரிகிறோம். வாலிபன் தன் இன்பக் கனவுகளை நிறைவேற்ற எப்படி எதிர்பார்ப்பானோ, அப்படி எங்களுக்கு விடுதலை தேட நாங்கள் எழுச்சியுற்றிருக்கிறோம். என்னை நம்புங்கள் தோழர்களே! இந்த ரஷ்ய நாட்டிலே அழிந்துபடபோகும் ஆதிக்க வர்க்கத்தின் சமாதியின் மேல் நம் பெயர் பொறிக்கப்படும்.”**

**- ரஷ்யாவின் முதற் கவிஞர் புஸ்கின் -**

பாதையையும் காட்டின. இது ரஷ்ய இலக்கியத்தின் விஷேடத்தன்மையாகும்.

அன்று ரஷ்ய எழுத்தாளர்கள் தங்களுக்குள்ளேயே இவ்வாறு கேள்விகளை எழுப்பிக் கொண்டார்கள், “இந்த அடிமைச் சமுதாயத்திலே நான் ஏன் பிறந்தேன்? இதை சீர்த்திருத்துவது எப்படி? நான் இதற்காக உயிர் விடவும் தயார். ஆனால், அதனால் பயன் உண்டா? பின் என்ன செய்வது?” இதுதான் ரஷ்ய எழுத்தாளர்களுக்கு இருந்த கேள்வி. பின் என்ன செய்வது? எந்த முறையில் செய்வது என்பதைத்தான் காவியத்தில் காட்டினார்கள்.

1819 ஆம் ஆண்டு, ரஷ்யாவின் முதற் கவிஞர் புஸ்கின் “நாட்டுப் புறத்திலே” என்ற கவிதையில் இவ்வாறு பாடுகிறார்.

“நாங்கள் விடுதலைக்காக ஏங்கித் திரிகிறோம். வாலிபன் தன் இன்பக் கனவுகளை நிறைவேற்ற எப்படி எதிர்பார்ப்பானோ, அப்படி எங்களுக்கு விடுதலை தேட நாங்கள் எழுச்சியுற்றிருக்கிறோம். என்னை நம்புங்கள் தோழர்களே! இந்த ரஷ்ய நாட்டிலே அழிந்துபடபோகும் ஆதிக்க வர்க்கத்தின் சமாதியின் மேல் நம் பெயர் பொறிக்கப்படும்.” இவ்வாறான மக்கள் எழுச்சிக்கான வரிகள் வீறுகொண்டு சீறியெழுந்தன. இவை மக்கள் மத்தியில் விடுதலை வேட்கையை விதைத்தன. அதுப்போலவே, கல்விகற்ற சமூகத்திலும் அதிர்வை ஏற்படுத்தியது. அதன் தாக்கம் பல மக்கள் எழுத்தாளர்களை உருவாக்கியது. ஆளும் வர்க்கத்திற்கு எதிரான இலக்கியம் வளர்ந்தது.

புரட்சிக்கு முன்பு கல்வி கற்காதவர்கள் 90 விழுக்காட்டிற்கும் மேல் இருந்த ரஷ்யாவிலே எவ்வாறு இலக்கியம் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தியது என்ற நியாயமான கேள்வி இவ்விடத்தில் உங்கள் மத்தியில் எழ வாய்ப்பிருக்கிறது. எப்படி இந்த இலக்கியங்கள் மக்களுடன் ஒன்றரக் கலந்தன என்பதை விளக்கும் விதமாக ஒரு குட்டிக் கதையைச் சொல்கிறேன்.

ரஷ்யாவில் ஒரு பிரதேசத்தில் அமைந்திருந்த புகையிரத நிலையத்தில் திடீரென்று சலசலப்பு ஏற்படுகிறது. கதிரையில் அமர்ந்திருந்தப்படியே உயிரை துறந்திருந்தவரைச் சுற்றி அங்கிருந்த பயணிகள் உள்ளிட்டவர்கள் சூழ்ந்திருந்தார்கள். அவ்விடத்திற்கு ஓடி வந்த பணியாள் ஒருவன் இறந்தவரைக் கண்டு அதிர்ச்சியடைந்து கண்ணீர் வடிக்கிறான். அங்கு குழுமியிருந்த மக்களின் நிலையும் அதுவாகவே இருந்தது. உடனே, விரைந்த அந்த பணியாள் புகையிரத நிலையத்தில் ஓடிக்கொண்டிருந்த கடிகாரத்தை ஒரு நிமிடம் நிறுத்துகிறான். எல்லோரும் இறந்தவருக்கு மரியாதை செலுத்துகிறார்கள். அவர் ஒரு இலக்கியவாதி! தனது எழுத்துக்களால் மக்களின் பாடுகளை வெளிப்படுத்தியவர். எழுதியவற்றை பொதுவிடங்களில் நின்று மக்களுக்கு உரக்க வாசித்துக் காட்டியவர். சந்தைத் தொகுதிகளிலும், வீதிகளிலும், சந்திகளிலும் இவ்வாறுதான் மக்கள் எழுத்தாளர்கள் தாம் எழுதியவற்றை அன்று மக்களிடத்தில் கொண்டு சேர்த்தார்கள். அந்த மக்கள் படைப்பாளிக்கு உயர்ந்தபட்ச இறுதி மரியாதை இன்று புகையிரத நிலையத்தில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த எழுத்தாளரின் பெயர் எனக்கு நியாபகம் இல்லாத காரணத்தினால் ஆர்வமுள்ள உங்களிடம் அவரைப் பற்றித் தேட நிர்ப்பந்திக்கிறேன்.

வெறுமனே, மக்கள் புரட்சி, போராட்டம் என்று மாத்திரம் தான் இந்த எழுதிக் கொண்டிருந்தார்களா? இதை மட்டுமா தேடி கற்றார்கள் என்று உங்களுக்குள்ளும் கேள்வி எழுந்தால், ஆசான் லெனினிடம் ஓர் இளைஞன் கேட்ட இதே கேள்விக்கு அவர் வழங்கிய பதிலையே உங்களுக்குத் தருகிறேன். ஒருசமயம் ரஷ்யாவில் ஒரு பிராந்தியத்தில் நடந்த நிகழ்வொன்றில் ஓர் இளைஞன் "நீங்கள் கவிஞர் மாயா கோவ்ஸ்கி எழுதிய புரட்சிக் கவிதைகளை விரும்பி படிப்பீர்களா?" என்று கேட்க, அதற்கு லெனின் “நான் மாயா கோவ்ஸ்கியின் புரட்சிக் கவிதைகளை மட்டுமல்ல! புஸ்கினின் காதல் கவிதைக்கும் அடிமைப்பட்டுப் போவேன்.” என்று கூறுகிறார். ஆக, காதல், ஆசாபாசம், போராட்டம், எழுச்சி, விடுதலை அத்தனையும் சார்ந்த

படைப்புகள் மக்களை ஆக்கிரமித்திருந்தன. அதனால், ரஷ்ய இலக்கியங்கள் பூரணத்துவம் கண்டன.

இவ்வாறான ரஷ்ய இலக்கியம் விதைத்த வித்தினாலும், ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட மக்கள் அமைப்பின் திட்டத்தினாலும் 1917 ரஷ்யாவில் புரட்சி வெடிக்க, அது உலகை உலுக்கியது. மார்க்ஸிய சித்தாந்தம் எனும் உயிருக்கு உடலைக் கொடுத்து ஆசான் லெனின் நடைமுறையில் சாதித்துக் காட்டினார். இது ஏகாதிபத்தியவாதிகளையும் முதலாளிகளையும் அச்சுறுத்தியது. சிவப்பு அலை மிகவேகமாக உலகை ஆக்கிரமிக்க புறப்பட்டது. அதனால்தான் மகாகவி பாரதி “அந்தோ எழுந்தது பார் யுகப்புரட்சி” என்று பாடுகிறார். ரெவலூசனுக்கு “புரட்சி” என்ற புது சொல்லையும் தமிழுக்குத் தருகிறார். பாரதி சோஷலிசத்தின்பால் அத்தனை ஈடுபாடு கொண்டிருந்ததற்கும், அதனை வரவேற்றதற்கும் காரணம் அவர் தென்நாட்டிலே கம்யூனிஸ்ட்டுக்களுடன் இணைந்து செயற்பட்டதே காரணம். ஆக, புரட்சிக்கு முன்பே கம்யூனிச சித்தாந்தம் தென்கோடிக்கு வந்திருந்தது. “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! உங்களிடம் இழப்பதற்கு எதுவும் இல்லை, கைவிலங்குகளைத் தவிர. ஆனால், வெல்வதற்கோ ஓர் பொன்னுலகம் உண்டு.” என்று கம்யூனிச அறிக்கையில் மார்க்சும் ஏங்கெல்சும் விடுத்த அறைகூவலின் எதிரொலியாய் இது நடந்தேறியிருந்தது.

அதுமட்டுமல்ல, 1919 ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம்பெற்ற உலக கம்யூனிஸ்ட்டுக்களின் மகாநாட்டிலே பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தார்கள். தென்னிந்தியாவில் இருந்து சிங்காரவேலவரும் பங்களாதேஸில் இருந்து எம்.என்.ராயும் இம்மாநாட்டிற்கு சென்றுள்ளார்கள். இதன் பின்னணியில் தென்நாட்டில் சமதர்மமும் பகுத்தறிவும் அடுத்தக் கட்டத்தை எட்டியது. பெரியாரும் கூட புரட்சிக்குப் பிறகு ரஷ்யாவிற்கு சென்று வந்திருக்கிறார். ரஷ்ய புரட்சி நடத்தப்பட்ட தினத்தில் பிற்காலத்தில் “ரெவலூட்” என்ற ஆங்கில பத்திரிகையையும் பெரியார் ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது. ஆரம்பக்கட்ட பயணம் ஒரு புள்ளியிலேயே தொடங்கியது. “கம்யூனிஸ்ட் அறிக்கை” என்ற உழைக்கும் வர்க்கத்தின் கைநூலையும் பெரியார் “சமதர்ம கோட்பாடு” என்ற பெயரில் தமிழுக்கும் மொழிப்பெயர்த்துள்ளார். ஆனால், பின் நாளில் அவர் சோஷலிச போக்கிற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டார். இது இந்தியச் சூழலில் நிலவிய அரசியல் அதிர்ப்தியால் எழுந்தும் இருக்கலாம். தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் தன் மகனுக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டியதற்கும் காரணம் இல்லாமல் இருந்திருக்க முடியாது! அதற்காக இன்றைய அவர்களது அரசியல் போக்கை அன்றைய சூழலுடன் ஒப்பிட்டு நோக்கவும் முடியாது. நியாயப்படுத்தவும் முடியாது.

அதன்படி, அன்று இந்த மாற்றங்கள் தென்நாட்டில் இருந்து உலகின் பல காலனித்துவ நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்ட மக்களிடமும் போய்ச்சேர்ந்தன. இலங்கையிலும் பெரும் அதிர்வு ஏற்பட்டது. ஏனெனில், இலங்கையின் முதலாவது தொழிலாளர் வர்க்கமும் இந்த தோட்டத் தொழிலாளர்களே!



**1917 ரஷ்யாவில் புரட்சி வெடிக்க, அது உலகை உலுக்கியது. மார்க்ஸிய சித்தாந்தம் எனும் உயிருக்கு உடலைக் கொடுத்து ஆசான் லெனின் நடைமுறையில் சாதித்துக் காட்டினார். இது ஏகாதிபத்தியவாதிகளையும் முதலாளிகளையும் அச்சுறுத்தியது. சிவப்பு அலை மிகவேகமாக உலகை ஆக்கிரமிக்க புறப்பட்டது. அதனால்தான் மகாகவி பாரதி "அந்தோ எழுந்தது பார் யுகப்புரட்சி" என்று பாடுகிறார். ரெவலூசனுக்கு "புரட்சி" என்ற புது சொல்லையும் தமிழுக்குத் தருகிறார். பாரதி சோஷலிசத்தின்பால் அத்தனை ஈடுபாடு கொண்டிருந்ததற்கும், அதனை வரவேற்றதற்கும் காரணம் அவர் தென்நாட்டிலே கம்யூனிஸ்ட்டுக்களுடன் இணைந்து செயற்பட்டதே காரணம். ஆக, புரட்சிக்கு முன்பே கம்யூனிச சித்தாந்தம் தென்கோடிக்கு வந்திருந்தது. "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! உங்களிடம் இழப்பதற்கு எதுவும் இல்லை, கைவிலங்குகளைத் தவிர. ஆனால், வெல்வதற்கோ ஓர் பொன்னுலகம் உண்டு." என்று கம்யூனிச அறிக்கையில் மார்க்சும் ஏங்கெல்சும் விடுத்த அறைகூவலின் எதிரொலியாய் இது நடந்தேறியிருந்தது.**

1915 ஆம் ஆண்டு கோ.நடேசையர் இலங்கைக்கு வந்து மாறுவேடத்தில் தோட்டங்களுக்குள் புகுந்து தோட்டத் தொழிலாளர்களின் துன்பமிகு வாழ்க்கையை கண்டபிறகு அவர்களுக்காக செயற்பட முன்வருகிறார். அதேப்போல, 1921 ஆம் ஆண்டு ஃபிஜித் தீவில் இருந்து இலங்கைக்கு வந்த வழக்கறிஞரும் கம்யூனிஸ்ட்டுமான மணிலால் நடேசையரை சந்திக்கிறார். அந்தளவிற்கு கம்யூனிஸ்ட்டுக்களின் வலையமைப்பு உறுதியாக இருந்திருக்கிறது. சந்திப்பின்போது, நடேசையரிடம் "தோட்டத் தொழிலாளர்களுக்காக நீங்கள் போராட வேண்டும்." என்று அவர் உற்சாகமூட்டுகிறார். மணிலாலை கண்டு அச்சமுற்ற பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கையில் இருந்தும் அவரை நாடுகடத்துகிறது. அவர் ஒரு குஜராத்தியர்!

அதன்பின், ஏ.ஈ.குணசிங்கவுடன் இணைந்து நடேசையர் இயங்குகிறார். குணசிங்க கடைபிடித்த பேரினவாதக் கொள்கையின் காரணமாக அவரை விட்டு விலகி நடேசையர் தனித்து மலையக மக்களுக்காக களமிறங்குகிறார். அதன்படி, 1931 ஆம் ஆண்டு அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் என்ற தொழிற்சங்கத்தை நிறுவுகிறார். தவிர, 1931 ஹட்டனில் 5000 தோட்டத் தொழிலாளர்களைத் திரட்டி மாபெரும் மேதின நிகழ்வையும் நடத்திக் காட்டுகிறார். தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்காகவும் அவர் தேசநேசன், சுதந்திரன் போன்ற பத்திரிகைகளையும் ஆரம்பிக்கிறார். இது மலையகத்தில் கல்வி கற்றவர்கள் மத்தியில் புதிய கதையாடலை உண்டுபண்ணியது. அத்துடன், 1935 இல் சமசமாஜ கட்சியும் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வளர்ச்சியுற்றதோடு சிவப்புக் கருத்தியல் வேகமாக தோட்டங்களுக்குள் பரவ ஆரம்பித்தது. கோ. நடேசையர் பத்திரிகை வழியாக மக்களுக்கான எழுத்து விதைகளை தூவிக்கொண்டிருக்க, அந்தப் போராட்டத்தில் தன்னையும் ஓர் அங்கமாக அர்ப்பணித்திருந்தார் அவரின் மனைவி மீனாட்சியம்மாள்.

இந்திய மக்களை விரட்ட வேண்டுமென்கிற இலங்கை மந்திரிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து 1940 ஆம் ஆண்டில் மீனாட்சியம்மாள், "இந்தியத் தொழிலாளர்களின் நிலைமை வரவர மிக மோசமாகிக் கொண்டு வருகிறது. அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தீவிரமாக போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. வரும் ஆபத்தினை உணர்த்தி தோட்டத் தொழிலாளர்களிடையே பிரச்சாரம் செய்வது மிக அவசியமாகும். அத்தகைய பிரச்சாரங்கள் பாட்டுக்கள் மூலம் செய்யப்படின், அது பலனளிக்கும். இதனால் பாட்டுக்கள் மூலம் எடுத்துக் கூற முன்வந்துள்ளேன்." என்று எழுதுகிறார்.

அந்தக் காலத்தில் கல்வியறிவு அற்ற சமூகமாகவே மலையக சமூகம் இருந்தது. 1903 ஆம் ஆண்டு இலங்கையில் தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பிரித்தானிய பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அன்றைய தோட்டத் துரைமார் சம்மேளனத்தின் தலைவன் "தோட்டக் கூலிகளுக்கு கல்வி புகட்டாவிட்டால் அதைப்பற்றி அவர்கள் கவலைப்பட போவதில்லை." என்று அகம்பாவமாக பதிலளித்தான். ஆனால், கங்காணிகளினதும்





கணக்குப்பிள்ளைகளினதும் வாரிசுகள் நகரப்புற தனியார் ஆங்கில பாடசாலைகளில் வெள்ளையர்களின் பிள்ளைகளோடு கல்வி கற்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கோ கல்வி எட்டாக்கனியாகவே இருந்தது. அந்தப் பாமர மக்கள் தங்களது வாழ்க்கையின் நல்லது கெட்டது, துன்ப துயரங்கள் எல்லாவற்றையும் வாய்மொழிப் பாடலாகவே பாடித் திரிந்தனர். அதே வழியில் மீனாட்சியம்மாளும் பயணித்தார். ஆனால், துணைக்கு மகாகவி பாரதியின் பாடல்களின் பாணியை வைத்துக் கொண்டார்.

"லங்கா மாதா நம்ம தாய் தான் – இந்த

நாட்டில் எல்லோரும் அவளுக்கு சேய்தான்" என்று நாம் இந்த நாட்டின் பிரஜை அதைப்போலவே ஏனைய இனங்களும் எம்முடைய சகோதர இனங்கள் என்று பாடுகிறார்.

"தொழிலாளர்களே ஒன்றுகூடுங்கள், இந்த நிமிடமே துணிந்து வழியைத் தேடுங்கள்" எனும் அவரது வரிகள் உரிமைகளை வென்றெடுக்க அறைகூவல் விடுப்பதாய் இருக்கிறது.

பிரித்தானிய அரசாங்கத்தால் 1940 இல் இடதுசாரிகள் தடைசெய்யப்படுகிறார்கள். பலர் கைது செய்யப்படுகிறார்கள். "தொழிலாளர் – விவசாயி ஆட்சி அமைவுக்கு முதற்படியாக வெள்ளையர் ஆட்சி தூக்கி எறியப்பட வேண்டும்." என்று சமசமாஜ கட்சி கோசத்தை முன்வைத்தது. ஆனால், அப்போது அவ்வாறு கர்ஜித்த கட்சி தற்போது சந்தர்ப்பவாதத்திற்கு பலியாகி சீர்கெட்டுப் போயிருக்கிறது.

40களில் தோட்டத் தொழிலாளர்கள் இடதுசாரிகளின் பக்கமாக நின்றதனால் அச்சம் கொண்ட டீ.எஸ். சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பெயரளவிலான சுதந்திரம் கிடைத்தவுடனேயே மலையக மக்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறித்தது. அதன்பின்னர் மலையகத்தின் இலக்கியம் அடுத்தக்கட்ட பரிமாணத்தை அடைந்தது. அவ்விலக்கியங்கள் தோட்டத் தொழிலாளர்களின் மனவேதனைகளைப் புலம்பின.

50களில் சீ.வி. வேலுப்பிள்ளை வாக்குரிமை, குடியுரிமை பறிப்பு பற்றி கவிதைகளையும் நாவல்களையும் எழுதுகிறார். மகாக்கவி பாரதி கரிபியன் தீவுகளில் தென்னிந்திய மக்கள் கரும்புக் காட்டில் உழைத்து மடிவதை "கரும்புக் காட்டினிலே..." என்று பாடியது போல, சீ.வி. கரும்புத் தோட்டத்திலே என்று பாடுகிறார்.

தவிர, "ஆழப்புதைந்த தேயிலைச் செடியின்

அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்

ஏழை மகனும் ஏறி மிதித்து

இங்கெவர் வாழவோ தன்னுயிர் தருவன்." என்றும் மலையகத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்துகிறார். முதலாளித்துவ வர்க்கத்தின் நலனுக்காக தொழிலாளர் வர்க்கம் உழைத்து மாய்வதை சுட்டிக்காட்டுகிறார். ஆனால், இவை சோவியத் இலக்கியத்தில் இருந்து வேறுபட்ட எதிர்ப்பிலக்கியமாக மட்டுமே வளர்ந்தது. 1960 க்குப் பிறகு மலையக இலக்கியத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்ட போதிலும் அது மக்களுடைய பாடுகளை பாடியதோடு, எதிர்ப்பிலக்கிய போக்கில் நகர்ந்தது. தீர்வு குறித்த கதையாடல் குறைவாகவே இருந்தது. தமிழ்நாட்டில் இருந்து திராவிட இயக்கத்தின் வழியாக வந்த பகுத்தறிவு கருத்துக்களே பெரிதும் மலையக மக்களை சென்றடைந்தன. அதன்வழியே ஓரளவுக்கு கம்யூனிச சித்தாந்தமும் வந்தது.

என்.எஸ்.எம். ராமையா, சாரல் நாடன், தெளிவத்தை ஜோசப், மரியதாஸ், தமிழோவியன், அந்தனி ஜீவா, மு.சிவலிங்கம், குறிஞ்சித்தென்னவன், குமரன், மல்லிகை சி.குமார் போன்ற எழுத்தாளர்கள் தோற்றம் பெற்றனர். இவர்களால் மலையகத்தில் அதிகார வர்க்கத்திற்கு

எதிரான எதிர்பிலக்கியம் வளர்ந்தது. தெளிவத்தை ஜோசப்பின் நாமிருக்கும் நாடே, மு. சிவலிங்கத்தின் மலைகளின் மக்கள், என்.எஸ்.ராமையாவின் ஒரு கூடை கொழுந்து, மலரன்பனின் கோடிச்சீலை என்பவை தவிர்க்க முடியாத படைப்புகள் ஆகும். மலையக இலக்கிய செழிப்புக்கு பிரதான காரணம் சிறுகதைகள் என்றாலும் மிகையாகாது.

தூரத்துப் பச்சை, வீடற்றவன், மலைக்கொழுந்து, தாயகம், குருதிமலை, எல்லை தாண்டாத அகதிகள், லயத்துச் சிறைகள் போன்ற நாவல்கள் மலையக மக்களின் வரலாற்றைப் பற்றி பேசின.

அதேபோல, கவிதைகளும் மலையகத்தில் பெரும் போராட்டத்தை நடத்தின. "வள நாடாய் மலைநாடு ஆகவேண்டும் – ஆனால்

வாக்குரிமை மொழியுரிமை வர வேண்டும்

கலைவீடாய் மலைநாடு ஆக வேண்டும் – இளம்

காளையர்கள் தன்மானம் கொள்ள வேண்டும்" மேற்கண்ட கவிதை அதற்கு சிறந்த உதாரணம் ஆகும்.

ஆனால், ரஷ்யாவில் ஏற்பட்டதைப் போல பெரும் புரட்சியோ அல்லது ஓரளவேனும் மாற்றமோ மலையகத்தில் ஏற்படாது போனது வருந்தத்தக்க விடயமாகும். அதற்கு தேசிய அரசியலினதும் மலையக பிராந்திய அரசியலினதும் தாக்கம் பிரதான காரணமாகவிருந்தது. வர வர மக்களுக்கான மலையக இலக்கியங்களும் கூட தன்னுடைய வீரியத்தை இழந்து வருகின்றன. மக்கள் வெளிக்கொணர்வதற்கும் சரியான களம் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. உருவாகுகின்ற மலையக படைப்பாளர்களுக்கும் சரியான வழிகாட்டுதல் இல்லை. அவர்கள் ஸ்தாபன மயப்படாமல் சிதறியே கிடக்கின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழர் முற்போக்கு கூட்டணி என்று மலையகத்தில் தலையெடுத்த ஏமாற்று அரசியலும் மலையகத்தை மங்கச் செய்துள்ளது. காணியுரிமை, கல்வியுரிமை, சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்று அத்தியாவசிய உரிமைகள் பல நிறைவேற்றப்படாது வஞ்சிக்கப்பட்ட மக்களாகவே தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். சொற்பமான அளவில் கல்வி கற்று, வியாபாரத்தின் ஊடாக, சினிமா, கலை, இலக்கியத்தின் வழியாக உயர்ந்தவர்கள் இருக்கின்ற போதிலும் பெரும்பாலான இலட்சக் கணக்கான மக்கள் இன்னும் தோட்டப் புறச் சிறையில் இருந்து விடுபட்டுவிடவில்லை.

**ரஷ்யாவில் ஏற்பட்டதைப் போல பெரும் புரட்சியோ அல்லது ஓரளவேனும் மாற்றமோ மலையகத்தில் ஏற்படாது போனது வருந்தத்தக்க விடயமாகும். அதற்கு தேசிய அரசியலினதும் மலையக பிராந்திய அரசியலினதும் தாக்கம் பிரதான காரணமாகவிருந்தது. வர வர மக்களுக்கான மலையக இலக்கியங்களும் கூட தன்னுடைய வீரியத்தை இழந்து வருகின்றன.**

புரட்சிக்கு முன்பாக எவ்வாறான மக்கள் கூட்டம் ரஷ்யாவில் வாழ்ந்ததோ அதற்கொத்த நிலையிலேயே இன்று தோட்டப்புறங்கள் இருக்கின்றன. இந்தநிலை மாறவேண்டும்.

"வறுமை, பசி, பிணி – தங்களது உழைப்புக்குப் பிரதியாக, மக்களுக்கு இவைதான் கிடைக்கின்றன. சகல விஷயங்களுமே நமக்கு எதிராக இயங்குகின்றன. நமது வாழ்நாளெல்லாம், ஒவ்வொரு நாளும், நமது கடைசி மூச்சுவரை, இறுதி பலத்தையும் நமது உழைப்புக்காக அர்ப்பணம் செய்வதால் எப்போதும் நாம் அழுக்கடைந்து அவர்களால் ஏமாற்றவும் படுகிறோம். நாம் பெற வேண்டிய இன்பத்தையும், நலன்களையும் மற்றவர்கள் அறுவடை செய்து அனுபவிக்கிறார்கள். சங்கிலியால் கட்டிப்போடப்பட்ட நாய் மாதிரி நம்மை அவர்கள் அறியாமையில் ஆழ்த்தியுள்ளார்கள். நமக்கு எதுவுமே தெரிவதில்லை. ஒவ்வொன்றுக்கும் பயப்படுகிறோம். நாம் எதையும் தெரிந்து கொள்ளவே அஞ்சுகிறோம். நமது வாழ்க்கையே விடியாத இருள் நிறைந்த இரவாகப் போய்விட்டது." என்று மக்சீம் கார்க்கியின் தாய் புலம்புவது மலையக சமூகத்திற்காகவும் தான் என்பதை அறிவோம்.

மலையக இலக்கியத்தின் ஊடாகவும் ஒரு பெரும் போராட்டத்தை செய்ய இளம் எழுத்தாளர்களே திடசங்கற்பம் கொள்வோம். அதன்வழி சாதாரண மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டுவோம். குறுந்தேசியவாத அரசியலில் இருந்து விடுபட்டு தேசிய ஒற்றுமையை நோக்கி மலையக சமூகம் நகர பாதையமைப்போம். அப்பாதையில் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதோடு, மக்களுக்கான அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதன் ஊடாக கௌரவமான பிரஜையாக நமது மக்கள் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழ வழிசெய்ய வேண்டும். அதற்காக செயற்படுவோம். வென்றுகாட்டுவோம்.

நன்றி!

# மலையக மக்களும் அவர்தம் அரசியலும்



**எம். ராமதாஸ்**
**இறம்பொடை**

மலையக அரிசியல் மெய்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான ஒரு ஆய்வு. இன்றைய அரசியல்வாதிகளும் சரி, அரசியல் அறியாதோரும் சரி வரலாற்றை புனைந்துவிடுவதில் வல்லவர்களாகவும் அறியாமையால் அடி தெரியாது நுனியை பார்த்து மேய்ந்துப்போகிறவர்களாகவும் இருந்து விடுகின்றார்கள். எது எவ்வாறெனினும் பாதிக்கப்படுவது என்னவோ அப்பாவி ஜனங்கள் தான்.

வியக்கதக்கதொரு எண்ணிப்பார்க்க முடியாத வரலாலாற்றை கொண்ட நூற்றாண்டுகள் தாண்டிய மலையக சாம்ராச்சியத்தில் அரசியலும் பல துணுக்குகளை கொண்டது. இதை ஆராய்வது காலத்தின் தேவை என்று கூட சொல்லிட இயலும்.

## இங்கு சொல்லப்படும் அனைத்தும் புணைந்தவை அல்ல நிகழ்தவையே

மலையக மக்கள் இலங்கையில் காலடி எடுத்து வைத்து வருகின்ற 2024 ஆம் ஆண்டுடன் கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுகள் கடந்து விடுகின்றன. ஆனால், மலையக கட்சிகள் குழுக்கள் அல்லது சங்கங்கள் ஏதாவதொன்றுக்கு ஒரு நூறு வருட வரலாறாவது இருக்குமா என்றால் நிச்சயமாக இல்லை என்ற பதிலயே வரலாறு எம்மை பார்த்து சொல்லும்.

அதற்கு எமது வரலாற்றை அரசியல் ரீதியான ஒரு நோக்கத்தோடு ஆராய்வது அவசியமாகிறது. இதற்கு காலங்கள் கடந்து நூற்றாண்டுகள் தாண்டி பின்னோக்கி சென்று முன்னேறுவோம்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலப்பகுதிகளில்

இந்தியாவில் சுதந்திர தாகங்கள் பேரெழுச்சி பெற்று காந்தியடிகளின் அஹிம்சை சத்தியாக்கிரகங்கள் வெள்ளையர்களின் காதுகளை தொல்லை செய்ய ஆரம்பித்த காலங்களது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங் போன்ற சுதந்திர வீரர்களின் வீரங்கள் பூகம்பங்களாக பொங்கி எழுந்த வேளைகளில் வெள்ளையர்களை வெளியேற்ற அவர்கள் காட்டிய முனைப்பில் சிறுபங்கு கூட தாயகத்தில் இருந்து தொழில் அகதிகளாக ஒருபக்கம் வெளியேற்ற பட்டுக்கொண்டிருந்த தாய் நாட்டு மக்களின் பக்கம் திரும்பவில்லை.

தேசத்தின் ஒவ்வொரு கடைக்கோடி பகுதிகளில் இருந்தும் வெள்ளையர்களினால் அவர்களின் குடியேற்ற பிரதேசங்களுக்கு சடப்பொருட்களை போல ஏற்றுமதி செய்யப்பட்ட ஏழை தொழிலாளர்களின் நிலைமை. சுதந்திர இந்தியாவின் கரைபடிந்த ஒரு விடயமென்றால் அது எவ்விதத்திலும் தவறில்லை.

அதிலே இலங்கையை பொருத்தமட்டில் நூற்றாண்டுகள் கடந்து அதாவது 1609களில் சிறிய எண்ணிக்கையிலான இந்திய தொழிலாளர் இடப்பெயர்வு என ஆரம்பித்து 1824 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆங்கிலேயர்களின் சிலோன் நாட்டிலே அவர்களின் இதயமாக காணப்பட்ட கோப்பி செய்கைக்கான தொழிலாளர் இறக்குமதி எனவும் அதற்கு பின் தோன்றிய தேயிலை இறப்பர் போன்ற பெருந்தோட்ட தொழில் துறையின் தொழிலாளர் இறக்குமதி என்றும், அப்பாவி மக்கள் பலதரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியில் இடம்பெயர்ந்தார்கள். இது 1939 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தொழிலாளர்கள் செல்வது முழுமையாக தடைசெய்யப்படும் வரை நீளத்தான் செய்தது. புலம்பெயர்ந்த மக்களினதும் அதில் மண்ணோடு மண்ணாக போனவர்களினதும் எண்ணிக்கை கணக்கில் அடங்காதவை.

இந்த தியாகங்கள் இந்திய சுதந்திர போராட்டங்களையும் தாண்டியதொரு தேசத்திற்கான மிகப்பெரும் காணிக்கைதான். இது இன்றளவும் கூட தேசத்தவர்களால் புரிந்துகொள்ளப்படாமை நரக வேதனையே.

அதிலும் சிலோன் தாண்டிய மொரிசியஸ், மலேசியா நாடுகளுக்கு சென்ற இந்திய தொழிலாளர்களின் துயரங்கள் அன்றைய ஆபிரிக்க அடிமை வாழ்வை ஒத்திருந்ததை அறியலாம். மலத்தை உண்ணச்செய்து தண்டனை வழங்கிய துயரங்களை அன்றைய ஆங்கிலேய சர்கார் நிகழ்த்தியிருந்தமை உலக மேடையில் இன்னும் ஏற்றப்படாத ஊமை நாடகங்களாகவே கணக்கில் கிடக்கின்றன.

19 ஆம் நூற்றாண்டு சிலோன் தேசத்தில் இந்திய தமிழ் தொழிலாளர்களின் வருகை மிகையாக காணப்படினும் அவர்கள் ஒருபோதும் உணவு பவுன் காசு தவிர்ந்த அரசியல் புரட்சி செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லை.

துரைமார்களினாலும் கங்காணிகளாளும் கொடூரமாக துன்பம் செய்யப்பட்டே அவர்களது வாழ்க்கை கழிந்துக்கொண்டிருந்தது. லயன் முறைகள் கிட்டத்தட்ட 1954 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே தோற்றம் காண ஆரம்பித்தன. அதுநாள் வரையில் களிமண் குடிசைகளில் பாதுகாப்பற்ற நிலையில் மழைக்கும் வெயிலுக்கும் தாக்குப்பிடிக்க முடியாதவர்களாய் மரணத்தின் விளிம்புகளில் அவர்களது வாழ்க்கை கிடந்தது. அதாவது ஆரம்பத்தில் கூலி அகதிகளாக நாட்டினை துறந்து தென்னிந்தியாவின் சேலம், மதுரை, கோவை போன்ற பல்வேறு பிரதேசங்களில் இருந்து கால்நடையாகவும் பாதுகாப்பற்ற படகு கப்பல்களின் மூலமாகவும் மாந்தை துறையை வந்தடைந்த மக்கள் அங்கிருந்து மாத்தளை வழியாக மலைநாட்டு தோட்டங்களுக்கு வரும் வரையில் அனுபவித்த அதே துயரங்கள் அதே மரண சம்பவங்கள் தோட்டங்களில் குடியேறிய பின்பும் தொடரவே செய்தன. அந்த நேரத்தில் அவர்களது முழுமையான தேவையாக காணப்பட்டது உணவும் சொற்ப பணமும் மட்டுமே. இதனை கூட முழுமையாக பெறாது அவர்கள் அலைக்கழிக்கப்பட்டு வஞ்சிக்கபட்டு கொடூர தண்டணைகளாளும் குரோதங்களாளும் மண்ணாகி போனதிலேயே அவர்களது ஏழு தசப்தங்கள் கடந்ததெனலாம்.

அன்றைய சிலோனில் குரு-மெக்கலம் யாப்பு சீர்திருத்தத்தின்படி 1910 ஆம் ஆண்டுகளை தொடர்ந்து உறுப்பினராக இருந்த தமிழ் அரசியல்வாதிகளின்

**சிலோன் தாண்டிய மொரிசியஸ், மலேசியா நாடுகளுக்கு சென்ற இந்திய தொழிலாளர்களின் துயரங்கள் அன்றைய ஆபிரிக்க அடிமை வாழ்வை ஒத்திருந்ததை அறியலாம். மலத்தை உண்ணச்செய்து தண்டனை வழங்கிய துயரங்களை அன்றைய ஆங்கிலேய சர்கார் நிகழ்த்தியிருந்தமை உலக மேடையில் இன்னும் ஏற்றப்படாத ஊமை நாடகங்களாகவே கணக்கில் கிடக்கின்றன.**

**அன்றைய சிலோனில் குரு-மெக்கலம் யாப்பு சீர்திருத்தத்தின்படி 1910 ஆம் ஆண்டுகளை தொடர்ந்து உறுப்பினராக இருந்த தமிழ் அரசியல்வாதிகளின் அரசியல் ரீதியான பார்வையில் கூட மலையக இந்திய தொழிலாளர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாகவே சித்தரிக்கப்பட்டிருந்தது எவராலும் மறுக்க முடியாத ஒரு விடயமாகும். மலையக மக்களின் அரசியல் ரீதியான பங்கென்றால் அது ஆங்கிலேய ஆட்சியில் 1845 ஆம் ஆண்டின் தொடக்க காலப்பகுதிகளில் அவர்களுக்கென ஆங்கிலேய குடியேற்றவாத அரசு பிரத்தியேகமாக தயார் செய்த தொழிலாளர் சட்டங்களை மட்டுமே குறிப்பிட முடியும்.**

அரசியல் ரீதியான பார்வையில் கூட மலையக இந்திய தொழிலாளர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாகவே சித்தரிக்கப்பட்டிருந்தது எவராலும் மறுக்க முடியாத ஒரு விடயமாகும். மலையக மக்களின் அரசியல் ரீதியான பங்கென்றால் அது ஆங்கிலேய ஆட்சியில் 1845 ஆம் ஆண்டின் தொடக்க காலப்பகுதிகளில் அவர்களுக்கென ஆங்கிலேய குடியேற்றவாத அரசு பிரத்தியேகமாக தயார் செய்த தொழிலாளர் சட்டங்களை மட்டுமே குறிப்பிட முடியும். அதுவும் சட்டங்கள் என்பதை விட அடிமை சாசனங்கள் என குறிப்பிடுவதே மிக பொருத்தமாக இருக்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கிட்டத்தட்ட எண்பது வருடங்கள் சிலோன் தேசம் கண்ட மலையக தமிழர்கள் அரசியல் ரீதியில் கண்மூடிய மௌனிகளாகவே இருந்தார்கள்.

ஆங்கிலேய சர்காரின் சிலோன் தேசத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டு கண்ட மலையக மக்கள் அரசியல் ரீதியான எவ்வித பாரிய பங்களிப்பையும் கொண்டிருக்கவில்லை. அவர்களுக்கென்ற எந்த ஒரு தலைமையோ அல்லது வழிகாட்டியோ ஆதரவாளர்களோ இருக்கவே இல்லை. இப்படியே கோப்பி யுகம் நிறைவடைய அடுத்து வந்த இருபதாம் நூற்றாண்டோடு சேர்ந்த தேயிலை யுகம் தான் மலையக மக்களின் ஓரளவான அரசியல் பங்கேற்பிற்கு வித்திட்டதெனலாம்.

## அரச சபையில் இலங்கையர்

இலங்கையில் அரசியல் யாப்பு என்ற ஒன்றை அறிமுகப்படுத்தி யாப்பு சீர்த்திருத்தங்களுக்கு அமைய "உத்தியோகபூர்வ மற்றும் உத்தியோக பற்றற்ற" என்ற ரீதியிலும் இலங்கையில் இருந்து சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். அதிலும் ஆரம்பம் முதலே சேர் பொன் இராமநாதன், குணசிங்க, டி.எஸ், சேனநாயக்க, பண்டாரநாயக்க போன்றவர்களின் செயற்பாடுகளும் பங்குப்பற்றலும் மிகையாகவே காணப்பட்டது. பின்னர் பிரதேச ரீதியாகவும், 1910 குரு-மெக்கலம் மற்றும் தற்காலிக மனிங் யாப்பு போன்ற சீர்திருத்தங்கள் மூலமாகவும் இலங்கையர்கள் அரசியல் பங்களிப்பை பெற்றிருந்தார்கள்.

ஆனாலும் அவர்களின் எண்ண ஓட்டங்களில் இந்திய தொழிலாளர்களாக இலங்கையில் வசிக்கும் மக்களானவர்கள் இலங்கை பூர்விக மக்களுக்கு ஆபத்து விளைக்கும் அல்லது இருப்பினை கேள்விக்குறியாக்கும் ஒரு பிரிவினர்களாகவேவே கருதியிருந்தனர். இதனால் இலங்கை வாழ் இந்திய தொழிலாளர்களின் உரிமைகளும் வாழ்வும் தீவிரமாக நசுக்கப்பட்டது. இத்தகைய நிலைமைக்கு இலங்கைவாழ் உறுப்பினர்களாக இருந்த இத்தகைய அரசியல் தலைவர்களும் மறைமுக காரணமென சொல்லலாம்.

## தோட்டத்திற்குள் அடக்குமுறைகள்

இன்றைய காலப்பகுதியை போல இலங்கையின் தேயிலை தோட்டப்பகுதிகளுக்கு அன்றைய காலத்தில் இலகுவாக நுழைந்திட இயலாது. தேயிலை தோட்டத்தில் தொழில் புரியும் தொழிலாளர்கள் வெளியிடங்களுக்கு செல்வது மற்றும் வெளியில் இருந்து வந்து அவர்களை சந்தித்து செல்வது ஆகியன அத்தகைய இலகுவான காரியங்கள் இல்லை. தோட்ட நிர்வாகத்தாலும் கங்காணி மற்றும் துரைமார்களாளும் உண்ணிப்பாக கவனிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் லயத்து காம்பராக்களில் ஜன்னல் ஒன்றை மாற்றிவைக்க வேண்டும் என்றாலும் அல்லது வெளியே "வெந்நீர் வைக்க" (குளிப்பதற்காக) "தண்ணீர்

**லயத்து காம்பராக்களில் ஜன்னல் ஒன்றை மாற்றிவைக்க வேண்டும் என்றாலும் அல்லது வெளியே "வெந்நீர் வைக்க" (குளிப்பதற்காக) "தண்ணீர் காம்புறா" (குளியலறை) கட்டுவதற்காக "காட்டு வரிச்சி" (கம்புகள்) வெட்டவும் கூட அதிக நிபந்தனைகளை அவர்கள் கொண்டிருந்தார்கள்.**

காம்புறா" (குளியலறை) கட்டுவதற்காக "காட்டு வரிச்சி" (கம்புகள்) வெட்டவும் கூட அதிக நிபந்தனைகளை அவர்கள் கொண்டிருந்தார்கள். அவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் சற்றும் சிதைந்து விடாமல் அடக்கப்பட்டிருந்தனர். "பற்றுச்சீட்டு துண்டு" முறை மூலமாக திறந்த வெளியில் அவர்களை சிறைவைத்திருந்தது அன்றைய ஆங்கிலேய காலனித்துவ அரசு.

## வீட்டுக்கு தேவையான அரிசி தேங்காய்

கள்ளுக்கடை வசதிகள் போன்றனவும் அருகில் இருந்த பெட்டிக்கடைகளில் கிடைப்பதால் அவர்களுக்கு வெளியில் செல்லும் எத்தகைய தேவையும் ஏற்படவில்லை. சர்காரும் அதை விரும்பவில்லை. இந்த முறையற்ற சிறைவைப்பு கூட அவர்களை புரட்சியின்பால் செல்ல தூண்டவில்லை என கொள்ளலாம். அவர்களுக்கு ஏற்பட்ட எல்லா பிரச்சினைகளையும் தீர்துவைப்பவர்களாக கங்காணியும் துரையும் காணப்பட்டார்கள். கங்காணிச் சொல்வதே நீதி. சிற்சில பிரச்சினைகள் துரைவரை போனாலும் துரை பெரும்பாலும் கங்காணியை பகைத்துக்கொள்ள விரும்பவதில்லை.

இதனால் கொலைகளும் கூட தற்கொலைகள் ஆக்கப்பட்டது. அத்துமீறல்களும் அடக்குமுறையும் உச்சத்தில் நின்றது.

## கோதண்டராமர் நடேசஐயர்

இருண்டு கிடந்த அன்றைய தேயிலைக்காட்டு பகுதியில் விடிவெள்ளியாய் வீரத்தோடு எழுந்து வந்தார் ஐயர். இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டத்திலே பிறந்து கணக்கியலிலும் பத்திரிகை மற்றும் பதிப்பியல் துறையிலும் தமிழ், ஆங்கில புலமையிலும் சிறந்து விளங்கி ஆங்கிலேயர்கள் வியாபாரத்தில் ஆதிக்கம் செலுத்திய அந்தக் காலப்பகுதியிலேயே தமிழரும் அதில் சிறந்திட வேண்டும் என்று போராடி அதில் வெற்றியும் கண்டார். வியாபார நோக்கில் நெல் மற்றும் புடவை வியாபார அமைப்புக்களை அங்கு நிறுவி அதில் ஒரு கிளையை கொழும்பில் ஸ்தாபிக்க வேண்டும் என்று 1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் காலெடுத்து வைத்தார் நடேசஐயர்.

இக்காலப்பகுதியிலேயே இலங்கையில் தேயிலை செடிகளினூடே தசாப்தம் தாண்டி அடிமைகளாய் இருக்கும் மலையக தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய நிலவரம் தெரியவருகிறது. இந்திய மக்கள் நாடு கடந்து உழைப்பாளர்களாய் அடிமை படுத்தப்பட்டிருப்பதை அறிந்து வேதனை கரிசனையும் கொண்டு அவர்களின் நிலைமையில் பங்கெடுக்க ஆயத்தமானார்.

இக்காலத்தில் தோட்டங்களுக்குள் வெளியால் நுழைவது ஒன்றும் அவ்வளவு எளிதானதல்ல. தோட்ட தொழிலாளர்களின் அத்தனை தேவைகளும் தோட்டங்களுக்குள்ளேயே சுருக்கி வைத்திருப்பதை தோட்ட நிர்வாகம் அவ்வப்போது உறுதி செய்து கொண்டே இருந்தது. அதனையும் தாண்டி தோட்டங்களுக்குள் உள்நுழைபவர்களாக பெட்டனிகாரர்களும் புடவை வியாபாரிகளும் மட்டுமே இருந்தனர்.

**நடேசஐயர் அவர்கள் புடவை வியாபாரி வேடமிட்டு மலையக தோட்ட பகுதிகளுக்குல் காலடி எடுத்து வைத்தார். அன்றிலிருந்து அவர்களின் வேதனைகளில் அக்கறை கொண்டு அவர்களின் சுகதுக்கங்களை பகிரங்கபடுத்த எத்தனித்தார். அதற்கு அவர் கையிலெடுத்த மிகப்பெரும் அஹிம்சை ஆயுதமாக பத்திரிகையும் எழுத்தும் காணப்பட்டது. தேசநேசன் என்ற பத்திரிகையை கொழும்பில் துவங்கி தோட்ட தொழிலாளர்கள் படும் துன்ப துயரங்களை விளங்கி எழுதியதோடு பரப்பவும் செய்தார்.**

இதனை ஒரு கருவியாக கொண்டு நடேசஐயர் அவர்கள் புடவை வியாபாரி வேடமிட்டு மலையக தோட்ட பகுதிகளுக்குல் காலடி எடுத்து வைத்தார். அன்றிலிருந்து அவர்களின் வேதனைகளில் அக்கறை கொண்டு அவர்களின் சுகதுக்கங்களை பகிரங்கபடுத்த எத்தனித்தார். அதற்கு அவர் கையிலெடுத்த மிகப்பெரும் அஹிம்சை ஆயுதமாக பத்திரிகையும் எழுத்தும் காணப்பட்டது. தேசநேசன் என்ற பத்திரிகையை கொழும்பில் துவங்கி தோட்ட தொழிலாளர்கள் படும் துன்ப துயரங்களை விளங்கி எழுதியதோடு பரப்பவும் செய்தார்.

தேயிலைச் செடிகளைத் தாண்டி தோட்ட தொழிலாளர்களின் அத்தனை தேவைகளும் பிரச்சினைகளும் பகிரங்க படுத்தப்பட்டது. நாடேசஐயர் என்ற தனிமனித சக்தி என்றால் அது ஒருபோதும் மிகையில்லை. தேசநேசன் என்ற பத்திரிகையை

தொடங்கி சொல்லப்படாத பலதரப்பட்ட தொழிலாளர் விடயங்களை உலகுக்கு காண்பித்தார். பாரதியாரின் கருத்துக்களில் கவிதைகளில் ஈர்க்கப்பெற்ற ஐயர் அவரது பாடல்களினூடாக பலதரப்பட்ட விழிப்புணர்வு விடயங்களை மேற்கொண்டார். மலையக தொழிலாளர்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்வும் அரசியல் விடயங்களும் ஊற்றெடுக்க நடேசஐயரின் பங்கினை சொல்லில் அடக்கிட இயலாது இவரது எழுச்சியை கண்டு ஆங்கிலேய சர்கார் இவரை நாடு கடத்திட கூட எண்ணியது. அதற்கெல்லாம் இவரது வீரமான பேச்சும் எழுத்தாற்றலும் வலுலாக துணைநின்றது எனலாம்.

முதன்முதலில் மலையக மக்கள் சார்பில் அரசாங்க சபையில் அங்கத்தவரானவர் நடேச ஐயர் அவர்களே. இதற்கு பின்தான் மலையகத்தில் வீரம், உரிமை போன்றன பேசப்பட்டன. முல்லோயா கோவிந்தன் அவர்கள் மலையகத்தின் முதல் தியாக விதையாகி வீரத்தை விதைத்தார். தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் இலங்கை இந்திய காங்கிரஸின் உதயம் மேலும் மக்கள் அரசியலில் ஈடுபட காரணமாகியது. அதனை தொடர்ந்து பலதரப்பட்ட அரசியல் பிரிவினைகளால், பிரச்சினைகளால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உதயமாகி பல தலைவர்கள் உருவாக்கினார்கள். தொண்டமான் என்ற நாமம் மக்கள் மத்தியில் அறிமுகம் பெற்று அழிக்க முடியாத அம்சமாகி அரசியலில் ஓங்கி நின்றது. இங்குதான் ஓரவஞ்சனைகளும் இறுமாப்புகளும் எழுச்சிப்பெற்று பல்வேறு கட்சிகள் தொழிற்சாலைகள் உருவாகியது. இதில் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன எழுச்சிப் பாதையை நோக்கி செல்லலாயின. எழுத்தாளர்களும் சமுக சிந்தனைவாதிகளும் அரசியலில் உட்சென்று மலையக அரசியலை வேறு ஒரு பாங்கிற்கு கொண்டு சென்றனர்.

பின்னர் நாடற்றோர் சட்டத்தில் அனைத்தும் பழிகாடாகி மீண்டுமோர் புதிய பாதை தோற்றுவிக்கப்பட்டு அரசியல் அரங்கில் இன்று வரை மலையக அரசியல் காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறது.

எது எப்படியாயினும் நடேசஐயரை போன்று ஒரு அரசியல் ஆளுமையை சமுக சிந்தனையாளரை இன்று வரை மலையகம் காணவில்லை என்பது கசப்பான உண்மை. அவரது அரசியல் எதிர்பார்ப்பின் நோக்கமும் இன்று தவிடு பொடியாகியே கிடக்கிறது எனலாம்.

மக்களுக்காக அரசியல் என்ற நிலைமாறி பிழைப்புக்காக அரசியல் என்ற நிலையிலேயே மலையக அரசியல் இன்று பரிணாமம் காண்கிறது.

**ஆங்கிலேயருக்கு எதிரான கண்டிய கிளர்ச்சியின் போதுக்கூட ஆங்கிலேயர் தங்களிடம் போர் வீரர்களாக கூலித்தொழிலாளிளாளருடன் வெகுசிலரே இருக்கின்றார்கள் எனக்கூறி தலைமையிடம் ஆயுதங்கள், படைகள் பெற்ற வரலாறும் இல்லாமல் இல்லை. இவ்வாறு கண்டிய கிளர்ச்சியில் ஆங்கிலேயர் பக்கமிருந்த கூலிகள் தாம் எதற்காக, யாருக்காக போராடுகிறோம் என்று அறிந்திடாமல் போராடியது அறியாமையின் உச்சம் தான். இதுதான் தொழிலென்று அல்லாமல் எதையும் செய்பவர்களாகவே ஆரம்பகால கூலித்தொழிலாளர்கள் காணப்பட்டனர்.**

## தேசிய அரசியல் நீரோட்டத்தில் மலையகம்

கோப்பிக்காலம் கடந்து தேயிலை யுகம் பிறந்த பின் குறிப்பாக சுமார் 1907களில் தான் இவர்களின் மத்தியில் சற்று எதிர்த்து கேள்வி கேட்கும் ஒரு திடசங்கற்பம் பிறந்தது. அது வரையில் இவர்களின் நிலை அடிமைத்தனத்தினது கடைகோடியில் இருந்தது என்று சொன்னால் அதில் தவறேதும் இல்லை. கங்காணிமார்களாளும் துரைகளாளும் வஞ்சனை செய்யப்பட்டு உழைப்பு சுரண்டல் இடம்பெற்றாலும் அவ்வப்போது அவர்களால் கிடைக்கும் சொற்ப சலுகைகளுக்காய் மயங்கிப்போன அவலநிலை இருக்கத்தான் செய்தது ஒருபக்கம் அந்த முதலாளித்துவம் கொடூர அரக்கனாக இவர்களின் கண்களுக்கு தென்பட்டாலும் அவர்களே பின்னாலில் சலுகைகள் வழங்கும் தங்களை காக்கும் ஒரு இரட்சகராகவும் தோன்றினார்கள். இந்த நிலைமை மக்களின் அறியாமையும் வெகுளித்தனமுமேயன்றி வேறொன்றும் இல்லை.

உதாரணமாக ஆங்கிலேயருக்கு எதிரான கண்டிய கிளர்ச்சியின் போதுக்கூட ஆங்கிலேயர் தங்களிடம் போர் வீரர்களாக கூலித்தொழிலாளிளாளருடன் வெகுசிலரே இருக்கின்றார்கள் எனக்கூறி தலைமையிடம் ஆயுதங்கள், படைகள் பெற்ற வரலாறும் இல்லாமல் இல்லை.

**சுதந்திர காலப்பகுதியில் இந்த மலையக மக்களின் அந்த அடிமை சாசனம் துரைமார்களில் இருந்து படிப்படியாக அரசியல்வாதிகளின் கெடுபிடி மிக்க கைகளுக்கு மாற்றம் பெறுகிறது. அவர்களின் பிரச்சினைகளே அவர்களை சூழ்ந்து நிற்கின்றன. மறந்தும் கூட மலையகம் தாண்டி ஒரு தேசிய அரசியல் ஓடையில் சுயேட்சையாக பரிணமிக்கவும் இல்லை அவர்களை அவர்கள் நம்பிவந்த அரசியல் தலைமைகளும் பரிணமிக்க விடவுமில்லை. மக்களின் பிரச்சினைக்கள் தீர்ந்தால் இங்கு அரசியல் செய்வது கடினம் என்ற தீர்க்கதரிசனம் கொண்டவர்கள் இந்த அரசியல்வாதிகள். சொந்த பிரச்சினைகள் சூழ்ந்திருக்கும் போது எங்கே தேசிய பிரச்சினை கண்முன் தோன்றும். இவர்களின் பிரச்சினைகள் யாவும் அன்றுதொட்டே தொழிற்சங்கம், சம்பளம், வேலை, கொழுந்து, தேயிலை, லயம் என்று அனைத்தும் சுருக்கப்பட்டு கிடக்கிறது.**

இவ்வாறு கண்டிய கிளர்ச்சியில் ஆங்கிலேயர் பக்கமிருந்த கூலிகள் தாம் எதற்காக, யாருக்காக போராடுகிறோம் என்று அறிந்திடாமல் போராடியது அறியாமையின் உச்சம் தான். இதுதான் தொழிலென்று அல்லாமல் எதையும் செய்பவர்களாகவே ஆரம்பகால கூலித்தொழிலாளர்கள் காணப்பட்டனர்.

இலங்கை அரசியலில் சோல்பரி யாப்பின் பின்னரான பகுதியளவு சுதந்திரத்திலும் கூட மலையக மக்கள் கண்டு கொள்ளப்படாதவர்களாக வழிகாட்டியற்றவொரு வந்தேறு குடிகளாகவே காலம் அவர்களை கணித்திருந்தது. இதுவே இலங்கை தமிழரான அன்றைய சட்டவாக்க மன்றத்தில் படித்த இலங்கையர் சார்பில் உறுப்பினராக இருந்த சேர் பொன் இராமநாதன் அவர்கள் இந்தியவம்சாவளி தமிழராக அவர்களை பெயர் குறிப்பிடுவதும் காரணமாக இருந்தது. அந்த பெயர் காலங்கள் தாண்டி நிலைத்து நிற்பதுவும் காலத்தின் கொடுமைதான்.

அதற்கு பின்னாளான சுதந்திர காலப்பகுதியில் இந்த மலையக மக்களின் அந்த அடிமை சாசனம் துரைமார்களில் இருந்து படிப்படியாக அரசியல்வாதிகளின் கெடுபிடி மிக்க கைகளுக்கு மாற்றம் பெறுகிறது. அவர்களின் பிரச்சினைகளே அவர்களை சூழ்ந்து நிற்கின்றன. மறந்தும் கூட மலையகம் தாண்டி ஒரு தேசிய அரசியல் ஓடையில் சுயேட்சையாக பரிணமிக்கவும் இல்லை அவர்களை அவர்கள் நம்பிவந்த அரசியல் தலைமைகளும் பரிணமிக்க விடவுமில்லை.

மக்களின் பிரச்சினைக்கள் தீர்ந்தால் இங்கு அரசியல் செய்வது கடினம் என்ற தீர்க்கதரிசனம் கொண்டவர்கள் இந்த அரசியல்வாதிகள். சொந்த பிரச்சினைகள் சூழ்ந்திருக்கும் போது எங்கே தேசிய பிரச்சினை கண்முன் தோன்றும். இவர்களின் பிரச்சினைகள் யாவும் அன்றுதொட்டே தொழிற்சங்கம், சம்பளம், வேலை, கொழுந்து, தேயிலை, லயம் என்று அனைத்தும் சுருக்கப்பட்டு கிடக்கிறது.

ஒருவகையில் இதனை ஆழமாக நோக்குமிடத்து இரு நூற்றாண்டுகளுக்கு முன் இங்கு வந்து குடியேறியபோது இருந்த அந்த தானுண்டு தன் வீடுண்டு தன் பாடென்ற நிலை இன்றும் முழுமையாக மாறவில்லை. இந்த மனப்போக்கே தேசிய நதியில் இன்னும் இந்த பிரதேச ஆறு முழுதாய் சஞ்சாரம் செய்ய காரணமாக இருக்கிறது. இன்றும் கூட படித்த விழிப்புணர்வு கொண்ட இளைஞர்களால் எவ்வளவோ போராட்டங்கள் அரசியல் பங்கேட்புகள் ஆகியன முன்னேற்பாடோடு வளம் வருகின்றபோதும் தொடர்ந்தும் பசப்பு வார்த்தைகளை நம்பியே வாக்களித்து மோசம் போகும் ஜனங்களாக மலையக மக்கள் இருப்பது மனவேதனை தான்.

இதற்கு தீர்வு வேண்டுமெனில் சுயச்சிந்தனை இங்கு அவசியமாகிறது. சலுகைகளை புறக்கணித்து எதிர்காலத்திற்காய் சிந்தனை செய்யும் சீர்திருத்த வாதபோக்கு தேவைப்படுகிறது. தேசிய ரீதியான சிந்தனைகள் வலுப்பெற வேண்டும். கூலிக்காக மாரடிக்கும் தனது உழைப்பிற்கான கூலியை ஒப்பந்தங்கள் தீர்மானம் செய்யும் அவலம் மாற வேண்டும். தேசிய அரசியல் புரட்சியில் மலையகம் சங்கமிக்க ஒவ்வொரு மனமும் மனதளவில் உணர்சியோடு கிளர்ந்தெழ வேண்டும். மக்களின் புரட்சியால் மட்டுமே அது சாத்தியம்.

இவ்வாறு இல்லை எனில் நூற்றாண்டு கடந்து சகாப்தம் பிறந்தாலும் நாம் பிரதேசத்தோடு சுருங்கியேதான் இருப்போம். புத்தெழுச்சியும் புதிய சிந்தனையும் மலையக மக்கள் ஒவ்வொருவரின் மத்தியில் எழவேண்டியது காலத்தின் தேவையாகும்.

# உன்னால் முடியும்

மலையகமே – நீ
தேச வரைபடத்தின் நேர்கோடு
வழிதெரியாத
வாணிபங்களுக்கும்
வழிகாட்டிய
திசைகாட்டி – நீ
நிமிர்ந்துதான்
நிற்கிறாய்
பார்வைக்கு?,
உண்மையில்
கூனிவிட்டாய்
ஒவ்வொருவரும்
மாறி மாறி
குட்டியதால்.

மலையகமே – நீ
நேரத்திற்கு
தேசாபிமானி
அதனால்த்தான்
வெலிக்கடை
சிறையில்
இறுதி வாசகமாக
தூக்கு மேடையிலும்
ஒலித்தது
“உலகத் தொழிலாளர்களின்
விடுதலை” என்ற வாசகம்.

இன்று நீயோ
கைகட்டி
வாய்மூடி
மௌனியாக,
கையேந்தியாக,
அநாதையாக
நிற்கிறாயே
ஒவ்வொருவனின்
கால்களின் கீழ்
மண்டியிட்டு.

மலையகமே – நீ
உடுத்திக்கொள்
நிமிர்ந்து நில்.

நீ தேசாபிமானிதான்
உனக்குள்
நடேசைய்யர்
வீராசாமி
கோவிந்தன்
சிவனு லெட்சுமணன்
ஏன்
வெள்ளையனும் கூட
உறைந்து கிடக்கையில்
மலையகமே – நீ
நிமிர்ந்து நில்.

மலையகமே – நீ
இப்போது
அநாதை தேசம்
நீ செதுக்கிய
தேயிலை, இறப்பர்
தேசம்
சிரச்சேதம்
செய்யப்பட்டு – இன்று
பன்னாட்டுக் கோரப்பிடியில்.

நீ வாழ்ந்த
நீட்ட லயம்
குட்டையாகி
விற்பனை
குண்டுச்சட்டியில்
சூடேறுகிறது.
உன் எதிர்காலம்
எலும்பும் தோலுமாய்
பரட்டைத் தலையுடன்
தெருவில்?

மலையகமே
உன்னை நீ
உடுத்திக்கொள்
உலகுக்கு
வழிகாட்ட
உன்னால் முடியும்.

கிட்ணன் செல்வராஜ்